சிலம்பொலி

புலவர். கா. கோவிந்தன்

சிலம்பொலி

புலவர் கா. கோவிந்தன்

எழிலகம்
திருவத்திபுரம்
சம்புவராயர் மாவட்டம்

முதற் பதிப்பு: ஏப்ரல், 90
உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 12-00

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.

பதிப்புரை

சங்கத் தமிழ் நூல்கள் என்ற சிறப்பினுக்குரிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெருங் காப்பியம் என்ற தொகை வரிசையுள் ஐம்பெருங்காப்பிய வரிசையுள் ஒன்றான சிலப் பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆன்றோர் பலர் செய்துவரும் சிலப்பதிகாரத் திறனாய்வு, கானல் வரி என்னும் தலைப்பிட்டுள்ள பல்வேறு நூல்களில் காணப்படும் கருத்துக்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே, "சிலம்பொலி" என்ற இந்நூல்.

"கபிலர்", "பரணர்" போலும் பல நூல்களின் ஆசிரியராம் புலவர் கோவிந்தன் அவர்கள், இந்நூல் எம் வெளியீடாக வெளிவர ஒப்புதல் அளித்தமைக்கு, புலவர் அவர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர் களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில் எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டு கின்றோம்.

— பதிப்பகத்தார்

முன்னுரை

தமிழ் மொழி இனிமை வாய்ந்தது. ''இனிமையால் இயன்ற இளமகளிர்'' என்ற பொருள்படவந்த, "தமிழ் தழீஇய சாயலவர்'' என்ற தொடரில் வரும், "தமிழ்'' என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக் கூறித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார், சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர், திருத்தக்க தேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள்; அவ்வாறே உரைத்தும் வந்தார்கள். செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் ஒரு பெரியார். தமிழர் வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது உண்மை என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப்பிடிப்பினைக் காணும் வாய்ப்பு பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம் பெரும் மூதாதையர் தம் பண்பாட்டுப் பெருமையினை இன்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல்

வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால், அவர்கள் பாடிச்சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக் காக்கத் தவறிவிட்டனர், விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், அவருள் விழிப்புணர்வோடு இருந்தவர்கள், அழிந்தனபோக, அழியாதிருந்த அப்பழம் பாக்களையெல்லாம் அரிதின் முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை, ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலர் ஒன்று கூடி இருந்து, இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள் வளம், அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை, அளவு கோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெரும் காப்பியம் என்ற தலைப்புகளில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றுள்ளனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகைநூல்களில், ஐம்பெருங்காப்பியத் தொகுப்பில் ஒன்றாவதான சிலப்பதிகாரம், "யாம் அறிந்த புலவரிலே, கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்றும், மகாகவி பாரதியாரால் பாராட்டப்பெற்ற பெருமைக்கு உரியது. அந்நூலைப் பயின்று வருங்கால், திருவாளர். ம.பொ.சி. அவர்களின் "சிலப்பதிகாரத் திறனாய்வு" என்ற நூலையும், பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் "கானல்வரி" என்ற நூலையும், திருவாளர். பி.டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின், "தமிழர் வரலாறு" என்ற ஆங்கில நூலையும் படிக்க நேர்ந்தது. அவ்வாறு படித்தபோது, அவர்கள் கூறியிருக்கும் கருத்துக்கள் சில, இலக்கிய ஆசிரியராம் இளங்கோவடிகளின்

கருத்துக்கும்,அக்காலத் தமிழக வரலாற்று உண்மைக்கும் மாறுபட்டிருக்கக் கண்டேன்.

திரு.பி.டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் கூற்றில் ஏற்புடையவல்லாத கருத்துக்களுக்கான விளக்கங்களை, நான் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ள, "தமிழர் வரலாறும், திறனாய்வும்" என்ற தலைப்புள்ள என் நூலில் வேண்டிய இடங்களில், இணைப்புகளாக இணைத்து அளித்துள்ளேன். திருவாளர்கள் ம.பொ.சி., தெ.பொ.மீ. ஆகியோர் கருத்துக்கள் சிலவற்றிற்கு அளிக்கும் விளக்கங்களின் தொகுப்பே "சிலம்பொலி" எனும் தலைப்புள்ள இந்நூல். என் ஏனைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், இந்நூலுக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப்பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி,என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத் துணை நிற்கவேண்டுகிறேன்.

கா. கோவிந்தன்

பொருளடக்கம்

1. இளங்கோ அடிகளுக்கு மறதியா? 5

2. மாதவி தொடர்பாகவே பொருளழித்து வறுமையுற்றுக் கைப்பொருள் இழந்து நிற்கும் நிலை கோவலனைக் கானல் வரிக்கு முன்பே அலைக்கழிக்கத் தொடங்கி விட்டதை மாதவியும் உணர்ந்திருந்தாள் என தெ.பொ.மீ. அவர்கள் கூறுவது பொருந்துமா? 36

3. கோவலன் பாடிய கானல்வரிப் பாக்களின் பாட்டுடைத் தலைவி கண்ணகியே எனல் பொருந்துமா? 52

4. கோவலன் வழக்கமாகக் கண்ணகியின் வீடு சென்று பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து வந்தான்; அதை மாதவியும் உணர்ந்திருந்தாள் எனல் பொருந்துமா? 65

5. மாதவியின் ஆடற்கலையில் ஈர்ப்புண்டுதான் கோவலன் மாதவி மனை புகுந்தான் எனக் கோடல் பொருந்துமா? 71

6. "கோவலன் தன்னோடிருந்தகாலத்து, அவனைப் பிரிந்ததால் கடுந்துயரத்தைக் கண்ணகியும் எய்துவாள் என்று உணராமை அவளிடத்து (மாதவி) நாம் காணும் ஒரு பெருங்குறை" [பக்கம்: 97] என மாதவி மீது தெ. பொ. மீ. குற்றம் சாட்டுவது முறைதானா? 77

7. கோவலன் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு அதன் வழிச் செயல்படுபவனே ஒழியச் சிந்தித்துச் செயல்படுபவன் அல்லன்! 82

8. "மாதவி மனை புகுந்த கோவலன், தன் மனையை அறவே மறந்துவிடவில்லை" எனல் பொருந்துமா? 90

9. "குலம்தருவான் பொருள் குன்றம்தொலைந்து இலம்பாடுற்றேன்" என்ற கோவலன் கூற்றில் வரும் குலந்தருவான் பொருள் குன்றத்தில் மங்கல அணியும்,காற்சிலம்பும்ஒழிந்த கண்ணகி யின் பல்வேறு அணிகளும் அடங்கும் எனல் பொருந்துமா? 96

10. மாதவி, கோவலன் அன்புக்கு ஏங்கியவளே யல்லாது, அவன் மாநிதியைக் கருத்தில் கொண்டவள் அல்லள்! 110

11. மாதவியைக் கோவலன் மன்னித்து விட்டான்; ஆனால், கண்ணகி மன்னிக்கவில்லை! கண்ணகி தென்னவனை மன்னித்து விட்டாள்; ஆனால், மாதவியை மன்னிக்கவில்லை! 113

இளங்கோ அடிகளுக்கு மறதியா?

மதுரையில், மாதரி இல்லத்தில், தான் ஆக்கிப் படைத்த உணவுண்டு, சிலம்பு விற்கப் புறப்பட்ட கோவலனைத் தழுவி, அவன் முடியில் சூடியிருந்த மலரைத் தன் கூந்தலில் அணிந்து கொண்டு, காலையில் வழி அனுப்பி வைத்த கண்ணகி, அன்று மாலையில் வந்து நிற்கும் தன்னைக் காணமாட்டா நிலையில், புண்ணி லிருந்து செங்குருதி சொட்டச் சொட்டக் கொலை யுண்டு வீழ்ந்து கிடக்கும் கணவன் உடலைக் கண்ணுற்ற கொடுமையைப் படம் பிடித்துக் காட்டும் சிலப்பதிகார வரிகள் இவை:

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழன் மேற்
கொண்டாள், தழீஇக் கொழுநன்பால், **காலைவாய்;**
புண்தாழ் குருதி புறம்சோர, **மாலைவாய்**
கண்டாள், அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்!"[2]
சிலம்பு: 19: ஊர்சூழ்வரி: 35-38

இவ்வரிகளுக்குக், "காலைப் பொழுதின் கண், ஆயர் பாடியிடத்தே, தன் கணவனைத் தழீஇ, அதற்குக் கைம் மாறாக, அவனுடைய வண்டொலிக்கும் குஞ்சியின் மாலையை வாங்கித் தன் வார்குழல் மேல் கொண்ட

கண்ணகி, மாலைப் பொழுதின் கண்ணே, அவன் மெய்யின் புண்ணின்றும் குதிக்கின்ற குருதிப் புனல் இடமெல்லாம் நனைப்ப, அவன் தன்னைக் காணாத துயரத்தைத்தான் கண்டாள்'' என அடியார்க்கு நல்லாரும் "காலைவாய்த் தழீஇக் கொண்டாள்; கொழுநன் குருதி புறஞ்சோரத் தன்னை அவன் காணாது கிடக்கின்ற கடுந்துயரத்தினை மாலைவாய்க் கண்டாள்'' என அடியார்க்கு நல்லார் காலத்துக்கும் முற்பட்டவரான அரும்பத உரைகாரரும் விளக்கம் அளித்திருப்பதன் மூலம், கொலையுண்டு கிடக்கும் கோவலனைக் கண்ணகி கண்ட மாலை, கோவலன் காலையில் தன்பால் விடை கொண்டு சென்ற அன்றைய மாலையில்தான்'' என்பதே அவ்விரு உரையாசிரியர்களின் கருத்தாம் என்பது தெளிவாகிறது.

திரு. ம. பொ. சி. அவர்களும் இதை ஒப்புக் கொண்டுள்ளார். தம்முடைய பல்வேறு கட்டுரைகளின் தொகுப்பாகிய "சிலப்பதிகாரத் திறனாய்வு'' என்ற நூலில், மூன்றாம் பதிப்பு, பக்கம் 123இல் இடம் பெற்றிருக்கும் "இளங்கோவின் மறதி'' என்ற கட்டுரையில், பக்கம்: 124இல் "ஆம்; ஒருநாள் காலைப் பொழுதில், தன் கணவனைத் தழுவி, அவன் சிலம்பு விற்று வர விடை கொடுத்தனுப்பிய கண்ணகி, அன்று மாலையில், தான் கண்டும் அவன் தன்னைக் காணமுடியாது மாண்டு கிடப்பதைக் கண்டு, கடுந்துயர் கொண்டாள் என்றே பழைய உரையாசிரியர் இருவரும் ஒத்த கருத்தினராக உரைப்பாராயினர்'' எனக் கூறியிருப்பது காண்க.

ஆனால், அவ்வாறு கூறிய அவர், அதே பக்கத்தில், "அவர்களுடைய உரைகள் மூலத்திற்கு ஒத்ததாகவே இருக்கின்றன. ஆனால், காலப் போக்கினை ஆராய்ந்து பார்க்குமிடத்து, மூலத்திலேயே முரண்பாடு இருக்கக்

காண்கிறோம்'' என்றும் கூறி, இளங்கோவடிகள் மீதான குற்றச்சாட்டினை மெல்லத் தொடங்கி வைத்துள்ளார்.

அவ்வாறு மையத் தொடங்கிய குற்றச்சாட்டினை, "அந்த மகாகவியும் 'மறதி' என்னும் குறைபாட்டிற்கு இரையாகி விட்டாரோ என்று ஐயுறத்தக்க வகையில் ஒரு சிக்கல் சிலப்பதிகாரத்தில் காணக்கிடக்கிறது" (பக்கம் 123] என்றும், "இளங்கோவடிகள் பெரும் புகழ் பெற்ற மகாகவியாக இருந்தும், யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல, அவருக்கும் மறதி ஏற்பட்டது போலும்" [பக்கம்: 131] என்றும் கூறி, இளங்கோ அடிகள் கூற்றில் ஐயுற்றது போல, அடக்கவுணர்வோடு குற்றம் சாட்டி வைத்தார்.

இவ்வாறு இரண்டாங் கட்டத்தில் ஐயவுணர்வோடும் அடக்கவுணர்வோடும் குற்றம் சாட்டியவர், 142, 143ஆம் பக்கங்களில், "மாதரி இல்லத்தில் புகுந்த மறுநாள், கண்ணகி கோவலனுக்கு உணவு சமைத்துப் படைத்தாள் என்பதும், உணவை உண்டு முடித்ததுமே, கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து சென்றான் என்பதும், அன்று மாலையே கோவலன் கொலையுண்டான் என்பதும், அன்றிரவெல்லாம் கோவலன் வாராமையால், கண்ணகி உள்ளம் வெதும்பி, உறக்கம் இன்றி வருந்தினாள் என்பதும், மறுநாள் காலையில், உற்பாதங்களைக் கண்ட அச்சத்தால் ஆய்ச்சியர் குரவைக் கூத்து நடத்தினர் என்பதும், அக்கூத்தின் முடிவில்தான், கோவலன் கொலையுண்ட செய்தி கண்ணகிக்குக் கிடைத்தது என்பதும், அதனை அறிந்ததுமே, அவள் கோவலன் கொலையுண்ட இடம் சென்று, அவனுடைய உடலைக் கண்டாள் என்பதும், உறுதி செய்யப் படுகின்றன" என்றும், பக்கம் : 124இல் "கண்ணகியிடம் விடை பெற்றுச் சென்ற அன்றே கோவலன் வெட்டுண்டான். ஆயினும்

அன்று மாலையே கண்ணகி கொலைக் களத்தில் அவனைக் காணவில்லை; மறுநாள் மாலைதான் காண்கிறாள். ஆகவே, ஒரு நாள் காலையில் கோவலனுக்கு விடை கொடுத்து அனுப்பியவள் அன்று மாலையே அவனைப் பிணமாகக் கண்டாள் என்று இளங்கோ அடிகள் கூறுவது மறதியின் பாற்பட்டதே" என்ற முடிவான தீர்ப்பினை வழங்கிவிட்டார்.

அவ்வாறு முடிவான தீர்ப்பினை வழங்கிவிட்ட திரு. ம. பொ. சி. அவர்கள் (பக்கம் : 142) தம் குற்றச் சாட்டிற்கு வலுவேற்ற, சான்று ஒன்றினையும் தேடிப் பெற்றுக் காட்டியுள்ளார்—டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் வெளியிட்டுள்ள "இரட்டைக் காப்பியங்கள்" என்ற நூலில். "முதல் நாள் மாலை கோவலன் இறந்தான்; மறுநாள் காலை, கண்ணகி அத்துயரச் செய்தியை அறிந்தனள் என்பது தெளிவு. அறிந்த பின் அலறிப்பதறிக் கொலையிடம் விரைகின்றாள். ஆனால், காலையில் கணவனைத் தழுவி வழியனுப்பியவள், மாலையில் அவன் தன்னைக் காணாத நிலையில்தான் கண்டாள் எனக் கூறிக் கண்ணகியின் அழுகைப் பெருக்கையும் அவலப் பெருக்கையும் காட்டுவதற்காக, இவ்வொரு நாளை ஆசிரியன் பலியிடுகின்றான்" என திரு. வ. சுப. மாணிக்கம் அவர்கள் கூறுவதைக் காட்டுவதே இந்த வலுவான சான்று.

இதனால், கோவலன் உணவுண்டு சென்றதும், கொலையுண்டதும், ஆய்ச்சியர் குரவை ஆடியதும், கொலையுண்ட கணவனைக் கண்ணகி கண்டதும் ஆகிய நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு நாள் நிகழ்ச்சிகள் ஆகா; கோவலன் உணவுண்டு சென்றதும், கொலையுண்டதும் ஒரு நாள் நிகழ்ச்சிகள்; ஆய்ச்சியர் குரவை ஆடியதும், கொலையுண்ட கணவனைக் கண்ணகி கண்டதும், மறுநாள்

நிகழ்ச்சிகள் என்ற கருத்துக் கொண்டுள்ளார் திரு. ம. பொ. சி. என்பது தெரிகிறது. நிற்க.

ஒரு நாள் காலை கணவனை வழியனுப்பி வைத்த கண்ணகி, கொலையுண்டு கிடந்த கணவனை மறுநாள் மாலைதான் கண்டாள் என்ற தம் முடிவிற்கு மேலும் அரண் தேட, அதே சிலப்பதிகாரத்தில் வரும் இரு சொற்றொடர்களின் துணையை வேறு நாடியுள்ளார்.

"சிலப்பதிகாரத் திறனாய்வு" என்ற தம் நூலின் 130-131 ஆம் பக்கங்களில், "காலையில் போனார்; மாலையில் வந்தார்' என்று கூறினால், அது ஒரு நாளுக்கு உரிய காலையையும், மாலையையுமே குறிப்பதாகக் கொள்வது உலக வழக்கு. சிலப்பதிகாரத்திலே, தன்னைப் பிரிந்து சென்ற கோவலன், வயந்தமாலை வசம் தான் கொடுத்தனுப்பிய கடிதத்தை வாங்க மறுத்ததைக் கேட்ட மாதவி, 'மாலை வாரார் ஆயினும், மாணிழை! காலைகாண்டுவம்' (சிலம்பு : 8. வேனிற்காதை : 115-116] என்று கூறுகிறாள். இதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், 'இம்மாலைப் பொழுதினில் வருவார்; வாரார் ஆயின் காலைப் பொழுதில் ஈண்டு நாம் காண்போம் எனச் சொன்னாள்' என்கிறார். இவரும் மாலை நேரத்தை அடுத்து வரும் காலைப் பொழுதையே குறிப்பிடுகின்றார்" என அவர் கூறியிருப்பது காண்க.

"மாலை வாரார் ஆயினும், காலை காண்டுவம்"

என்ற சிலப்பதிகாரத் தொடரில் வரும்காலை, மாலையை அடுத்து வந்த காலைதான்; அதாவது, கோவலன் பிரிந்து சென்ற மாலையை அடுத்து இரவு வர, அவ்விரவை அடுத்து வந்த காலைதான் என்பதில், அதாவது, மாலைக்கும், காலைக்கும் இடையில் ஓர்இரவு இடங்கொண்டுவிட வந்த காலைதான் என்பதில் ஐயம் இல்லை.

இதேபோல், மாலையை அடுத்துக் காலை வருவதை உணர்த்தும் வரிகள் குறுந்தொகையிலும், புறநானூற்றிலும் வந்துள்ளன:

"மாலை பெய்த மணங்கமழ் உந்தியொடு
காலைவந்த காந்தள் முழுமுதல்"

இது குறுந்தொகை (361). மாலைப் பொழுதில் மலையிடையே மழைபொழிய, அம்மழை நீர் ஒன்று திரண்டு பெருவெள்ளமாய்ப் பாய்ந்தோடி வருங்கால், அவ்வெள்ளம் அடித்துக் கொணரும் காந்தள் மலரைத் தலைமகள் கைக்கொண்டு மகிழ்ந்ததைக் கூறும் இப்பாட்டில் மாலையை அடுத்து வரும் காலை, இடையில் ஓர் இரவு நின்று கழிய வந்த காலைதான்.

அதே போல்,

"மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி"

என்ற புறநானூற்றுப் பாட்டில் (149) வரும் காலையும் மாலைக்குப் பின், ஓர் இரவு இடைவந்து கழியவந்த காலையையே குறிக்கும். இதற்குச் சிறிது விளக்கம் தேவை. கண்டீரக்கோ பெருநள்ளி என்ற கொடைவள்ளலைப் பாடிய புலவர் வன்பரணர், தன்னைப் பண்ணிசைத்துப் பாராட்டும் பாணர்க்கு, நள்ளி வாரி வாரி வழங்கிவிடுவதால், அப்பாணர் மெய்ம்மறந்து போக, அதனால், அவர்கள் காலையில் வாசிக்க வேண்டிய மருதப் பண்ணை மாலையிலும், மாலையில் வாசிக்க வேண்டிய செவ்வழிப் பண்ணைக் காலையிலுமாக, முறைமாறி இசைப்பாராயினர் எனக் கூறுவதன் மூலம், வ்வன் புகழ் பாடும் இப்புறநானூற்றுப் பாட்டால், ாணர் காலமுறை மாறிப் பாடிய நிலையை எடுத்துக்

கூறியுள்ளார். ஆகவே, இப்பாட்டில் வரும் காலையும், மாலைக்குப் பின் ஓர் இரவு இடைவந்து கழிந்துபோகப் பின்னர் வந்த காலையையே குறிக்கும். "மாலைவாரார் ஆயினும், காலை காண்டுவம்" எனவரும் சிலப்பதிகாரத் தொடரும் அத்தகையதே.

மாதவி பாடிய கானல்வரிப் பாடல் கேட்டு, "மாயப் பொய்காட்டும் மாயத்தாள், வேறுஒன்றின்பால் மனம் வைத்துப் பாடினாள்" என அவளைப் பழித்து விட்டு, ஏவலாளர் சூழ்ந்து வரக் கோவலன் போய்விட்டானாகத் தனித்து மனைபுக்க மாதவி, பிரிவுத் துயர் மறக்க, யாழ் எடுத்துப் பல்வேறு இசைக்கருவிகளை எழுப்பியும் துயர் தணியாதாகத் தன் துயர்க் கொடுமைகளையெல்லாம், பண்ணிப் பண்ணி எழுதிய கடிதத்தை வசந்தமாலை கைக்கொடுத்து, அதைக் கொண்டு போய்க் கோவலன்பால் அளித்து, அவனைக் கொணர்க எனப் பணித்து அனுப்ப, அது பெற்ற வசந்தமாலை, கூலமறுகிற்குச் சென்று, கோவலன்பால் நீட்ட, அவன் மாதவியை ஆடல்மகள் எனப் பழித்து, நீட்டிய கடிதத்தினை வாங்கவும் மறுத்து விட்டானாக, வசந்தமாலை மாதவிபால் மீண்டு, நடந்தது கூறக்கேட்ட நிலையில், மாதவி கூறிய, "மாலை வாரார் ஆயினும் காலை காண்டுவம்" என்ற கூற்றில், மாலை முன்வர, அடிகளார் பாடியிருக்கும் நிலைவேறு. ஆங்கு மாலை முன் நிற்கிறது; காலை பின் நிற்கிறது; அந்நிலை வேறு.

ஆனால், 'ஆயர்பாடியில், கோவலனைத் தழுவி, அவன் முடியில் சூடியிருந்த மலரைத் தன் கூந்தலில் அணிந்து கொண்டு, காலையில் வழியனுப்பிய கண்ணகி, வந்து நிற்கும் தன்னையும் காணமாட்டா நிலையில், புண்ணிலிருந்து செங்குருதி சொட்டச் சொட்டக் கொலையுண்டு வீழ்ந்து கிடக்கும் கோவலனை, "மாலை

யில் கண்டாள்" என்ற இளங்கோவடிகளார் கூற்றில், காலை முன்வர, அதைத் தொடர்ந்து மாலை வர, அடிகளார் பாடியிருக்கும் நிலை வேறு. ஈண்டு, காலை முன் நிற்கிறது; மாலை பின் நிற்கிறது; இந்நிலை வேறு.

கோவலன் பிரிவால் வருந்திய மாதவி, தன் மன அமைதிக்காக, "மாலை வாராராயினும், காலை காண்டுவம்" எனக் கூறிய போது, அவள் குறிப்பிடும் காலை, கோவலன் பிரிந்த மாலையைத் தொடர்ந்து வந்த இரவு கழிய வந்துற்ற மறுநாள் காலை ஆகும். இதைக் குறுந்தொகை, புறநானூற்றுப் பாக்கள் இரண்டின் மூலம் விளக்கியுள்ளேன்.

ஆனால், காலையில் வழி அனுப்பியவள், மாலையில் இறந்து கிடக்கும் கோவலனைக் கண்டாள், என இளங்கோ அடிகள் கூறும் கூற்றில் வரும் காலையும் மாலையும், ஒரு நாள் காலையும், அன்றைய மாலையுமே அல்லாது, ஒரு நாள் காலையும், மறுநாள் மாலையும் ஆகாது. ஒரு நாள் காலையையும்,அன்றைய மாலையையும் குறிக்கும் வகையில், காலை, மாலை ஆகிய சொற்கள் இடம் பெற்றிருக்கும் வரிகள் குறுந்தொகைப் பாடல்கள் இரண்டிலும், ஐங்குறு நூற்றுப் பாடல் ஒன்றிலும், புறநானூற்றுப் பாடல்கள் இரண்டிலும் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு :

"காலையும் பகலும், கையறு மாலையும்"

"காலை வந்து மாலைப் பொழுதில்
நல்லகம் நயந்து"

—குறுந்தொகை 32; 347.

"நாரை
காலை இருந்து மாலை சேக்கும்
தென்கடல்."

—ஐங்குறு நூறு : 157

"காலை அந்தியும், மாலை அந்தியும்!"
"இல்லாகியரோ, காலை, மாலை."

—புறநானூறு : 34; 232

ஆக, எடுத்துக் காட்டிய சான்றுகளால் கானல் வரி முடிவில், மாலை வாரார் ஆயினும், காலை காண்டுவம் என்ற மாதவி கூற்றில், மாலையை அடுத்துக் காலை வந்துள்ளமைக்கு ஈடாக, காலை கோவலனுக்கு வழி கொடுத்து அனுப்பிய கண்ணகி, மாலை அவன் கொலை யுண்டு கிடப்பதைக் கண்டாள் என்ற இளங்கோவடிகளார் கூற்றில், காலையை அடுத்து மாலை வந்துளதைக் காட்டியிருப்பது பொருந்தாது என்பது உறுதியாகிறது. நிற்க.

இனிச் "கோவலன் உணவுண்டு சென்றதும், கொலை யுண்டதும் ஒரு நாள் நிகழ்ச்சிகள். ஆய்ச்சியர் குரவை ஆடியதும், கொலையுண்ட கணவனைக் கண்ணகி கண்டதும் மறுநாள் நிகழ்ச்சிகள்" என்ற ம.பொ.சி. அவர்களின் முடிவு பற்றிய ஆய்வினை மேற்கொள்வாம்.

கோவலன் உணவு உண்டு சென்றதும், கொலை யுண்டதும் ஒரு நாள் நிகழ்ச்சிகள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை; ஆனால், அன்று அவை நிகழ்ந்த நேரங்கள் குறித்து ம. பொ. சி. அவர்கள் கூறும் கருத்து, வினாவிற்கு உரியது.

கோவலன் உணவு உண்ட நேரம் எது?

"பொழுது விடிந்து நெடுநேரத்திற்குப் பின்பு, கிட்டத் தட்டப் பகல் நேரத்தில்தான் கண்ணகி படைத்த உணவைக் கோவலன் உண்டிருக்க வேண்டும்"
என்கிறார் ம. பொ. சி. [பக்கம் : 140]

அடியார்க்கு நல்லார், "நாள்வழிப் படூஉம் அடிசில்" [சிலம்பு : 16 : 19] என்ற தொடருக்குப் "பகற் போதே உண்ணும் அடிசில்" எனக் கூறும் உரையும், "நண் பகற் போதே நடுங்கு நோய் கைம்மிகும்" [சிலம்பு : 18 : 16] என் பதற்குக் "கோவலன் போன போதே தன் நெஞ்சு கலங்குதலால் நண்பகற் போதே என்றாள்" என அளிக்கும் விளக்க உரைகளே, ம. பொ. சி. அவர்களை, அம்முடிவிற்கு வரச் செய்திருக்க வேண்டும்.

சிலப்பதிகாரத் திறனாய்வு மேற்கொள்வார், அது மேற்கொள்வதன் முன்னர்,

"**சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்**
நாத்தூண் நங்கையொடு **நாள்வழிப்படூஉம்**
அடிசில் ஆக்குதற்குஅமைந்த நற்கலங்கள்
நெடியாது அளிமின், நீர் எனக் **கூற**
இடைக்குல மடந்தையர் இயல்பில் குன்றா
மடைக்கலம் தன்னொடு மாண்புடை மரபின்
கோளிப்பாகல் கொழுங்கனித் திரள்காய்;
வாள்வரிக் கொடுங்காய்; மாதுளம் பசுங்காய்,
மாவின்கனியொடு, வாழைத்தீங்கனி
சாலிஅரிசி தம்பாற் பயனொடு
கோல்வளை மாதே! **கொள்கெனக் கொடுப்ப**
மெல்விரல் சிவப்பப், பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க்குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது, செங்கண் சேந்தன;
கரிபுற **அட்டில்** கண்டனள் பெயர

வையெரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையிற் **காதலற்கு ஆக்கி"**

[சிலம்பு : 16:18-34] என்ற இத்தொடர்களில் ஆளப் பட்டிருக்கும் சில சொற்றொடர்களையும், சொற்களையும், அச்சொற்களின் பொருளையும், வினைச் சொற்கள் அடுத்தடுத்து ஆளப்பட்டிருக்கும் நிலையினையும் கூர்ந்து நோக்குதல் வேண்டும்.

அடிசில் ஆக்குதற்கு வேண்டிய பொருள்களை அளிக்குமாறு பணிக்கும் மாதரி, "அளிமின்" என ஆணை இடுவதற்கு முன்பு, **"சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்"** என விருந்தினரின் இயல்பைக் கூறியுள்ளாள். "அடிசில்" என வாளா கூறாது. "நாள்வழிப் படூஉம் அடிசில்" எனச் சிறப்பித்தும், அதுபோலவே "அளிமின்" என்று மட்டும் கூறாது, "நெடியாது அளிமின்" என விரைவு ஏற்றியும் கூறியுள்ளாள்; ஏன்?

சாவக நோன்பிகள் இரவு உண்ண மாட்டார்கள். "சாவக நோன்பிகள் ஆதலின் இரவு உண்ணார் என்பது" என்ற அரும்பத உரையாசிரியர் விளக்கமும் காண்க.

[கோவலனும், கண்ணகியும், மாதரி இல்லத்தில் புகுந்த அன்று இரவு, உணவு உட்கொள்ளவில்லை என்பதை, திரு. ம. பொ. சி. அவர்களும் ஒப்புக் கொண்டுள்ளார். "மாதரி இல்லத்தில் புகுந்த அன்று இரவு, கோவலனும் கண்ணகியும் உணவு கொள்ளவில்லை" [பக்கம்: 126] என அவர் கூறியிருப்பது காண்க.]

இரவு உண்ணா நோன்பு மேற்கொள்பவர், நோன்பு முடித்து, உணவு உண்ணும் நேரம் பொதுவாகக் காலை நேரமே ஆகும். வைகுண்ட ஏகாதசி, மாசி சிவராத்திரி

கந்தர் சஷ்டி, போன்ற நாட்களில் இரவு உண்ணா விரதம் இருப்பவர், விரதம் முடித்து உண்பது, மறுநாள் விடியற்காலையில்தான் என்பது இன்றும் வழக்கமாதல் அறிக. இதை உணர்ந்தவள் மாதரி; ஆகவேதான், இரவு உண்ணா விரதம் உடையவன் கோவலன் என, வந்திருப்போன் இயல்பைக் கூறி, அவன் உண்ணுவதற்கேற்ப ஆக்கும் உணவு காலைப் போதிலேயே ஆக்கப்படுதல் வேண்டும் என்பதை அறிவுறுத்த வெறும் அடிசில் என்னாது, "நாள் வழிப்படூஉம் அடிசில்" என்றாள்.

நாள் என்னும் சொல் விடியற்போது எனும் பொருள் உடையதாகும்; "நாள் இரை"—காலை உணவு (குறுந்தொகை; 364; ஐங்குறுநூறு: 63.111, அகநானூறு: 63 புறநானூறு : 283], "நாள் மேயல் ஆகும்"—விடியற்போதில் மேயும் [ஐங்குறு நூறு: 95], "நாள் அணி"—காலை அணி [பரிபாடல் : 9: 20; 10: 114], "நாள் ஞாயிறு"—காலை ஞாயிறு [களவழி நாற்பது: 1.] ஆகிய தொடர்களில் நாள் எனும் சொல், விடியற் போதை உணர்த்தி நிற்றல் காண்க. "நாளங்காடி" எனும் சொல் காலைக் கடைவீதியை உணர்த்துவதும் அறிக.

ஆகவே "நாள் வழிப்படூஉம் அடிசில்" என்பதற்கு விடியற்போதில் உண்ணும் உணவு என்பதே பொருளாம். அடியார்க்கு நல்லாரும் "பகற் பொழுதே உண்ணும் உணவு" என்று தான் கூறினாரே ஒழிய, "நண்பகற் போதில் உண்ணும் உணவு" எனக் கூறவில்லை. ஞாயிறு தோன்றி, அது மறையும் வரையுள்ள பொழுதெல்லாம் பகல்தான்.

ம. பொ. சி. அவர்கள் கருத்துப்படி. கோவலன் இரவில் உண்ணப் போவது இல்லை; மறுநாள்தான்

உண்ணப்போகிறான். மறுநாள் நண்பகற் போதில்தான் உண்ணப் போகிறான் என்றால், அடிசில் ஆக்குதற்கு வேண்டும் பொருள்களை மறுநாள் காலையில் கொடுத்திருக்கலாம். ஆனால் மாதரி, "நெடியாது அளிமின்" - அதாவது, காலம் தாழ்த்தாது இப்போதே கொடுத்து விடுங்கள் எனப் பணிக்கிறாள். ஏன்?

விடியற்காலையில் உண்பதற்காம் உணவைச் சமைக்க வேண்டுமாயின், அதற்குத் தேவைப்படும் பொருள்களை, முந்திய நாள் இரவே ஈட்டிவைப்பதுதான் முறையாகும். இது உணர்ந்தவள் மாதரி. ஆகவேதான் "அளிமின்" என ஆணையிட்ட அப்போதே, [அப் பொருள்கள்.] அளிக்கப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்த, "அளிமின்" என வாளா கூறாது, "நெடியாது அளிமின்" - அதாவது காலம் தாழ்த்தாது, இப்போதே அளிமின் எனக் கூறினாள். மாதரியின் ஆணைவழி நடக்கும் ஆயர் மகளிர், அவற்றை அப்போதே அளிக்காது மறுநாளா அளித்திருப்பர்? இருக்காது; அப்போதே அளித்திருப்பர். இதுதான் உண்மை. அவ்வாறாகவும், மது பொ. சி. அவர்கள், **"மறுநாள் முற்பகல் மாதரி கூளித்த பண்டங்கள்"** எனக் கூறுவது பொருந்தாது.

"சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்" என்று தொடங்கி, "நெடியாது அளிமின் நீர் எனக் கூற" என முடியும் பகுதிக்கு உரை எழுதி முடித்து, அட்டிற்காம் பொருள்களை ஆயர் மகளிர் அளித்ததை உணர்த்தும் "இடைக்குல மடந்தையர்" என்று தொடங்கிக் "கொள்கெனக் கொடுப்ப" என முடியும் பகுதிக்கு உரை எழுதத் தொடங்குவதற்கு முன்னர், இரண்டிற்கும் இடையில் "இத்துணையும் கூறியது, இவர்கள் சென்ற அன்றிரவு செய்தனவும் மேற்செய்வனவும்; இனி மற்றை நாளைச் செய்தி கூறுகிறார்" [சிலம்பு 16: 18-21 உரை விளக்கம்].

எனஅளிக்கும் அடியார்க்கு நல்லாரின் தவறானவிளக்கமே ம.பொ.சி. அவர்களை அடி சறுக்க வைத்திருக்க வேண்டும். அடியார்க்கு நல்லார் கூறும் அவ்வுரை விளக்கம், இளங்கோவடிகளாரின் உள்ளம் உணராது கூறிய தவறான விளக்கமே ஆம்.

சிலப்பதிகாரப் பொருளைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு அடியார்க்கு நல்லார் உரையே துணையாகும் என்றாலும், அவ்வுரையும் சிற்சில இடங்களில் தடம் புரண்டு ஓடியுளது என்பதை மறைப்பதற்கில்லை. ம.பொ.சி.அவர்களும் இதை ஒப்புக் கொண்டுள்ளார்; "உழையோர் இல்லா ஒரு தனி கண்டு" என்ற தொடருக்கு, "ஆய்ச்சியர் எல்லாம் குரவையாடச் சென்றமை தோன்ற" என்று அடியார்க்கு நல்லார் உரை கூறினார் என்றால், அதனை மூலத்திற்குப் பொருந்தா உரை என்றே கொள்ள வேண்டும்" [பக்கம்: 137] என அவர்கள் கூறியிருப்பது காண்க.

"நீட்டித்து இராது நீ போ" எனக் கௌந்தி அடிகளின் ஆணையிற் கண்ட விரைவினை உணர்ந்த மாதரி, கண்ணகியோடு மனை புகுந்த அடுத்த கணமே, அவர்கள் இருத்தற்கேற்ற இடம் அளிப்பது, கண்ணகிக்கு நீராட்டி விடுவது, தன் மகள் ஐயையைத் துணையாக அளிப்பது, கோவலன் சாவக நோன்பி என்பதறிந்து, நாள்வழிப்படும் அடிசில் ஆக்குதற்கு வேண்டும். பொருட்களை "நெடியாது அளிமின்" என ஆணையிடுவது ஆயர்மகளிரும் அவற்றை அப்போதே அளிப்பது, அவை கொண்ட கண்ணகி அட்டில் தொழிலை அட்டியின்றித் தொடங்குவது ஆகிய இந்நிகழ்ச்சிகள் விரைந்து நடைபெறுதல் வேண்டும் என்ற உணர்வோடு, இளங்கோவடிகளார் சொற்களை ஆண்டிருக்கும் விரைவு, அடியார்க்கு நல்லார் உரைக்கு ஆதரவு அளிப்பதாக இல்லை. அட்டில்

ஆக்குவதற்காம் பொருட்களை அளிப்பது அன்றிரவே முடிந்து விட்டது. அட்டில் ஆக்குவது மட்டுமே மறு நாள் நடைபெற்றது. அதுவும், ம.பொ.சி. கூறுவது போல், "பொழுந்து விடிந்து நெடுநேரத்திற்குப் பின்பு, கிட்டத்தட்டப் பகல் நேரத்தில்" [பக்கம்: 139] அன்று; மாறாக, விடியற்காலத்திலேயே நடந்து முடிந்து விட்டது.

பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துப் பெயரும் மாதரியைக் கௌந்தி அடிகள் கண்டது,— ஞாயிற்றின் ஒளிக்கதிர் மறையும் நேரம். அதன் பின்னர்க் கண்ணகி சுற்ற நலன், கோவலன் குடிப் பெருமை, அடைக்கலப் பொருள் ஏற்று ஆவன செய்தலால் ஆகும் அறப்பயன் ஆகியவற்றை விளக்கச் சிறிது காலம் கழிந்திருக்கும். அதன் பின்னர், "நீட்டித்திராது நீ போ" என்பதற்கேற்ப, எவ்வளவுதான் விரைவு காட்டியிருந்தாலும், அவ்விருவரையும் உடன்கொண்டு, மதில் கடந்து, ஆயர்பாடி அடைதல், ஆங்கு அவர்கள் இருத்தற்கேற்ற மனையைத் தேர்ந்து, அதை ஏற்புடையதாகத் துப்புரவு செய்து தருதல், கண்ணகியை நீராட்டி ஒப்பனை செய்து பாராட்டல், தன் மகள் ஐயையையும், பிறரையும் அழைத்து அறிமுகம் ஆக்குதல், பின்னர் அட்டிலுக்கு ஆவன அளிமின் எனப் பணித்தல், அப்பணி ஏற்று ஆயர் மகளிர் அவற்றைத் திரட்டித் தருதல் ஆகிய இந்நிகழ்ச்சிகளை எவ்வளவு விரைவாகச் செய்து முடித்தாலும், முடிக்க இரவில் நெடுநேரம் ஆகியிருக்கும். நள்ளிரவைத் தாண்டியிருக்கவும் கூடும். அத்துணை நேரம் கடந்த பின்னர் விடியற் போதில் உண்ணற்காம் உணவினைச் சமைக்க வேண்டின், உணவுத் தொழிலை உறங்காதே மேற்கொள்வது இன்றியமையாதது. அதற்கேற்பவே, கண்ணகியும் அட்டில் தொழிலை அப்போதே தொடங்கி விடியற் போதில் முடித்துவிட்டாள்.

ஆயர் மகளிர் கொடுத்ததைக் கூறும், "கோல் வளைமாதே! கொள்கெனக் கொடுப்ப" என்றதொடரை அடுத்து வேறு எதையும் கூறாது, கைவிரல் சிவக்கக் காய் அரியத் தொடங்கிய கண்ணகி செயலை விளக்கும் "மெல் விரல் சிவப்ப" எனத் தொடங்கும் தொடரை அமைத்திருக்கும் இளங்கோவடிகளாரின் விரைவு, உணவுப் பொருட்களைக் கொடுத்த அக்கணமே கண்ணகி அட்டில் தொழிலைத் தொடங்கி விட்டாள் என்ற கருத்திற்கு அரண் செய்து நிற்றல் அறிக.

கோவலன், ஆயர் பாடியை விட்டுக் காலைப் பொழுதிலேயே புறப்பட்டு விட்டான் என்பதை உறுதி செய்யும் வலுவான அகச் சான்று ஒன்றும் சிலப்பதிகாரத்திலேயே உளது. கோவலர் இல்லம் நீங்கிக் கோவலன் தெருவில் அடியிட்டதும், கொல்லேறு ஒன்று எதிர்த்ததாகவும், அதைத் தீ நிமித்தமாகக் கொள்ளுதல் வணிகர் குலத்தில் வழக்கமில்லையாகவே, அதைப் பொருட்படுத்தாதே போய் விட்டான்— "பல்லான் கோவலர் இல்லம் நீங்கி வல்லா நடையின் மறுகிற்செல்வோன், இமிலேறு எதிர்ந்தது இழுக்கு என அறியான் தன்குலம் அறியும் தகுதி அன்று ஆதலின்" (சிலம்பு: கொலை: 100-101) என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

பொதுவாக, ஆயர்கள் தம் கறவைகளையும் காளைகளையும் கட்டவிழ்த்துக் காடு போக விடுவது காலைப் பொழுதில் நிகழுமே அல்லாது, நண்பகற் போதில் நிகழ்வது இல்லை. கோவலன் சென்ற போது, கட்டவிழ்த்து விடப்பட்ட காளையொன்று, அவனை எதிர்த்தது என்றால் சென்ற நேரம் காலைப் பொழுதே ஆதல் வேண்டும்.

கோவலன் காலைப் பொழுதிலேயே புறப்பட்டு விட்டான் என்பதை வணிக மக்களின் நடைமுறைப் பழக்கம் ஒன்றும் உறுதி செய்கிறது. தங்கள் வாணிக நிலையம் செல்லும் வணிகப் பெருமக்கள் காலை உணவு உண்டு காலைப் போதில் செல்வதே நடைமுறை வழக்க மாம். நண்பகல் வரை, மனையில் வாளாக்கிடந்து, நண் பகல் உணவுண்டு, அதன் பின்னரே செல்வர் என்பது வழக்கமாகாது.

இதுவரை கூறியவற்றால், அட்டிற்காம் பொருள் களை ஆய்ச்சியர் இரவே அளிக்க, அட்டில் தொழிலைக் கண்ணகி விடியற் போதே முடிக்க, கோவலன் உணவுண்டு, சிலம்பு விற்கக் காலைப் போதிலேயே புறப்பட்டு விட் டான் என்பதே உறுதி செய்யப்படும்,

கோவலன் கொலையுண்டது எப்போது? “கண்ணகி யிடம் விடை பெற்றுச் சென்ற, அன்று மாலையே கொலையுண்டான்” [பக்கம். 143]. “குரவை நிகழ்ந்த முந்திய நாள் மாலையிலேயே கோவலன் கொலை யுண்டான்” [பக்கம். 125] எனக் கூறி, கோவலன் கொலை யுண்டது மாலையில் என்ற முடிவிற்கு வந்த ம.பொ.சி. தம்முடைய முடிவிற்கான அகச்சான்று எதுவும் காட்டி னாரல்லர்.

கொலையுண்ட கோவலனைக் கண்ணகி கண்டது மாலையில் என்பதற்கான அகச்சான்றுதான் இருக்கிறதே யொழிய, கொலையுண்டது மாலையில் என்பதற்கான அகச்சான்று எதுவும் இல்லை. மாறாக, நிகழ்ச்சிகளை நிரலே வைத்து நோக்கும் போது, கோவலன் கொலை யுண்டது நண்பகற் போதில் என்பது தெளிவாகப் புலப் படும்.

கோவலன் முந்திய நாளே மதுரை சென்று பொன் வணிகர் வீதி, பொற்கொல்லர் வீதிகளை அறிந்து வந்தவனாதலின், பொற்கொல்லனைத் தேடி அலைவதில்காலம் செலவிடத் தேவையில்லை. அதனால்தான் கடைவீதியுள் நுழைந்தவுடனே, "பொன்வினைக் கொல்லன் இவன் எனப் பொருந்தி" (சிலம்பு : 26 : 110) பொற்கொல்லனை அடையாளம் கண்டு, "காவலன் தேவிக்கு ஆவதே காற்கணி, நீ விலையிடுதற்கு ஆதியோ?" சிலம்பு: 26:111-112 எனக் கேட்டு அவன்பால் சிலம்பைக் கொடுத்துவிட்டான்.

தான் செய்த களவு, அரசனுக்குத் தெரிந்து விடு முன்னரே, கோவலனைக் குற்றவாளியாக்கிக் கொன்று விட வேண்டும் என்பதில் விரைவு காட்டினான் பொற் கொல்லன். கோப்பெருந்தேவி கோயிலுக்குச் செல்லும் மன்னவன் அரசவை திரும்பும்வரை காத்திருக்கவும் விரும்பவில்லை; கோப்பெருந்தேவியின் கோயில் வாயிலுக்கே சென்று விட்டான். அது போலவே, கோவலன் தோற்றப் பொலிவுகண்டு, இவன் கள்வன் ஆகான் என்ற காவலன் ஐயத்தைப் போக்குவதிலும் விரைவு காட்டினான்.

"கோயில் சிலம்பு கொண்ட கள்வன் என் சிறுகுடில் அகத்துளான்" எனப் பொற்கொல்லன் கூறக் கேட்ட அளவே, கோப்பெருந்தேவியின் ஊடலைத் தணிக்க வேண்டும் என்ற வேட்கை மிகுதியால், பொற்கொல்லன் கூறியதன் உண்மை அன்மைகளை ஆராய எண்ணாதே, ஊர் காப்பாளரைக் கூவிக், 'கொன்று சிலம்பு கொணர்க" என ஆணை பிறப்பிப்பதில் மன்னனும் விரைவு காட்டினான்.

ஆகவே, கோவலன் பொற்கொல்லனைக் கண்டதும் பொற்கொல்லன் அரசனைக் கண்டதும், அரசன் ஆணை

பிறப்பித்ததும், கல்லாக் களிமகன் கோவலனை வெட்டி வீழ்த்தியதும் ஆகிய இந்நிகழ்ச்சிகள், மிக மிக விரைவாக, சில நாழிகைக்குள் நடந்து முடிந்திருக்கவேண்டும். மாலைவரை சென்றிருக்காது. நண்பகற்போதிற்குள்ளாகவே முடிந்திருக்கும்.

பொதுவாக, அரசவை கூடுவது காலைப் பொழுதில். அதனால்தான் அது, "நாளவை" [புறம் : 54 : 3], "நாள் மகிழ் இருக்கை" [புறம்: 29:5], "நாளிருக்கை" [சிலம்பு: 23:56; மதுரைக்காஞ்சி: 525], "நாளோலக்கம்" என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. குடையொடு கோல் வீழ்தல் போலும் தீக்கனாக்கண்டு, வருவதோர் துன்பம் உண்டு என அஞ்சிய கோப்பெருந்தேவி, அத்தீக்கனாத் திறம் உரைக்க அவை புகுந்த போதே, அரசன் அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தான் என இளங்கோவடிகளார் கூறியுள்ளார். அரசவை கூடியிருந்த காலம் காலைப் பொழுதாம் என்பது இதனாலும் உறுதி செய்யப்படும். அரசவை காலைப் போதில் கூடி, அரசியல் பற்றிய அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னர், ஆடல் பாடல் நிகழ்வது வழக்கமாகும். ஆடல் பாடல் கண்டும் கேட்டும் இன்புற்றுப் பாண்டியன் மெய்ம் மறந்திருப்பது கண்டு, ஊடல் கொண்டு, அரசவை நீங்கித் தன்மனை சென்றுவிட்ட கோப்பெருந்தேவியின் சினம் தவிர்ப்பான் வேண்டி, மன்னவன் அவள் மனை நோக்கி விரையும் நிலையில், பொற்கொல்லன் மன்னனைக் கண்டான் என்பதால், அது நிகழ்ந்த காலம் நண்பகலுக்கு முந்தியதாதலே வேண்டும். அந்நேரத்தில் மன்னனைக் கண்ட பொற்கொல்லன், கோவலன் மீது குற்றம் சாட்டலும், அது கேட்டு அரசன் ஆணை பிறப்பித்தலும், ஆணையேற்றுக் காவலருடன் பொற்கொல்லன் தன் மனை புகுதலும், காவலர் மறுத்தலும், பொற்கொல்லன் கள்வர் இயல்பு கூறலும், இறுதியாக ஒருவன் கோவலன் மீது

வெள்வாள் வீசலும் ஆகிய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக, விரைந்து நடைபெறக் கோவலன் கொலையுண்டு வீழ்ந்தது நண்பகற் போதிற்குச் சற்று முன்பாகவே முடிவுற்றிருக்க வேண்டும்.

கோவலன் கொலை முதல் நாள் நிகழ, ஆய்ச்சியர் குரவை மறுநாள் நிகழ்ந்தது எனக் கொள்வதா? இரண்டையும் ஒருநாள் நிகழ்ச்சிகளாகவே கொள்வதா?

கோவலன் கொலை முதல் நாள் நிகழ்ச்சி; குரவை மறுநாள் நிகழ்ச்சி என்ற முடிவு கொண்டுள்ளார் ம. பொ. சி. "ஆய்ச்சியர் இல்லத்திலே கோவலன் உணவு கொண்டான் என்றால், தயிரோ, மோரோ இல்லாமலா உணவை உண்டிருப்பான்? குடப்பால் உறையாத நிலையில், கோவலன் உண்ணுவதற்குத் தயிரோ மோரோ கிடைத்திருக்குமா?" [பக்கம்: 137] இவை ம. பொ. சி. அவர்களின் வினா.

பால் தோயவில்லை; நெய் உருகவில்லை; ஆகவே பாலும், நெய்யும் குரவை ஆடிய அன்று கொடுத்திருக்க முடியாது; ஆனால் அவை கொடுக்கப்பட்டதாக இளங்கோ வடிகளார் கூறியுள்ளார். "சாலி அரிசி தம்பால் பயன்" [சிலம்பு: 16:27] ஆகவே, பால் தோயாத, நெய் உருகாத நாளாகிய குரவை நிகழ்ந்த அன்று, கோவலன் உணவு உண்டிருக்க இயலாது. அதற்கு முந்திய நாளே உண்டிருக்க வேண்டும் என்பது ம. பொ. சி. அவர்கள் வாதம்.

உணவிற்காம் பொருள்களை, முந்திய நாள் இரவே கொடுத்து விட்டார்கள் என்பதற்கு மாறாக, உணவு, ஆக்கிப் படைத்த அன்று கொடுத்தார்கள் என்றும், உணவுண்டது விடியற் காலையில் என்பதற்கு மாறாக,

நண்பகற் போதில் என்றும் கொண்ட கருத்துக் குழப்பமே இதற்குக் காரணம். குரவை ஆடிய அன்றைய பால்தான் உறையவில்லை; நெய்தான் உருகவில்லை; அதற்கு முந்திய நாள் பால் உறையவில்லை; நெய் உருகவில்லை எனக் கூறப்படவில்லை. உணவிற்காம் பொருள்களை முந்திய நாள் இரவே கொடுத்து விட்டார்கள். அவை கொண்டு ஆக்கிய உணவை விடியற்காலையிலேயே உண்டான் என்று கொண்டால், பால் உறையாத போது நெய் உருகாத போது, தயிரும் நெய்யும் எவ்வாறு தந்திருக்க இயலும் என்ற வினா எழுதற்கே இடமில்லாமல் போகும்.

கோவலன் முதல்நாள் உணவுண்டு சென்று கொலையுண்டு போனான்; மறுநாள் பால் உறையாமை முதலாம் உற்பாதம் கண்டு ஆய்ச்சியர் குரவை ஆடினர் என்று கொள்வதில், இயற்கை நியதிக்கு ஒவ்வாத ஒரு முரண்பாடு இடம் பெறுவதை ம. பொ. சி. உணர்ந்திலர் போலும்.

உற்பாதங்கள், வரஇருக்கும் கேட்டினை உணர்த்த முன்கூட்டி நிகழ்வது இயற்கையே யல்லாது, கேடு வந்து விட்ட பின்னர் நிகழ்வது இயற்கை அன்று. புகார் நகரத்தில் கண்ணகி கண்ட தீக்கனவும், புறஞ்சேரியில் கோவலன் கண்ட தீக்கனவும் கொலை நிகழ்ச்சிக்கு முன் நிகழ்ச்சிகளாதல் அறிக. அது போலவே, பாண்டிமாதேவி கண்ட தீக்கனவும், பாண்டியன் உயிர் இழந்து வீழ்தற்கு முன் நிகழ்ச்சி ஆதலும் அறிக. "பாண்டி மாதேவி முன்னாள் இரவில், தான் கண்ட தீயகனவினை அரசர்க்கு உணர்த்த எண்ணி அரசவை புகுந்தாள்" [பக்கம்: 128] எனக் கூறுவதன் மூலம், திரு. ம. பொ. சி. அவர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்.

யானைக் கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் இறந்த போது, வருந்திப் பாடிய, கூடலூர்க் கிழார் என்ற புலவர், "வானத்திலிருந்து விண்மீன் ஒன்று வீழ்ந்தது. அதுகண்டு, யாருக்கு என்ன கேடு நேருமோ என அஞ்சியிருந்தோம். ஏழாம் நாள் வந்தது. அந்தோ! இரும்பொறை இறந்து போனான்—"

ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே;
அதுகண்டு, யாமும், பிறரும் பல்வேறு இரவலர்
அஞ்சினம், ஏழுநாள் வந்தன்று, இன்றோ
மேலோர் உலகம் எய்தினன்!"

—புறம்:229

எனக் கூறுவதிலிருந்தும், வரவிருக்கும் கேட்டினை அறிவிக்க உற்பாதங்கள் முன் நிகழுமே யல்லாது கேடு வந்துற்ற பின்னர் நிகழ்வதில்லை என்பது உறுதி செய்யப் படும். ஆகவே, பால் உறையாமை முதலாம் உற்பாதங் களையும், அவை கண்டு மேற்கொண்ட குரவைக் கூத்தையும், கோவலன் கொலைக்கு முந்திய நிகழ்ச்சி களாகக் கொள்வதே முறை.

குடப்பால் உறையாமை கண்ட மாதரி கூறுவதாக வரும் உரைப்பாட்டு மடையிலும், கருப்பத்திலும் நிகழ்ந்துவிட்ட நிகழ்ச்சியை உணர்த்தும் வகையில், "**வந்தது** ஒன்று உண்டு", **வந்ததோர்** துன்பம் உண்டு" என இறந்த காலம் குறித்து வாராமல், நிகழவிருக்கும் நிகழ்ச் சியை உணர்த்தும் வகையில், "**வருவது** ஒன்று உண்டு", **வருவதோர்** துன்பம் உண்டு" [சிலம்பு:17: உரைப்பாட்டு மடை] என எதிர் காலம் குறித்தே வந்திருக்கும் தொடர்களும், மேற்கூறிய கருத்திற்கு அரண் செய்து நிற்கின்றன.

"குடத்துப்பால் உறையவில்லை; உறியிலிட்ட வெண்ணெய் உருகாமலே நிற்கும் என்ற காரணத்தால், **வரக்கூடிய துன்பம் ஒன்றுண்டு என ஐயுற்றல்லவா ஆய்ச்சியர் குரவைக் கூத்து நிகழ்த்தி, வரவிருக்கும் துன்பத்தைத் தவிர்க்கத் திருமாலை வழிபடுகின்றனர்?"** [பக்கம் :137] எனக் கூறி, மேற்கூறிய கருத்தை ஓரிடத்தில் ஏற்றுக் கொள்ளும் ம. பொ. சி. யார், "குரவை நிகழ்ந்த முந்திய நாள் மாலையிலேயே கோவலன் கொலையுண்டு விட்டான்" [பக்கம்:125] எனக்கூறிப் பிறிதோரிடத்தில் குழப்புவது ஏனோ?

தான் படைத்த உணவுண்டு, காலையில் தன்னிடம் விடைபெற்றுச் சென்ற கணவனின் உயிரற்ற உடலைக் கண்ணகி மறுநாள் மாலைதான் கண்டாள் என்றால், அந்த ஒரு நாளில் அவள் நிலை என்ன? அதுபற்றி இளங்கோவடிகளார் யாதும் கூறவில்லையே ஏன்? என்ற வினா எழல் இயல்பே.

"கோவலன் விடைபெற்றுச் சென்ற பின்னர், அவன் கொலையுண்ட செய்தி அறியா நிலையிலேயே கண்ணகி ஒரு இரவை மாதரி இல்லத்தில் கழித்தாள்" [பக்கம்: 123] என்கிறார் ம.பொ.சி.

புகார் நகர் நீங்கி, மதுரைக்குப் புறப்பட்ட அந்நாள் தொட்டுக் கண்ணகி கோவலனை ஓர் இரவும் பிரிந்து இருந்தவள் அல்லள். அங்ஙனமாகக் கோவலனைச் சிலம்பு விற்கப் போகவிட்டு, ஒரு நாள் பகல், இரவு, மறுநாள் பிற்பகல் வரையும் பிரிந்திருந்தாளாகக் கூறுவதும், அதுவும் கணவன் கொலையுற்றதைக் குறிப்பால் அறிந்து கொள்ளும்வரை பிரிவுத் துயர் உறாது இருந்தாளாகக் கூறுவதும் அறவே பொருந்தா.

ம.பொ.சி. அவர்களும் இதை உணராமல் இல்லை. கோவலன் கொலையுண்ட மறுநாள்தான், கண்ணகி அவன் உடலைக் கண்டாள் என்ற தம் வாதத்திற்குத் தடையாகக், "குரவைக் கூத்துக்கு முதல் நாள் மாலையிலேயே கோவலன் கொலையுண்டான் என்றால், அன்றிரவில் பிரிந்துசென்ற கோவலன் வரக்காணாமைக்கு வருந்தாமல், அமைதியாகக் கழித்திருப்பாளா கண்ணகி? கழித்திருப்பாள் என்று நம்புவது கண்ணகியின் கற்புக்கு இழுக்குக் கற்பிப்பது ஆகாதா? என்றெல்லாம் கேட்கப்படுகிறது" [பக்கம் 135] எனக் கூறிவிட்டு, அதற்கு விடையாக, "கோவலன் தன்னைப் பிரிந்து சென்ற நாளில்—குரவைக் கூத்து நிகழ்வதற்கு முதல் நாளில்—இரவில், கண்ணகி உள்ளம் குலைந்தாள்; மனம் வருந்தி வெதும்பினாள்" [பக்கம் 135] என்று கூறி, அதற்கு ஆதாரமாக,

> " **காதலற்காண்கிலேன்**; கலங்கி **நோய் கைம்மிகும்**
> ஊதுலை தோற்க உயிர்க்கும் என்நெஞ்சன்றே;
> ஊதுலை தோற்க **உயிர்க்கும்** என்நெஞ்சாயின்,
> **ஏதிலார் சொன்னது எவன்?** வாழியோ! தோழீ!
>
> நண்பகற்போதே நடுக்குநோய் **கைம்மிகும்**
> **அன்பனைக் காணாது** அலவும் என் நெஞ்சன்றே;
> அன்பனைக் காணாது அலவும் என் நெஞ்சாயின்,
> **மன்பதை சொன்னது எவன்?** வாழியோ! தோழீ!
>
> தஞ்சமோ தோழீ! **தலைவன் வரக்காணேன்**
> வஞ்சமோ **உண்டு மயங்கும்** என் நெஞ்சன்றே;
> வஞ்சமோ உண்டு மயங்கும் என்நெஞ்சாயின்
> **எஞ்சலார் சொன்னது எவன்?** வாழியோ! தோழீ! "

என்ற இப்பாக்களைக் காட்டி, "இங்கு ஓர் இரவு கோவலன் வரத் தவறியமைக்கு, அந்த இரவில் அவள்

அடைந்த மனத்துயரம் அவளாலேயே விளக்கப்படுகிறது அன்றோ?" [பக்கம்: 136] என்ற வினா எழுப்பி முடித்துள்ளார்.

எடுத்துக் காட்டிய பாக்கள் மூன்றும், குரவை முடிவில் ஊர் அரவம் கேட்டு வந்த ஆயர் முதுமகள் ஏதும் சொல்லாடா நிலை கண்டு, கண்ணகி கலங்கிக் கூறியவை. இவை, குரவைக்கூத்து நிகழ்வதற்கு முற்பட்ட காலத்தில் முந்திய நாள் இரவில் கண்ணகி உற்ற துயரை உணர்த்துவனவாயின், "நோய் கைம்மிகும்", "நெஞ்சு உயிர்க்கும்", "நெஞ்சு அலவும்" என வந்திருக்கும் வினைச் சொற்கள் எல்லாம், "நோய் கைம் மிகுந்தது", "நெஞ்சு உயிர்த்தது", "நெஞ்சு அலவுற்றது" என இறந்த காலம் உணர்த்துவனவாக யிருத்தல் வேண்டும். ஆனால், அவை அனைத்தும் நிகழ்கால வினைச் சொற்களாகவே வந்துள்ளன.

மேலும், அவ்வினைச் சொற்கள், நோய் கைம் மிகுதலும், நெஞ்சு உயிர்த்தலும், அலவுறுதலும், மயங்குதலும் ஆகிய அவ்வினைகள், நிகழ்கால நிகழ்ச்சிகள் என்பதை மட்டும் உணரத்தான் துணை புரிகின்றனவே ஒழிய, அவை இரவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளா? பகலில் விளைந்த வினைகளா என்பதை உணரத் துணை புரியவில்லை. ஆகவே, கோவலனைப் பிரிந்திருந்த, குரவை நிகழ்வதற்குமுந்தியநாள் இரவில் கண்ணகி பிரிவாற்றாது வருந்தினாள் என்பதற்கு, இப்பாக்கள் சான்றாகமாட்டா.

கோவலனைப் பிரிந்து, கண்ணகி இரவில் வருந்திப் புலம்பினாள் என்பதற்குச் சான்று பகரும் செய்யுள் ஏதுவும் சிலப்பதிகாரத்தில் இல்லை. கோவலனைப் பிரிந்த இரவு இருந்திருந்தால் அல்லவோ, அவ்விரவில் கண்ணகி உற்ற பிரிவுத் துயரை இளங்கோ

அடிகளார் பாடியிருப்பர்? கோவலனைப் பிரிந்த இரவே இல்லை; ஆகவே, அவ்விரவில், அவள் உற்ற துயரைப் பாட வேண்டிய நிலை இளங்கோவடிகளார்க்கு வாய்க்க வில்லை.

"கோவலன் கொலையுண்ட செய்தியைத் தெளிவாக அறியுமுன்னரே, அதனை அறிவிக்கும் நோக்குடன் தன் எதிரே வந்து திகைத்து நிற்கும் ஆய்ச்சியைப் பார்த்து வாய்விட்டு அரற்றி, அழுகின்றாள் கண்ணகி"(பக்கம்: 138) எனக் கூறி, இச்செய்யுட்களில் வெளிப்படும் கண்ணகி துயரம், குரவை முடிவில் அவள் உற்ற துயரமே என உறுதிப்படுத்தும் ம. பொ. சி., அடுத்த வாக்கியத்தில், இவற்றைக் கோவலனைப் பிரிந்திருந்த முந்திய இரவில் கண்ணகி உற்ற துயரத்தைக் குறிப்பதாகக் கொண்டு மயங்குவது ஏனோ?

மேலே கூறிய பாக்கள், கோவலன் மதுரை சென்ற பிறகு, **தனித்திருந்த இரவில்** [பக்கம்: 135] கண்ணகி உற்ற துயரைக் குறிக்கின்றன என ஓரிடத்திலும், **குரவை முடிவில்,** [பக்கம் : 136] கோவலன் கொலையுண்டதைக் குறிப்பால் அறிந்து கொண்ட நிலையில், கண்ணகி உற்ற துயரைக் குறிப்பதாக மற்றோரிடத்திலும் கூறும் ம. பொ. சி. அவர்கள், "நண்பகற்போதே நடுக்கு நோய் கைம்மிகும்; அன்பனைக் காணாது அலவும் என் நெஞ்சு அன்றே" என்ற வரிகளும், அவற்றிற்குக், "கோவலன் போன போதே தன் நெஞ்சு கலங்குதலால், நண்பகற் போதே என்றாள்" என அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையும், கோவலன் சிலம்பு விற்கச் சென்றது முற்பகல் நேரம் என்பதனை உறுதிப்படுத்தும்" [பக்கம் : 138] எனக் கூறி, இப்பாக்கள் **கோவலன் விடைபெற்றுச் சென்ற போது,** கண்ணகி கலங்கிய கலக்கத்தை உணர்த்துவன வாகவும் கொண்டு மேலும் குழம்பியுள்ளார்.

புறஞ்சேரியில் இருந்தபோது, மாநகர் காணக் கோவலன் சென்ற போது, கண்ணகி கலங்கவில்லை; காலை முரசம் கனை குரல் எழுப்பச் சென்றவன், மாலை தான் திரும்பினான்; என்றாலும் கலங்கவில்லை. காரணம் வாழும் வகை காணவே செல்கிறான் என்பதால், புதிய இடத்திற்கு முதன் முறையாகச் சென்றபோதே கலங்காதவள், அறிந்த இடத்திற்குச் செல்லும் போது, அதுவும், இவள் கணவன் தந்தை பெயரைக் கேட்ட அளவே, கிடைத்தற்கரிய விருந்தினனாக மதித்துத் தம்மை வரவேற்றுக் கடிமனைப் படுத்தும் நல்லோர் எனக் கௌந்தி அடிகளால், தன் காது கேட்க மாதரியிடம் கூறப்பட்டவர் இடத்திற்குச் செல்லும் போது, அதுவும், சிலம்புவிற்றுப் புதுவாழ்வு காணும் முயற்சி மேற்கொண்டு செல்லும் போது கலங்குவதற்குக் காரணமே இல்லை. அவ்வாறாகவும், **"கோவலன் போன போதே தன் நெஞ்சு கலங்குதலால் நண்பகற் போதே என்றாள்"** என அடியார்க்கு நல்லார் கூறுவது பொருந்தாது. **"நண்பகற் போதே நடுங்கும்"** என்ற தொடர், நடுங்கிய நேரம், **நண்பகற் போது என்பதை மட்டும் உணரத்தான் துணை புரிகிறதே அல்லாது, "கோவலன் போன போதே கலங்கினள்" என்பதை உணர்த்த அத்தொடரில் இடம் இல்லை.**

மேலும், ஊர் அரவம் கேட்டு வந்து சொல்லாடாது நின்ற மாதரியைப் பார்த்துக் கலங்கிப் புலம்பும் கண்ணகி, "காதலற் காண்கிலேன்" என்ற காரணத்தைத் தொடக்கத்தில் கூறிவிட்டுத்தான் "கலங்கி நோய் கைம் மிகும்" என்று கலங்குவதைக் கூறியுள்ளாள். அது போலவே, அடுத்து வரும் பாக்களிலும், "அன்பனைக் காணாது அலவும்," "தலைவன் வரக் காணேன்" என வரும் தொடர்கள், சென்ற கணவன்வரக் காணாமையால் கண்ணகி கலங்கினாள் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. ஆகவே, கண்ணகி கோவலனுக்கு விடை

கொடுத்து அனுப்பிய போது கலங்கவில்லை; கொலைச் செய்தியைக் குறிப்பால் அறிந்து கொண்ட நண்பகற் போதிலேயே கலங்கினாள் என உணர்க.

கோவலன் கொலையுண்டது, பொற்கொல்லன் சிறுகுடிலை அடுத்திருந்த ஒரு தேவ கோட்டம். அது மதுரை மாநகரில், பெருவாணிகம் நிகழும், மக்கள் நடமாட்டம் மிக்க இடமாதல் வேண்டும். மேலும், மதுரை ஒருபெருநகரமாதலின் அங்குக் கம்பலை மாக்கள் பெருகியிருப்பர் என்பதில் ஐயம் இல்லை; கம்பலை மாக்களாவார், "வேறு சில காட்சி கண்டு திரியுமவர்" என்கிறார் அடியார்க்கு நல்லார்; கோவலன் உடலை அக்கம்பலை மாக்களே கண்ணகிக்குக் காட்டினர். "கம்பலை மாக்கள் கணவனைத் தாம் காட்ட, செம்பொற் கொடியனையாள் கண்டாள்" என்கிறார் இளங்கோவடிகளார். மேலும் கொலைச் செய்தியை இளங்கோவடிகளார் "ஊர் அரவம்" என்கிறார். அரவம் என்றால் பேரொலி என்பது பொருளாம். ஆகவே கொலைப் பேச்சு மக்கள் அனைவராலும் பேசப்பட்டது எனத் தெரிகிறது. ஆகவே, கம்பலை மாக்கள் நிறைந்த ஒரு மாநகரத்தில், மக்கள் நடமாட்டம் மிக்க ஓரிடத்தில், நிகழ்ந்து விட்ட ஒரு கொலை நிகழ்ச்சி,இது நிகழ்ந்த சிறு பொழுதிற்கெல்லாம் நகர் முழுதும் பரவியிருக்கும். அங்ஙனமாக, அன்று பகலும், இரவும் தெரியாதிருந்தது; மறுநாள் பிற்பகல் நண்பகற் போதில்தான் தெரிந்தது என்பது நம்பக் கூடாதது ஒன்று.

ஆயர்பாடி விட்டுப் புறப்பட்ட கோவலன், தாதெரு மன்றம் கழித்து, மாதர் வீதி மறுகிடை போய், பீடிகைத் தெருவில் அடியிட்டதும், பொற்கொல்லனைக் கண்டு கொண்டான். ஆகவே, பொற்கொல்லன் சிறுகுடில் இருந்த இடம், ஆயர்பாடிக்கு வெகு தொலைவில் இருந்

திருக்காது; அண்மையிலேயே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் கோவலன் கொலைச் செய்தி விரைந்து பரவ, குரவை முடிவில் நெடுமால் அடியேத்தத் துறை படியப் போன மாதரி, அச்செய்தி கேட்டு விரைந்தோடி வந்தாள்.

வந்த மாதரி கலக்க மிகுதியாலும், துணிவு இல்லாமையாலும், தன்வாய்ப்பட, வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும், ஊரார் பேசிக் கொள்வதைக் குறிப்பால் உணர்த்திவிட்டாள். அதனால்தான் கண்ணகிக்கு ஐயமும், அதைத் தொடர்ந்து அந்நண்பகற்போதில் கலக்கமும் பெருக, "ஏதிலார் சொன்னது என்ன?", "மங்பதை சொன்னது என்ன?", "எஞ்சலார் சொன்னது என்ன?" எனக் கேள்விக் கணைகளைத் தொடுத்து நின்றாள். இனியும் மறைத்துப் பயனில்லை என்பதால், மாதரி நிகழ்ந்ததைக் கூறிவிட்டாள். ஆக, குரவை ஆட்டமும், கோவலன் கொலையும் ஒருநாள் நிகழ்ச்சிகளே என்பது இதனாலும் உறுதி செய்யப்படுகிறது.

கோவலன் கொலையுண்ட மறுநாள் மாலையில்தான் கண்ணகி கோவலனைக் கண்டாள் என்று கொண்டு விட்டதனால், "கண்ணகி காணும்போது, இரத்தம் கொப்புளித்திருக்க முடியாது; ஆனால், ஆசிரியர் அவ்வாறு கூறியது, வரலாற்று ஆசிரியர்கள் மனப்போக்கில் அன்று; கற்பனைத் திறம் படைத்த கவிஞனுடைய உளப்போக்கில் ஆகும்" (பக்கம்: 141) எனக் கூறி, இளங்கோவடிகளின் வரலாற்று அறிவிற்கு மாசு கற்பிக்க முனைந்துள்ளார் ம. பொ. சி.

கோவலன் நண்பகற் போதில் கொலையுண்ண, அன்று மாலையே, கண்ணகி அவனைக் கண்டதனால்தான் குருதி கொப்புளிக்கும் நிலையில் காண முடிந்தது.

கண்ணகி காணும்போது, வாள் பாய்ந்த புண்ணிலிருந்து குருதி கொப்புளித்துக் கொண்டிருந்தது உண்மை. கண்ணகி "புண் தாழ்குருதி புறஞ்சோரக்"(சிலம்பு: 19:37) கண்டாள் எனப்பாடித் தம்வாயால் கூறியதோடல்லாமல் "புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ" (சிலம்பு: 19 : 48) என அக்காட்சியைக் கண்டு புலம்பியதாகப் பாடிக், கண்ணகி வாயாலும் கூறியுள்ளார். ஆகவே, கோவலன் கொலையுண்ட அன்று மாலையே, கண்ணகி அவன் உடலைக் கண்டாள் என்பதும், அதன் தொடர்பாக ஆய்ச்சியர் குரவை நிகழ்ந்த அன்றே கொலையும் நடைபெற்றது என்பதும், இதனாலும் உறுதி செய்யப்படும்.

கோவலன் சாவக நோன்பியாதல் அறிந்து அடிசிற் பொருள்களை ஆயர் மகளிர் அன்றிரவே அளிக்க, அவை கொண்டு, கண்ணகி, விடியற் போதிலேயே உணவாக்கிப் படைக்க, அது உண்டு கோவலனும், காலையிலேயே விடைபெற்றுச் செல்ல, மாதரியும் மற்றவரும் அக்காட்சி கண்டு மகிழ்ந்திருந்த நிலையில், காலை முரசம் இயம்ப, அது கேட்டு மாதரி நெய்ம்முறை உணர்ந்து, அது மேற்கொள்ள முனைந்தவள், பால் உறையாமை கண்டு, கேடு வரும் என அஞ்சி, அது தீரக் குரவை ஆடப்பணித்தாள்.

குரவை ஆட்டத்தைக் காலையிலேயே தொடங்கி விட்டாலும், ஆடவும் பாடவும் வல்ல ஆயர் மகளிரைத் தேர்ந்தெடுக்கவும், அவர்களை ஆடரங்கில் நிற்க வேண்டிய நிலைகளில் நிற்க வைக்கவும், பின்னர்க் கூத்தின் ஒரு கூறும் விடாதபடி, முழுமையாக ஆடியும் பாடியும் முடிக்க நண்பகற்போது ஆகியிருத்தல் கூடும்.

ஆயர்பாடியில் அது நிகழ்ந்துகொண்டிருக்கும் போது கோவலன் பொற்கொல்லனைக் கண்டு, சிலம்பு விற்க

வேண்டலும், பொற்கொல்லன் அரசனைக் கண்டு, கோவலனைக் கள்வன் எனக் கூறலும், அரசன் ஆணை பிறப்பித்தலும் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்று, இறுதியில் கோவலன் கொலை செய்யப்படுதல் குரவை முடிவிற்குச் சற்று முன்னாக நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு கொள்வதால், கோவலன் உணவுண்டு சென்று கொலையுண்டு போதலும், ஆய்ச்சியர் குரவை ஆடலும், கண்ணகி கொலையுண்ட கணவனைக் காணலும் ஆகிய இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒருநாள் நிகழ்ச்சிகளே என்பதற்குத் தடையாகக் கூறக் கூடியது எதுவும் இல்லை என்பதும், அதனால், காலையில் கணவனைத் தழுவி, அவன் முடி மாலையைத் தன் கூந்தலில் சூட்டிக் கொண்டவள், அன்று மாலையே கணவனின் கொலையுண்ட உடலைக் கண்டாள்.

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல் மேல்
கொண்டாள் தழீஇக்கொழுநன்பால், காலைவாய்ப்
புண்தாழ் குருதி புறம் சோர மாலைவாய்க்
கண்டாள், அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்"

எனக் கூறுவதில் எந்த விதமான முரண்பாடும் இல்லை என்பதும், ஆகவே, இளங்கோவடிகளார் மறந்தும் அடிசறுக்கிப் போகவில்லை; மாறாக, விழிப்போடிருந்து அடி ஊன்றி நின்றே நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார்: சொற்களையும் ஆண்டுள்ளார் என்பதும் உறுதி செய்யப் படுவது அறிக.

மாதவி தொடர்பாகவே பொருளழித்து வறுமையுற்றுக் கைப்பொருள் இழந்து நிற்கும் நிலை கோவலனைக் கானல் வரிக்கு முன்பே அலைக்கழிக்கத் தொடங்கிவிட்டதை மாதவியும் உணர்ந்திருந்தாள் என தெ.பொ.மீ. அவர்கள் கூறுவது பொருந்துமா?

"குளிப்பதற்குக் கொள்ளைப் பொன்; அணிவதற்கும் ஆயிரம் ஆயிரம்; அம்மம்ம! செலவினை எப்படிக் கணக்கிடுவது?" [பக்கம் :4]

"பொழிலாட்டும் நாண்மகிழ் இருக்கையும் பூமலி கானத்துப் புதுமண நுகர்வும், நகையாடாயமும், பாணருடனும், பரத்தருடனும் திளைத்து வருதலும் எல்லாம் பகட்டே ஆம். பகட்டு என்றால் பண ஓட்டந்தானே?" [பக்கம் :3]

"காமக்களி மகிழ்வு, பொழிலாட்டு, நாண் மகிழ் இருக்கை, புதுமணம் புகுதல், நகையாடாயத்து நன்மொழி திளைத்தல் என்ற வகையில், பாணரொடும் பரத்தரொடும் திரிவதே மாதவிச் சூழலில் கோவலன் இயல்பாயிருக்கிறது. இதைத்தானே மாதவியும் காண்கிறாள்?" [பக்கம் : 52]

"எதனையும் எதிர்த்துப் போராடும் உறுதி படைத்தது மாதவியின் மனம்; பரத்தை வாழ்வை மறுத்துக் கற்பு வாழ்வை மேற்கொண்டு, தாயையும் எதிர்த்தது

மாதவியின் மனம்;...ஆனால் அவளது அத்தகைய எதிர்ப்பு, ஆரவாரத்தை எதிர்க்க, கானல் வரி பாடும் வரை இன்னமும் எழவில்லை.'' [பக்கம் : 3]

''கைப் பணம் இல்லாத கலக்கம், அவனுடைய காதல் வாழ்வைச் சிதைக்கத் தொடங்கியது என்பதில் ஐயம் நமக்கு எழுவதற்கு இடம் இல்லை.'' [பக்கம் : 2]

''கைப் பணம் இல்லாத போது கசப்பெழுந்ததும், கைப்பணம் கேட்கும் சூழலையே கசந்து கொள்கிறான் கோவலன்...வாழ்க்கைக்கு வழி என்ன என்று கலங்கிப் புண்பட்ட கோவலன் மனம், இவ்வாறெல்லாம் கானல் வரிக்கு முன் ஊசலாடுகிறது.'' [பக்கம் : 32]

''கைப் பொருள் இன்மையே கோவலன் கருத்தைக் கலக்குகிறது ..மாதவிக்குத் தெரியுமா இந்த மனப் புழுக்கம்?'' (பக்கம் : 1]

''கோவலன் செல்வத்தை இழந்த நிலையை நாம் அறிவோம். அதனைப் பற்றி மாதவியும் எண்ணியிருத்தல் வேண்டும். மாதவியிடம் குறிப்பாக அவன் சுட்டி யிருக்கலாம்.'' [பக்கம் : 237]

''கானல்வரி'' என்ற தம் நூலில் தெ.பொ.மீ. அவர்கள் சிதற விட்டிருக்கும் அவர் எண்ணங்கள் இவை. இவ்வாறெல்லாம் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதன் மூலம், தெ.பொ.மீ. அவர்கள் 1. மாதவிக்காகச் செல விட்டே கோவலன் வறியனாகி விட்டான். 2. கோவலன் வரையறை யற்றுச் செலவழிப்பதை மாதவியும் அறிந் திருந்தாள். 3. ஆனால் கோவலனின் அவ்வாரவார வாழ்க்கையை அவள் எதிர்க்கவில்லை. 4. கைப் பணம் இல்லாமை கோவலன் காதல் வாழ்வைச் சிதைக்கத் தொடங்கி விட்டது. கானல்வரிக்கு முன்னரே,— வாழ்க்கைக்கு வழி என்ன என்று கலங்கிப் புண்பட்டு

விட்டது கோவலன் மனம். 5. இதை மாதவியிடம் கோவலன் குறிப்பாகச் சுட்டியிருக்கலாம்; கோவலன் செல்வம் இழந்த நிலையை மாதவியும் எண்ணியிருத்தல் வேண்டும் என்ற முடிவுகளைக் கொண்டுள்ளார் எனத் தெரிகிறது.

"குளிப்பதற்கும் கொள்ளைப் பொன்! அணிவதற்கும் ஆயிரம் ஆயிரம்! அம்மம்ம! செலவினை எப்படிக் கணக்கிடுவது?" [பக்கம்: 4] எனக் கேட்பதன் மூலம், கோவலன் பொருள் அழிவிற்குக் காரணம், மாதவியின் குளியலும், கோலங்கோடலுமே எனக் கொண்டுள்ளார் தெ.பொ.மீ. எனத் தெரிகிறது.

"அணிவதற்கும் ஆயிரம் ஆயிரம்!" என்பதற்குச் சான்றாக, மாதவி கோவலனோடு கலந்து கொண்ட கடைசி இந்திர விழாவின் போது, ஊரெல்லாம் காண அவள் ஆடியதனால் கொண்ட பொறாமையால் வந்துற்ற வெறுப்பு காரணமாக, ஊடல் கோலமோடு இருந்த கோவலனுக்குக் கூடலும், ஊடலும் அளித்து மகிழ்விப்பதற்கு முன்னர்க் குளித்துக் கோலங்கொண்டதைக் கூறும்,

"ஊடற்கோலமோடு இருந்தோன் உவப்பப்
பத்துத் துவரினும், ஐந்து விரையினும்,
முப்பத்து இருவகை ஓமாலிகையினும்,
ஊறின நன்னீர், உரைத்த நெய்வாசம்,
நாறிருங்கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையிற் புலத்திய பூமென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி
அலத்தகம் ஊட்டிய அம்செஞ் சீறடி,
நலத்தகு மெல் விரல்நல்லணி செறீஇப்,
பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை,

அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து
குறங்கு செறி திரள் குறங்கினில் செறித்து,
பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇக்
காமர்கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித்தோள்வளை தோளுக்கு அணிந்து,
மத்தக மணியொடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொற்கைவளை
பரியகம் வால்வளை பவழப்பல்வளை
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து,
வாளைப்பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத்தாள்செறி
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து,
சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண், புனைவினை
அங்கழுத்து அகவையின் ஆரமொடு அணிந்து,
கயிற்கடை ஒழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையின் சிறுபுறம் மறைத்துஆங்கு,
இந்திர நீலத்து இடையிடைதிரண்ட
சந்திரபாணி, தகைபெறு கடிப்பிணை
அங்காது அகவையின் அழகுற அணிந்து,
தெய்வஉத்தியொடு செழுநீர் வலம்புரி
தொய்யகம், புல்லகம் தொடர்ந்த தலைக்கணி
மையீர் ஓதிக்கு மாண்புற அணிந்து,
கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்"

—கடலாடு காதை : 75-110

இவ்வரிகளைக் காட்டியுள்ளார். இவ்வரிகளைச் சான்று காட்டியதன் மூலம், அவ்வரிகளில் கூறப்பட்டிருக்கும் கால் விரல் மோதிரம் முதல், புல்லகமாம் தலைக்கணி வரையான முப்பதுக்கும் மேற்பட்ட அணி வகைகளில்,

எந்த ஒரு அணியையும், கோவலன் உறவு கொள்வதன் முன்னர், மாதவி பெற்றிருக்கவில்லை; அவை அனைத்தும் கோவலன் கொடுத்தனவே. இவ்வாறு மாதவிக்குக் கொடுத்துக் கொடுத்தே, கோவலன் வறியனாகி விட்டான் என்பது அவர் கருத்தாதல் தெரிகிறது.

ஆனால், அரங்கேற்றுக் காதையும், அந்திமாலைச் சிறப்புச் செய் காதையும் காட்டும் மாதவிக் காட்சி, தெ. பொ. மீ. கூற்றுக்கு அரண் செய்வதாக இல்லை.

அரங்கேறுவதற்கு முன்னர், தன் மூல மரபுப்படி மாதவி வழிபட்ட தலைக்கோல், கணுக்கள் தோறும் நவமணிகள் இழைக்கப்பட்டு, இடைப்பகுதி சாம்பூநதம் என்னும் பொன் தகடால் கட்டப்பட்டது எனக்கூறுகிறது அரங்கேற்றுக் காதை. “கண்ணிடை நவமணி ஒழுக்கி, மண்ணிய நாவலம் பொலந் தகட்டு இடைநிலம் போக்கி” [116-117] என்ற வரிகளைக் காண்க. மேலும் அதே அரங்கேற்றுக் காதையில், ஆடி முடித்து நின்ற மாதவியைக் கூறுங்கால், ஆடி அடங்கி நின்ற பொன்னால் பண்ணப்பட்ட ஒரு பூங்கொடியாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். “பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக் காட்டினள்” [157-159] என்ற வரிகளைக் காண்க. ஆக, அவள் தலைக் கோல் அமைப்பும், பொற்கொடி ஆடி நின்றாற் போலும் அவள் தோற்றமும், கோவலன் உறவு கொள்வதற்கு முன்பே, மாதவி செல்வச் செழிப்பில் வாழ்ந்தவள் என்பதை உறுதி செய்கின்றன.

அது மட்டுமன்று. கோவலன் ஊடல் தணிக்க மாதவி கடைசியாகக் கொண்ட கோலத்தையும், மாலை வாங்கித் தன் மனை புகுந்த கோவலனுக்குத் தன்மனையகத்து நிலவுப் பயன்கொள்ளும் நிலா முற்றத்தில் முதன் முதலாகக் கலவியும், புலவியும் அளித்த போது கொண்ட

மாதவி கோலத்தையும் ஒப்பு நோக்கின், கடைசியாகக் கோலங் கொண்ட போது அணிந்திருந்த அணிகலன்கள் அவ்வளவையும் கோவலன் மகிழ, முதன் முதலாகக் கோலங் கொண்ட போதும், மாதவி அணிந்திருந்தாள் என்பது தெளிவாகும்.

கடலாடு காதையில் கூறுவது போல், அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையில் பாதாதி கேசமாக மாதவி அணிந்திருந்த அணிவகைகள் அனைத்தையும் கூறாமல், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல்மேகலை ஒன்றை மட்டுமே கூறியுள்ளார் ஆசிரியர். அது ஒன்றைக் கொண்டே, கோவலன் உறவு கொள்வதற்கு முந்தைய மாதவியின் செல்வ வாழ்வை உணர்ந்து கொள்ளலாம்.

கானல் வரிப் பாடலுக்கு முன்பாகக், கடலாடச் செல்வதன் முன்னர்க் கோவலன் ஊடல் தவிர்த்துக் கூடல் களிக்கக் கோலங் கொண்ட போது, மாதவி அணிந்து கொண்ட மேகலை முத்துக்களால் ஆனது: "பிறங்கிய முத்தரை முப்பத்து இரு காழ் நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ" (கடலாடு 87-88). ஆனால், கோவலனுக்குக் கலவியும் புலவியும் முதன் முதலாக அளித்த போது, அவள் அணிந்திருந்த மேகலை, முத்தினும் உயர்ந்ததான செம்பவளத்தால் ஆனது. "செந்துகிர்க் கோவை சென்றேந்து அல்குல் அந்துகில் மேகலை அசைந்தன வருந்த" (அந்திமாலை 29.30).

ஆக, கோவலன் உறவு கொள்வதற்கு முன்பே, மாதவிபால், பவளத்தால் ஆன மேகலை போலும் மகளிர்க்கு வேண்டும் அணிகள் பலவும் இருந்தன என்பது இவ்வொப்புக் காட்டால் உறுதியாகிறது. ஆகவே கோவலன் மாதவிக்குக் கொடுத்தே வறியனாகிவிட்டான்

என்பதற்குக் கடலாடு காதையில், மாதவி அணிந்திருந்த அணிகளின் பட்டியலைக் காட்டி முடிவு செய்வது முறையாகாது.

கோவலன், மாதவி உறவு கொண்டதினாலேயே வறியன் ஆகிவிட்டான் என்பதற்குக் "கணிகையொடு ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுற" எனப் பதிகத்தில் (15-16) கூறியிருப்பதைக் காட்டி ஆசிரியரைச் சான்றுக்கு அழைக்க எண்ணக் கூடும்.

இது, ஆசிரியர் கூற்று அன்று; சீத்தலைச் சாத்தனார் கூறியது. ஆசிரியர் கூற்று என்றே கொண்டாலும், அது கூறிய ஆசிரியரே, அவன் கடலாடச் செல்லும் போது, இராச வாகனமாம் அத்திரி ஏறிச் சென்றான் என்றும், அந்நிலையிலும், அவன் வானம் போல் வரையாது வழங்கும் வள்ளலாகவே வாழ்ந்திருந்தான் என்றும், கூறியுள்ளார். "வான வண்கையன் அத்திரி ஏற" (கடலாடு: 119) என்ற வரியையும், "இராச வாகனமாகிய அத்திரி" என்ற அடியார்க்கு நல்லார் உரையினையும் காண்க; இதனால், அவர் பதிகத்தில் கூறியது வலுவற்றுப் போய் விடுவது உணர்க.

"கணிகையொடு ஆடிய கொள்கையின் அரும்பொருள் கேடுற" என ஆசிரியர் கூறியது மட்டுமன்று; "சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக் குலந்தரு வான் பொருட்குன்றம் தொலைந்த இலம்பாடு" (கனாத் திறம் 69-71) எனக் கோவலனே கூறியுள்ளான். ஆகவே, கோவலன் பொருள் அழிவுக்கு மாதவியே காரணம் என்பதற்கு வேறு சான்று வேண்டா என வாதிடல் கூடும்.

ஆனால், கூறியவன் பரத்தையாம் மாதவியோடு உறவு கொண்டிருந்து விட்டுப் பல்லாண்டு கழித்தே மனைக்குத் திரும்பியவன் என்பதையும், கூறுவது மனைவியாம் கண்ணகியிடம் என்பதையும் கருத்தில்,

கொண்டே, அவன் கூறுவதை மதிப்பிடல் வேண்டும். இது ஆடவர் தம் மனைவியர் முன்னிலையில் வழக்கமாக வாரி வீசும், பரத்தையர் மீதான வசைமாரி.

"அணைபோலும் மெத்தென்ற தோளினை உடையாய்! செய்யாத ஒரு செயலை, நான் செய்ததாகக் கூறிச் சினப்பதற்கு நான் செய்த குறைதான் யாது? என்மீது ஐயுற்று என்னைக் கோபியாதே; தவறு செய்யாதவன் நான் என்பதைத் தெய்வச் சான்றாகக் காட்டவும் செய்கின்றேன்:—

"அணைமென் தோளாய்! செய்யாத சொல்லிச்
சினவுவது ஈங்கு எவன்?
ஐயத்தால் என்னைக் கதியாதி; தீது இன்மை
தெய்வத்தால் கண்டி, தெளிக்கு"

—மருதக்கலி: 26-6-8.

என்றெல்லாம் தன் மனைவியிடம் கூறுகிறான், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டிருந்துவிட்டுத் தன் மனைக்கு வந்த ஓர் ஆடவன்.

பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு மனை திரும்பிய மற்றொருவன், மனையாள் ஐயத்தைப் போக்க, "புனைந்து அழகு செய்யப் பெற்ற அழகிய கூந்தலை உடையளாய, என்னோடு தொடர்புடையவளோ என உன்னால் ஐயுறப் பட்டவளோடு, நான் அத்தகைய தொடர்புடையேன் ஆயின், பலியாக உயர்ந்தனவற்றையே கொள்ளும் கொடிய தெய்வம் என்னை வருத்துவதாக!" என அஞ்சாது பொய்ச் சூள் உரைக்கவும் துணிந்துள்ளான்.

"உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிரும் கதுப்பின் நீகருத் தோள்வயின்
அனையேனாயின் அணங்கேக என்என
மனையோள் தேற்றும்."

—அகம்: 166: 7-10.

பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டிருந்து விட்டு, மனை வந்து, கணவன்மார் பொய்ச்சூள் கூறி, அதை மறைக்க, மறுக்க முயலினும், அவர்தம் மனைவியர், அவர் கூறுவதை நம்புவதில்லை.

நான் அத்தகைய தவறு செய்திலேன் எனக்கூறிய ஒருவனைப்பார்த்து, 'பரத்தையர் ஒழுக்கம் கொண்டவன் நொந்து கொள்ளத்தக்கவன்' என்று உன்னை வெறுத்து, உன் ஒழுக்கக் கேட்டை, என்பால் வந்து கூறுவார் இல்லாதபோது வேண்டுமாயின், தீதிலேன் நான் என்று என்னிடம் வந்து கூறி, என்னைத் தெளிவிக்க வருக எனக் கணவன் கூற்றை நம்ப மறுக்கும் இல்லத்தரசி ஒருத்தி கூறுவது காண்க.

" நோதக்காய் என நின்னை நொந்தீவார் இல்வழித்
தீதிலேன் யான் எனத் தேற்றிய வருதிமன் "

—மருதக்கலி: 8: 6—7

பரத்தையர் ஒழுக்கம் அறியேன் எனக்கூறும் கணவன் கூற்றை நம்ப மறுப்பது மட்டுமல்லாமல், அவ்வாறு கூறும் அவனும் பொய்யன், அவனுக்காகத் தூது வரும் அவன் பாணனும் பொய்யன் எனக் கடிந்துரைப்பதும் செய்வர். உன்னைக் காட்டிலும் உன் பாணன் பொய் சொல்வதில் வல்லன். பல பொய்ச்சூள் உரைப்பதிலும் வல்லன். "பாணர் ஊர! நின்னினும் பாணன் பொய்யன்: பல சூளினனே!" (ஐங்குறு நூறு: 43) என்றும், "நீ தூது அனுப்பிய ஒரு பாணன் பொய்யன் என்பது தெளிவாகி விடவே. உன்னால் கைவிடப்பட்ட என்போல்வார்க்கு

ஊரில் உனக்குத் துணையாய் உள்ள பாணர் அனை வருமே, உனக்குத் துணை போகும் கள்வராகவே தோன்றுகின்றனர். "ஒரு நின் பாணன் பொய்யன் ஆக, உள்ள பாணரெல்லாம் கள்வர் போல்வர், நீ அகன்றி சினோர்க்கே" (குறுந்: 127) என்றும் கூறும் இல்லத்தரசி யரும் உள்ளனர்.

அது மட்டுமன்று. பரத்தையர் ஒழுக்கம் கொள்ளும் ஆடவர், தம் ஒழுக்கத்தை அறிந்து கொண்டுள்ளனர் தம் மனைவியர் என்பதை அறிந்ததுமே, அவர் முன் நடு நடுங்கிப்போவர். அவ்வச்ச மிகுதியால் அவர் ஆட்டியபடி யெல்லாம் ஆடவும் செய்வர். பரத்தையர் உறவு கொள்ளும் அவ்வாடவர் செயலை உற்ற மனைவியரும், ஊராரு மட்டுமல்லாமல், அவனோடு உறவு கொண்ட பரத்தையரும் எடுத்துக்கூறி எள்ளி நகையாடுவர்.

ஐவகையாகப்பின்னி ஒப்பனை செய்யப்பட்ட மணம் கமழும் தன் கூந்தலைப்பற்றி உறவும் கொண்டுவிட்டு, அழகிய வேலைப்பாடமைந்த தன் கை வளை கழலப் பிரிந்துதுயர்செய்தமையால் வெறுப்புற்றுச்சினங்கொண்டு அவனை நோக்கி, "உன் செயலை உன் மனையாளுக்கு இப்போதே சென்று உரைக்கின்றேன் பார்" என்று சொல்லிய அளவில் அந்நல்லவனுக்கு ஏற்பட்ட நடுக்க நிலையை, "நினைந்து நினைந்து நகுகின்றேன் யான்" எனக் கூறி, அவனை எள்ளி நகையாடுகிறாள் ஒரு பரத்தை.

"உள்ளுதொறும் நகுவேன் தோழி!...ஊரன்
தேங்கமழ் ஐம்பால் பற்றி என் வயின்
வான்கோல் எல்வளை வெளவிய பூசல்
சினவிய முகத்துச் சினவாது சென்று, நின்
மனையோட்கு உரைப்பல் என்றலின்......
நன்னராளன் நடுங்க ஓர் நிலையே!"

(நற்றிணை: 100)

"நம் வீட்டில் இருக்கும்போது, தன் செல்வச் சிறப்பு மனைவிக்கு அஞ்சாத் தன் ஆண்மை போலும் பொய்ப் பெருமைகளைக் கூறுபவன், தன் மனைக்குச் சென்றதுமே, மகவீன்று கிடக்கும் மனைவியிடும் ஆணைகளை யெல்லாம், அவள் ஏவும் ஏவல்களை யெல்லாம், கண்ணாடி முன் நின்று, நாம் கையைத் தூக்கினால், தானும் கையைத் தூக்கியும், நாம் காலைத் தூக்கினால். தானும் காலைத் தூக்கியும், நாம் செய்வதையே செய்து காட்டும் கண்ணாடிப் பாவைபோல், அவள் ஆட்டியபடி யெல்லாம் ஆடிக்கிடப்பன்" எனக் கூறி அவன் செயலை எள்ளி நகையாடுகிறாள் பிறிதொரு பரத்தை.

"எம்மில் பெருமொழி கூறித், தம்மில்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே."

குறுந்: 8

பரத்தையர் ஒழுக்கம் உடைய ஆடவரின் இவ்வியல்பினைக் கண்ணகியும் அறிவாள். அதனால், "சலதியொடு ஆடிக் குலம் தரும் வான் பொருள் குன்றம் தொலைந்த இலம்பாடு நாணுத்தரும்" என்ற கோவலன் கூற்றும், அது போன்றதே எனக் கொண்டாள். தன் உள்ளத்தில் கொண்ட அக்கருத்தை, மேலே கூறிய இல்லத்தரசியர், வாய்விட்டுக் கூறியது போல் அல்லாமல், நாகரிகமாகப் புன்முறுவல் காட்டிக், கூறாமல் கூறியுள்ளாள். அதனால் தான், நாணுத் தரும் எனக் கூறியதை அடுத்து, "நலங்கேழ் முறுவல். நகைமுகம்" காட்டினாள் கண்ணகி -[கொலைக்களக்காதை அல்ல: கனாத்திறம்: 72]

ஆக, சலதியோடு ஆடித் தொலைத்த இலம்பாடு நாணுத்தரும் எனக் கோவலன் கூறியதைக் கண்ணகி நம்பவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே, மாதவி

யோடு ஆடியே, கோவலன் வறுமையுற்றான் என்பதற்குச் "சலதியொடு ஆடிக் குலந்தரும் வான்பொருள் குன்றம் தொலைந்த இலம்பாடு" என்ற கோவலன் வாக்குமூலமும் சான்றாக அமைதல் இயலாது.

ஆக, இதுகாறும் எடுத்துக் காட்டிய விளக்கங்களால், மாதவிக்காகச் செலவிட்டே கோவலன் வறியனாகி விட்டான் என்ற தெ. பொ. மீ. கூற்று, எவ்வகையாலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று என்பது தெளிவாக்கப் பட்டது.

அடுத்து, "கோவலன் வரையறை யற்றுச் செலவழிப் பதை மாதவியும் அறிந்திருந்தாள்; ஆனால், கோவலனின் அவ்வாரவார வாழ்க்கையை அவள் எதிர்க்கவில்லை" என்ற தெ. பொ. மீ. கூற்றில் உண்மை யிருக்கிறதா என்பதை இனிக் காண்பாம்.

கோவலன் பொருளழிவுக்குக் காரணமான செலவினங் களாகச் சிலப்பதிகாரத்தால் தெரிவன: ஒன்று: ஆயிரத் தெண் கழஞ்சு பொன் கொடுத்து மாதவி மாலையை வாங்கியது. இரண்டு: மாதவி மகள் மணிமேகலையின் பெயர்சூட்டு விழாவின் போது, தானம்பெற வந்தார்க்குச் செம்பொன் மாரி பொழிந்தது. மூன்று: பிள்ளை நகுலம் இறப்பதற்குக் காரணமானாள் என்பதனால் கணவனால் கைவிடப்பட்ட பார்ப்பினிகை, வட எழுத்து வாசகம் எழுதிய ஏட்டை வாங்கி, தானம் செய்து, அவள் துயர் தீர்த்ததோடு, கானம் போன அவள் கணவனையும் கொணர்ந்து உறுபொருள் கொடுத்து நல்வழிப் படுத்தியது. நான்கு: பொய்ச் சான்று கூறிப் பூதத்தால் புடைத்துணைப் பட்டானின் மனைவியையும், அவள் சுற்றத் தையும் பசிப்பிணி போக்கிப் பல்லாண்டு புரந்தது. இவை ஒவ்வொன்றும், கோவலன் வாழ்வில் ஒரு முறையே நிகழ்ந்த நிகழ்ச்சிகள். இவையல்லாமல் கோவலனின் பொருள் அழிவிற்கு முழு முதல் காரணமாம் பிறிதொன்,

றும் உளது. அது, நகையாடாயம், குரல்வாய்ப்பாணர், நகரப் பரத்தர் ஆகியோருடன், குறிக்கோள் இன்றி, வாழ்நாளெல்லாம் திரிந்தது வகையில் ஆன பொருளழிவு. இது, அவனின் அன்றாட நிகழ்ச்சிகள். நாள்தோறும் நடைபெற்ற பொருளழிவு.

இச் செலவினங்களுள் முதல் இரண்டை மட்டுமே மாதவி அறிவாள். ஆனால், ஆயிரத்தெண் கழஞ்சு பொன் கொடுத்து மாலை வாங்கியதை, அவள் தடுத்திருக்க இயலாது; அது, கோவலன் உறவு ஏற்படுவதற்கு முன்பே நிகழ்ந்துவிட்ட, கோவலன் உறவு ஏற்படுவதற்குக் காரணமான செலவு; அதுவும் அவள் மனையிடத்தே நடந்தது அன்று; நகர நம்பியர் திரிதரும் தெருவில் நடைபெற்றது. மகள் மணிமேகலை பெயர் சூட்டு விழாவின்போது, தானமாகப் பொற்காசுகளை வழங்கியது, அவளும் விரும்பிய செலவு; ஆகவே, அதுவும் அவளால் மறுக்க வேண்டாத செலவு.

இவ்விரண்டையும் தவிர்த்துப் பிற செலவுகளை மாதவி அறிந்திருக்க இயலாது. பார்ப்பினி பாவம் தீர்த்த செலவு, பெருங்குடி வணிகர் பீடிகைத் தெருவில். பொய்ச் சான்று கூறினான் மனைவியின் சுற்றம் ஓம்பிய செலவு, பூதச் சதுக்கத்தில். பாணரொடும், பரத்தரொடும் திரிந்து செலவிட்டது பூம்பொழில் அகத்தும், நாளங்காடியிலும். இவ்விடங்கள் மாதவி கண்டு அறியாத இடங்கள். அரங்கேறச் சென்ற அரசவை, இந்திர விழாவில் ஆண்டு தோறும் ஆடிய விழா அரங்கு, கடலாடக் கோவலனுடன் சென்ற கடற்கரை ஆகிய இவை தவிர்த்துப் புகார் நகரத்தை அறியாதவள் மாதவி. இங்கெல்லாம் செல்லப் புகார்நகரத்துப் பெருவீதிகளைக் கடந்தே சென்றனளாயினும், சென்றது கொல்லாப் பாண்டியின் உள் அமர்ந்தே ஆதலின், அவ்வீதிகளைக்

கண்டு சென்றவள் அல்லள். கோவலனோடு கடல்விழாக் காணச் செல்லும் போது,

"மானமர் நோக்கியும் வையம் ஏறி" [கடலாடு: 120] எனப் பொதுப்படையாகக் கூறினும், கானல்வரி முடிந்து கோவலன் பிரியத் தனித்துத் திரும்பிய போது,

"கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள்புக்கு"

[கானல் : 52] என வண்டியின் உள் அமர்ந்தே திரும்பினள் எனத் தெளிவாகக் கூறியிருப்பது காண்க. கோவலனோடு சென்ற கடற்கரைக் கண்ணும், கடற்கரைக்கு வருவார் பலரும் தன்னைக்காணவும், வருவார் பலரையும் தான் காணவும் வாய்ப்புடைய இடத்து அமர்ந்து கானல் வரி பாடினாள் அல்லள். மாறாக, இவ்விரண்டிற்குமே வாய்ப்பு இல்லாத நிலையில், தாழை வேலியாகச் சூழ்ந்து கிடந்த புன்னையின் அடியில், சுற்றிலும் திரை வளைக்கப்பட்ட இடத்தில் இருந்தே கானல்வரி பாடினாள்.

"கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழைச்
சிறைசெய் வேலி அகவயின் ஆங்கோர்
புன்னைநீழற் புதுமணற் பரப்பில்
ஓவிய எழினி சூழ உடன் போக்கி
விதானித்துப்படுத்த வெண்கால் அமளி மிசை"
—கடலாடு:166—170.

மாதவி புகார் நகரத்தில் பிறந்தவளேயாயினும், அந் நகரத்துப் பல்வேறு பகுதிகளைச் சென்று பார்த்தவள் அல்லள். புகார் நகரத்துப் பூஞ்சோலைகளும் அவளுக்குத் தெரியா. கௌசிகன் என்ற இருபிறப்பாளன் மகளாய்ப் பிறந்து மாருதவேகன் என்ற விஞ்சையனால் காதலித்துக் கொண்டுவரப்பட்டுக் காவிரிப் பூம்பட்டினத்தில் கை விடப்பட்ட சுதமதி அறிந்திருந்த அளவு கூடப் புகார் நகரத்தை மாதவி அறிந்திருக்கவில்லை. புகார் நகரத்தில்

உள்ள பூம்பொழில்கள் எத்தனை; அவை ஒவ்வொன்றின் இயல்பு யாது என்பதை அச்சுதமதி வாய்க்கேட்டே மாதவி அறிந்து கொண்ட உண்மையை, மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் மலர்வனம்புக்க காதை 44 முதல் 79 வரையான வரிகளில் தெரிவித்திருப்பது காண்க.

ஆகவே, கோவலன் வரையறையின்றிச் செலவழிப்பதை அறிந்திருந்தும், மாதவி அதை எதிர்க்கவில்லை என்ற தெ.பொ.மீ. வாதத்தில் சாரம் இல்லை என்பதை உணர்க.

அடுத்து, "கானல்வரிக்கு முன்னரே, வாழ்க்கைக்கு வழி என்ன என்று கலங்கிப் புண் பட்டுவிட்டது கோவலன் மனம். இதை மாதவியிடம் கோவலன் குறிப்பாகச் சுட்டி யிருக்கலாம். கோவலன் செல்வம் இழந்த நிலையை மாதவியும் எண்ணியிருத்தல் வேண்டும்" என்ற தெ.பொ.மீ. அவர்கள் முடிவினை நோக்குவாம்.

கோவலன் கொலையுண்டது, கண்ணகி அவனோடு வானாடு அடைந்தது கேட்ட அளவே போதித்தாமம் புகுந்து, தன்பால் உள்ள செல்வம் அனைத்தையும் புண்ணிய தானமாக அளித்துவிட்டுத் துறவறம் மேற்கொண்டவள் மாதவி. செல்வம் தேடும் கணிகையர் வாழ்க்கை தனக்கு மட்டும் அன்று; தன் மகளுக்கும் வேண்டாத ஒன்று எனக் கொண்டு, மகளையும் துறவுக் கோலம் கொண்டவள் மாதவி.

"காதலன் தன்வீவும், காதலிநீ பட்டதூஉம்
ஏதிலார் தாம்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம் புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ, தோழீ?
மணிமேகலை துறவும் கேட்டாயோ, தோழீ?"

என, வாழ்த்துக் காதையுள், கண்ணகியின் அடித் தோழியே அரற்றிக் கூறுவது காண்க. அத்தகைய

மாதவி, கோவலன் வறுமையை உணர்ந்திருந்தால், அவன் குறிப்பாகவேனும், தன் வறுமை நிலையைச் சுட்டிக் காட்டியிருந்தால், அவள் அவ்வறுமை போக வழி செய்திருப்பாள்.

கடல் விளையாட்டுக்காண, கோவலன் ஏறிச் சென்ற அத்திரியைத் தொடர்ந்து வையம் என்ற வண்டியேறிச் சென்ற மாதவி, கால் விரல்களில் மகரவாய் மோதிரம்; கால்களில் பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி; துடையில் குறங்கு செறி: இடையில் முப்பத்திரு காழ் முத்து வடத்தால் ஆன மேகலை; தோளில் மாணிக்க வளை, பொற்கம்பியில் கோத்த முத்துவளை; முன்கைகளில் மாணிக்கமும் வயிரமும் இழைத்த வளை, பொன்வளை, நவரத்தின வளை, பவழவளை, சங்கவளை; கைவிரல்களில் வாளையின் பிளந்த வாய் போலும் முடக்கு மோதிரம், அடுக்கடுக்காக இரத்தினக்கல் பதித்த அடுக்காழி மோதிரம், மரகதக்கல் இழைத்த மோதிரம்; கழுத்தில் வீரசங்கிலி, நுண்ணிய ஞாண், ஆரம்; புறமுதுகில் கோவை; காதுகளில் நீலக்கல் பொதித்தனவும் வயிரம் பொதித்தனவுமான காதணிகள்; நெற்றியில் தெய்வவுத்தி முதலாம் தலைக் கோலம் என்ற எண்ணிலா அணிகளை அணிந்தே சென்றுள்ளாள். இவை அனைத்தும் கோவலன் கொடுத்தனவே என வாதத்திற்கு ஏற்றுக் கொள்வோம். எனினும், மாதவிக்குத் தேவை, இவ்வணிகளா? அல்லது கோவலனா என்ற நிலை ஏற்படின் அவள் கோவலனையே ஏற்பள்; அவன் பொருட்டு அவ்வளவு அணிகளையும் இழக்கவே முன்வருவள். அவன் வறுமை நிலையைக் குறிப்பாகவேனும் உணர்ந்திருந்தால், அவ்வறுமை தீர, அவ்வளவையும் அவன்பால் வாரிவழங்கியிருப்பாள். அதில் ஐயம் இல்லை. அது நிகழவில்லை. ஆகவே அவள் அவன் வறுமையை அறிந்திருக்கவில்லை; அவனும் அவளுக்கு அதைத் தெரிவிக்கவில்லை.

கோவலன் பாடிய கானல் வரிப்பாக்களின் பாட்டுடைத் தலைவி கண்ணகியே எனல் பொருந்துமா?

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் கானல் வரிப் பாக்கள் கருத்தாழ மிக்கவை; பழகப் பழகப் பேரின்பம் பயக்கும் பண்புடையார் நட்புபோல், நயந்து பயிலப் பயிலப் பெருஞ்சுவை தரும் பெருமையுடையன. பன்மொழிப் புலவர், உயர்திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய போது, தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களுக்குச், சிலப்பதிகாரத்தைச் சொல்லிக் கொடுத்த போது, தாமும், மாணவர்களும் பெற்ற விளக்கங்களை யெல்லாம், "கானல்வரி" என்ற தலைப்பில், மதுரை, சர்வோதய இலக்கியப் பண்ணை மூலம், ஒரு நூலாக 1961-இல் வெளியிட்டுள்ளார்கள்.

கானல்வரியில் பொதிந்து கிடக்கும் நுணுக்கமான பல கருப் பொருள்களை, மிகத் தெளிவாகச் சிக்கல் நீக்கி எடுத்துக் காட்டியுள்ளார். கோவலன் பாடிய கானல் வரிப்பாக்களையும், மாதவிபாடிய கானல்வரிப் பாக்களையும் அடுத்தடுத்து வைத்து ஆராய்ந்து, பாடியவர்களின்

அப்போதைய உள்ளுணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

கானல் வரிப்பாக்களின் கருப்பொருட்களைத் தெளிவாக உணர, தெ. பொ. மீ. அவர்களின் திறனாய்வு பெருந்துணை புரிகிறது என்றாலும், சிலப்பதிகாரப் பாத்திரங்கள் ஒரு சிலவற்றின்பால் கொண்டுவிட்ட ஈடுபாட்டின் விளைவாக, அப்பாத்திரங்கள் குறித்து, அவர் கொள்ளும் முடிவு மறு ஆய்வுக்கு உரியதாகவும் உளது.

தான் பாடிய கானல் வரிப் பாக்களில், பாட்டுடைத் தலைவியாகக் கோவலன் தன் மனைவி கண்ணகியையே கொண்டுள்ளான் என்பதற்காகப் பல்வேறு சான்றுகளைத் தர முற்படும் தெ. பொ. மீ. அவர்கள் கானல் வரி முதல் இரு பாடல்களில், காவிரியை விளிக்கக் கோவலன் "கயற் கண்ணாய்!" என்ற தொடரை ஆண்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, "கண்ணகியைக் கண்ட கவுந்தி அடிகள், "கயல் நெடுங்கண்ணி" என்றே கூறுகிறார். கோவலனைக் "கயல் நெடுங்கண்ணி காதற் கொழுந!" என அவளுடைய கயற்கண்களில் ஈடுபட்ட காதலோடு பிணைத்தே காண்கிறார். கண்ணகியோடு உடனிருந்த நிலையைக் கோவலனும் மறக்கவில்லை. கண்ணகி, கோவலனைப் பிரிந்த நிலையில், அவள் கயற்கண்ணை நினைந்தே. 'செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப' என இளங்கோவடிகளும் பாடுகிறார். பின்னும், கோவலனும் கயலையே நினைப்பான், இங்கே காவிரியைப் புனைந்துரைத்தது கண்ணகிக்கு எவ்வளவு பொருத்தமாக அமைகிறது! கண்ணகிபால் தான் கண்டனுபவித்த கற்பின் திறத்தைக் காவிரியின் மேல் அவனையும் அறியாது அவன் அடிமனம் ஏற்றிப் பார்க்கிறது" [பக்கம்: 110,111] என்ற தம் வாதத்தின் மூலம், அக்கயற்கண் கண்ணகியின் கயற்கண்ணே;

ஆகவே, காவிரி வடிவில், கோவலன் கண்ணகியையே காண்கிறான் என முடிவு செய்துள்ளார்.

ஆக, கயற்கண் என்றால், அது கண்ணகியின் கண்களையே குறிக்கும் என்பதற்குக் கண்ணகியின் கண்களைக் குறிப்பிடும் இளங்கோவடிகளாரும், கௌந்தி அடிகளும் "கயற்கண்ணி" எனக் குறிப்பிடும் தொடர்களையே. அவர் சான்றாகக் கொண்டுள்ளார் என்பது தெளிவு.

கோவலன் பிரிய, அஞ்சனம் தீட்டுவது மறந்த நிலையிலும், கோவலன் உடன் இருக்க, ஆயர்பாடியில் அஞ்சனம் தீட்டப் பெறும் நிலையிலும், சிலம்பு விற்கக் கோவலன் விடை கொள்ளும் நிலையிலும், இளங்கோ வடிகள் கண்ணகியின் கண்களைக் "கயல் நெடுங்கண்" [அந்திமாலை: 53, அடைக்கலம்: 132; கொலைக்களம் 94] எனக் கயலோடு தொடர்பு படுத்தியே பாடியுள்ளார் என்பதும், தம்மை வணங்கித் தம் துணை வேண்டி நின்ற நிலையில், மதுரை செல்லும் வழியின் நிலைமைகளை விளக்கிக் கூறும் கௌந்தி அடிகளாரும், கண்ணகியைக் "கயல் நெடுங்கண்ணி" [நாடுகாண்: 74] என அழைத்து, அவள் கண்ணோடு கயலைத் தொடர்பு படுத்தியே பார்த்துள்ளார் என்பதும் உண்மை.

ஆனால், கயலைக் கண்ணோடு தொடர்பு படுத்திப் பார்ப்பதை, இளங்கோவடிகளார், கண்ணகி கண்ணுக்கு மட்டுமே உரிமையாக்கிக் கொண்டு விடவில்லை. இந்திர விழாக் காண வந்த விஞ்சையன் மனைவி கண்ணுக்கும் அந்த உரிமையை வழங்கியுள்ளார். "கருங் கயல் நெடுங்கண் காதலி" [கடலாடு : 3] என அவளை அவர் அழைப்பது காண்க. அது மட்டும் அன்று.

காவிரியின் வடகரைவாழ் உழவர் மகளிர் கண்களுக்கும், மதுரை மாநகரத்துப் பரத்தையர் கண்களுக்கும்

கூட, அவ்வுரிமையைத் தந்துள்ளார். "செங்கயல் நெடுங் கண் சின்மொழிக் கடைசியர்" (நாடுகாண்: 130), "செங்கயல் நெடுங்கண் செழுங்கடைப் பூசல்" (ஊர் காண்: 141) என முறையே வரும் அவர் பாடல் வரிகளைக் காண்க.

அதுமட்டுமன்று. மகளிர் கண்களைப் பற்றிக் கூறும் போதெல்லாம், கயலைத் தொடர்புபடுத்திப் பாடுவதை இளங்கோவடிகளார் பொது நெறியாகவே கொண்டுள் ளார். முழுமதி நிகர் முகம் உடைய புகார் நகரத்து மகளிரைக் குறிப்பிடும் அடிகளார், வானத்து அரவும் பகை அஞ்சிய வான்மதி, கார்மேகத்தைச் சுமந்து கொண்டு, தன்கண் இடங்கொண்டிருந்த குறுமுயலை அகற்றிவிட்டு, இரு கயல் மீன்களையும், அவற்றின் இடையே ஒரு குமிழம் பூவையும் கொண்டு மண்ணுலகில் வந்து உலா வரும் போலும் என்ற அவர் பாடல் வரிகளைக் காண்க.

"கருமுகில் சுமந்து, குறுமுயல் ஒழித்து, ஆங்கு
இருகருங் கயலொடு, இடைக்குமிழ் எழுதி,
அங்கண் வானத்து அரவுப்பகை அஞ்சி
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல்?"
—இந்திரவிழா: 204 - 207

அதுமட்டுமன்று. "கயற்கண்ணாய்!" எனக் கயலைக் கண்ணாக உருவகித்து, இளங்கோவடிகளார் காவிரியை மட்டும் பாடவில்லை; கயல் விளையாடும் வையையாற் றைப் பாடும்போதும், கயலைக் கண்ணாக உருவகித்தே பாடியுள்ளார்.

குரவம் முதலாம் மலர்களால் ஆன துகில், குருக்கம் முதலாம் மலர்களால் ஆன மேகலை, மணற்குன்றுகளாம்

கொங்கை, முருக்கிதழாம் செவ்வாய், முல்லையாம் வெண்நகை, கயலாம் கண், அறலாம் கூந்தல், உலகு ஓம்பலாம் ஒழுக்கம் ஆகியவற்றைக் கொண்ட வையை என்ற குலக்கொடி, என்ற வையை ஆற்று வருணனையில் வையை ஆற்றுக் கயலையும், அதன் கண்ணாக உருவகித்துப் பாடியுள்ளமை உணர்க. "விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கருங்கயல் நெடுங்கண்" (புறஞ்சேரி: 166).

ஆகக் "கயற்கண்" என்ற தொடர், கண்ணகியைக் குறிக்கும் என்பதற்கு,இளங்கோவடிகளார் கண்ணகியைக் "கயற்கண்ணி" எனக் குறிப்பிடும் தொடர்களைச் சான்றாகக் கொள்வது அத்துணைப் போதுமானதாகாது. ஆகவே காவிரியாற்றுக் கயலில், கோவலனைக் கண்ணகியின் கண்களையே காணச் செய்துள்ளார் இளங்கோவடிகளார் என்பது பொருந்தாது.

மேலும், இடைக்குல மடந்தைபால் கோவலனையும், கண்ணகியையும் அடைக்கலமாக ஒப்படைக்கும்போது, கண்ணகியைக் குறிப்பிடும் கௌந்தி அடிகளார், அவள் கண்ணோடு, கயலைத் தொடர்பு படுத்திப் பாராமல், வாளா, "கருந்தடங் கண்ணி" (அடைக்கலம்: 128)என்றும் கூறியுள்ளமையால், கௌந்தி அடிகள் கண்ணகியைக் "கயல்நெடுங்கண்ணி" என அவள் கண்களைக் கயலொடு தொடர்பு படுத்தியே காண்கிறார் எனக் கௌந்தி அடிகளைச் சான்றுக்கு அழைப்பதும் ஏற்புடையதாக இல்லை.

மேலும், காவிரியாற்றுக் கயல்கள், கோவலனுக்கு மட்டும் கண்களாகக் காட்சி அளிக்கவில்லை; மாதவிக்கும் அவை கண்களாகவே காட்சி அளித்தன. "கருங் கயற் கண் விழித்து நல்கி நடந்தாய் வாழி! காவேரி!" [கானல் வரி : 25] என்ற அவள் பாடலைக் காண்க. ஆகக்

காவிரிக் கயல் கோவலனுக்குக் கண்ணகி கண்களை நினைவூட்டி விட்டன என்பதில் பொருள் இல்லை என்பது, இதனாலும் தெளிவாதல் அறிக.

கானல் வரிப் பாக்களால், கோவலன் பாடிப் பாராட்டும் காவிரியில் பிறழும் கயல்களைக் கண்ட அளவே, கோவலனுக்குக் கண்ணகியின் கண்கள் கண் முன் வந்து நிற்குமாயின், கோவலன் கானல் வரிப் பாட்டிற்கு முன்னரும், கண்ணகியின் கண்களில் கயலைக் கண்டிருக்க வேண்டும்; கானல் வரிப் பாக்களுக்குப் பின்னரும் அவள் கண்களில் கயலையே அவன் கண்டிருக்க வேண்டும். ஆனால் கானல் வரிக்கு முன்னரோ, அல்லது பின்னரோ, கண்ணகி கண்களில் கயல் வடிவைக் கோவலன் கண்டானா என்றால் இல்லை.

கண்ணகியை மணந்து மனையறங் கொண்டு சில ஆண்டுகள் வாழத் தொடங்கியது தொட்டுக் கொலையுண்டு, வானாடு அடைந்தது வரையான காலத்தில் கோவலன் கண்ணகியின் கண்களைப் பார்த்ததாக இரண்டு இடங்களை மட்டுமே இளங்கோவடிகளார் கூறியுள்ளார். அவ்விரு இடங்களிலும் அவள் கண்ணில் கயலைக் கண்டான் இல்லை.

கண்ணகியை மணந்து, அவளோடு நிலா முற்றத்தே மகிழ்ந்திருந்த போது, அவளின் நுதல் முதலாம் பல் வேறு உறுப்புகளின் நலம் குறித்துப் பாராட்டிக் கூறும் குறியாக் கட்டுரைக் கண், கோவலன் அவள் கண்களில் முருகனின் வேலைத்தான் கண்டானே யல்லாது கயலைக் கண்டிலன். "அழகிய ஒளி வீசும் நீண்ட வேல் ஒன்றை உன் முகத்துச் சிவந்த, அன்பால் குளிர்ந்த இரு கண்களாக்கிக் கொடுத்துள்ளான். "அஞ்சுடர் நெடு வேல் ஒன்றும், நின் முகத்துச் செங்கடை மழைக்கண் இரண்டா

ஈத்தது?" [மனையறம் 51-52] என்ற கோவலனின் குறியாக் கட்டுரை காண்க.

அதே போல், கொலையுண்டு குருதி கொப்புளிக்க வீழ்ந்து கிடக்கும் தன் மார்பைக் கண்ணகி தழுவிக் கொண்டாளாக, எழுந்து நின்ற கோவலன் வானாடு செல்வதன் முன்னர், அழுதேங்கி அரற்றுவாளின் கண்ணீரை மாற்றி, இருந்தைக்க எனக்கூறி விடைகொள்ளும் நிலையிலும், அவள் கண்ணில் கயலைக் கண்டிலன்; மாறாக, "எழுது எழில் மலர் உண் கண்" [ஊர்சூழ் ; 67] என அவளை விளிப்பதன் மூலம் அவள் கண்களில் மலர் வடிவைத்தான் கண்டான்.

ஆக, கண்ணகி கண்களில், கயல் ஒளி விடுவதை என்றும் கண்டிராத கோவலன், காவிரியாற்றுக் கயலைக் கண்டதுமே, அவனுக்குக் கண்ணகியின் கண்கள் நினைவுக்குவர, காவிரியைக் கண்ணகியாகவே கொண்டு பாடத் தொடங்கினான் என்பதில் பொருள் இல்லை.

"கண்ணகியின்பால் தான் கண்டு அனுபவித்த கற்பின் திறத்தைக் காவிரியின் மேல், அவனையும் அறியாது, அவன் அடிமனம் ஏற்றிப் பார்க்கிறது" என்கிறார் தெ.பொ.மீ. அவர்கள் [பக்கம். 111].

ஆயிரத் தெண் கழஞ்சு பொன் கொடுத்து மாலை வாங்கி மாதவியின் மணமனை புகுவதன் முன்னர்க் கோவலன், சில ஆண்டுகள், கண்ணகியோடு வாழ்ந்தான். அச்சிலவாண்டு காலத்தில், எப்போதேனும், கண்ணகியின் கற்பு நலம் கண்டு பாராட்டியுள்ளானா கோவலன் என்றால், இல்லை. மாறாக, அந்நாட்களில், அவளைப் பொன்னாகவும், முத்தாகவும், மணப்பொருளாகவும், கரும்பாகவும், தேனாகவும், பாவையாகவும், மருந்தாகவும், மணியாகவும், அமிழ்தமாகவும், இசையாகவுந்தான்

கண்டு உலவாக் கட்டுரை பல பாராட்டிக் களிமகிழ் வெய்தினானே ஒழிய, அவள் கற்பு நலம் குறித்து ஒரு வார்த்தையும் கூறினான் அல்லன்; மனையறம் படுத்த காதையில் வரும் அவன் உலவாக் கட்டுரைகளை [73-81] காண்க.

கானல் வரி இறுதியில், மாதவியை மாயப் பொய் கூட்டும் மாயத்தாளாகவும், ஆடல் மகளே ஆகவும் கொண்டு, மனை புகுந்த கோவலன் மாதவியின் பரத்தமை ஒழுக்கத்திற்கு மாறானகற்பின் திறத்தைக் கண்ணகிபால் கண்டு பாராட்டினனா என்றால் இல்லை. அவள் கற்பின் திறத்தில் கருத்தைப் போக்குவதற்கு மாறாக. அவளின் வாடிய மேனியின் வருத்தம் கண்டே மனம் நெகிழ்ந்தான். [கனாத்திறம்: 68. வரி காண்க.]

கானல் வரி நிகழ்ச்சிக்கு முன்னர், கண்ணகியின் கற்பின் திறத்தை உணர்ந்து கொள்ளும் உணர்வு கோவலனுக்கு வாய்க்கவில்லை.

கௌந்தி துணையால், கண்ணகியோடு பிரியாதுறையும் வாழ்க்கை நலம் பெற்று, மதுரை செல்லும் அந்த இடைக்காலத்திலாவது, அவள் கற்பின் திறத்தைக் கண்டு கொண்டானா என்றால் இல்லை. அவள் கற்பின் திறத்தைத் தானே உணர்ந்து கொள்ள வேண்டியவன்' உணராதது மட்டுமன்று; அதைப் பிறர் உணர்ந்து பாராட்டிய பின்னரும் உணர்ந்து கொண்டானல்லன்.

ஐயை கோட்டத்துத் தேவராட்டி, கண்ணகியை "ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" [வேட்டுவ வரி : 49-50] எனப் பாராட்டினாள். கோசிக மாணிமூலம் கொடுத்தனுப்பிய முடங்கலில் கண்ணகியைக் "குலப்பிறப்பாட்டி" [புறஞ்சேரி : 90] எனக் குறிப்பிட்டு

அவள் கற்பின் பெருமையை, மாதவி அவனுக்கு உணர்த்தினாள். கௌந்தி அடிகளோடு இருந்த கண்ணகியை, "மாஇல் கற்பின் மனைவி" [புறஞ்சேரி : 102] எனக் கூறி, அவள் கற்பின் மாண்பை எடுத்துக் காட்டினார் இளங்கோவடிகளார். இவ்வளவிற்குப் பிறகும், கோவலன் கருத்தில், கண்ணகியின் கற்பின் பெருமை இடங்கொள்ளவில்லை; மாறாக, அவளின் மலர் போலும் மேனியும், அதன் நடுக்கமுமாம் புறத் தோற்றத்தையே அவன் காண்கிறான்.

மதுரை மாநகர் சென்று, ஆங்குள்ள வணிகப் பெருமக்களைக் கண்டு வரக் கௌந்தி அடிகளாரிடம் விடை கொள்ளும் நிலையில், கண்ணகியின் கற்பு வாழ்விற்கு ஊறுவிளைத்ததற்காக வருந்த வேண்டியவன், அது செய்யாது, அந்நிலையிலும், மலர் போலும் அவள் மேனி நடுங்குவதற்குக் காரணம் ஆனது குறித்தே கலங்குவானாயினன். "நறுமலர்மேனி நடுங்குதுயர் எய்த...சிறுமையுற்றேன்" (ஊர் காண்: 18-20) என்ற வரிகளைக் காண்க.

அது மட்டுமன்று; கற்புடைப் பெண்களின் பெருமைகளை மாதரிக்குப் பெருக எடுத்துக் கூறிவிட்டு, கண்ணகியைக் "கற்புக்கடம் பூண்ட தெய்வம்" (அடைக்கலம்:143) எனக், கோவலன் முன்னிலையில், அவன் கேட்க, கௌந்தி அடிகளார் கண்ணகி கற்பின் பெருமையைப் பறை சாற்றினார். அது கேட்ட பின்னராவது கோவலன் உள்ளத்தில் கண்ணகியின் கற்பு நலமாம் அகஅழகு இடங்கொண்டதா என்றால் இல்லை.

ஆயர்பாடியில், மாதரி இல்லத்தில், தனக்கு உணவு படைத்து, வெற்றிலை மடித்துத் தந்து நின்ற நிலையிலாவது கண்ணகி கற்பு நலம் கோவலன் கருத்தில் பட்டதா

என்றால் இல்லை. அப்போதும் அவளின் பேரறிவு—பெருமை மட்டுமே அவன் பார்வையில் பட்டது. "சிறு முதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்" (கொலைக் களம்: 68) என்றே அவன் கூறுவது காண்க.

அப்படியாயின் கண்ணகியின் கற்பின் பெருமையைக் கோவலன் கண்டு கொள்ளவே இல்லையா என்றால், உணர்ந்து கொண்டான்; ஆனால், எப்போது? அவன் தன்னை விட்டுப் பிரிந்து போய்விட்டமையால், தான் ஆற்ற வேண்டிய கற்புக் கடமைகளை ஆற்ற மாட்டா நிலை ஏற்பட்டதை நினைவூட்டி, அது ஏற்பட, ஒழுக்கம் கெட்டுத் திரிந்த அவன் செயலைக் கண்ணகி இடித்துக் காட்டிய பின்னரே, அவள் கற்பின் பொற்பினை உணர்ந்தான். அதன் பின்னரே, கண்ணகியின் நாணம், மடம், கற்பு ஆகியவற்றை உணர்ந்தான். "நாணின் பாவாய்! நீணில விளக்கே! கற்பின் கொழுந்தே!" (கொலைக்களம்: 90-91) என்றெல்லாம் பாராட்டினான்.

ஆக, கண்ணகியின் கற்பு நலத்தைக் கொலைக்களம் நோக்கி அடியிடுவதற்குச் சில நாழிகைக்கு முன்னர்தான் கோவலன் உணர்ந்து கொண்டான். அங்ஙனமாகவும், கண்ணகி கற்பு நலத்தைக் கோவலன், மாதவி உறவு கொள்வதற்கு முன்பே, உணர்ந்து அனுபவித்ததாகவும், அந்த அனுபவத்தையே, கானல் வரிப் பாக்களில், காவிரியைக் கண்டதும், வரிவடிவில்வடித்துக்காட்டினானாகவும் கூறுவது அறவே பொருந்தாது.

கோவலன் பாடிய கானல் வரிப் பாக்களின் பாட்டுடைத்தலைவி கண்ணகியாயின், கானல் வரி இறுதியில் மாதவியை வெறுத்துப் பிரிந்த கோவலன், அடுத்த கணம் தன் உள்ளத்தில் ஆட்கொண்டிருந்த கண்ணகியை அடைந்திருக்க வேண்டும். கடற்கரையிலிருந்து நேரே,

தன் கடிமனை புகுந்திருக்க வேண்டும். ஆனால், கோவலன் அது செய்தானா என்றால், இல்லை.

கோவலன் பிரியத் தனியே மனை புகுந்த மாதவி, ஆங்கு மன அமைதி நாடித் தனக்குத் தெரிந்த இசையை யெல்லாம், யாழில் மீட்டுத் தீர்த்தாள். பின்னர்க், கோவலனுக்குக் கடிதம்எழுத ஏற்றமலர்களைத் தேடிக் கொண்டு நீண்டதொரு கடிதத்தைப் பலமுறை நினைந்து நினைந்து எழுதி முடித்து, வயந்த மாலையிடம் கொடுத் துள்ளாள்.

கோவலன் தன் மனைக்குச் சென்றிருக்க மாட்டான் என்பதை வயந்தமாலை அறிவாள். அதனால், அவள், அவன் இயல்பாகத் திரிந்து உறையும் கூலமறுகிற்சென்று கடிதத்தைக் கொடுத்துள்ளாள்.

கோவலன் கடிதத்தைக் கண்டதுமே வாங்க மறுத்து, வயந்த மாலையை உடனடியாகத் துரத்தி விடவில்லை. உடனுறை காலத்து, அவன்மகிழ, மாதவி ஆடிக்காட்டிய எட்டு வகை வரிக் கோலங்களையும் ஒவ்வொன்றாக விரித்துக் கூறி மாதவியைப் பழித்துள்ளான். இவ்வளவும் நடக்க எத்துணைக் காலம், எத்துணை நெடும்பொழுது வேண்டியிருக்கும்! அத்துணை நெடும்பொழுதும், கண்ணகியைக் காணவேண்டும் என்ற கருத்து இல்லாமல் கூலமறுகிலேயே கிடந்துள்ளான். கண்ணகிபால் சென்ற கருத்துடையான் செயலாகுமா இது?

கண்ணகியை எப்பொழுது அடைந்தான்? 'கங்குல் சுனைசுடர் கால்சீயாமுன்'' [கனாத்திறம்:78—79] என்கி றார் இளங்கோவடிகளார். அதாவது விடியற்போதில் மாதவியைக் கடற்கரைக்கண் மாலையில் பிரிந்து வந்த வன், கண்ணகியைக் கங்குல்சுனைசுடர் கால்சீயாமுன்தான்

காண்கிறான். ஆக ஓர் இரவு முழுதும், எங்கோ சுற்றித் திரிந்துள்ளான். இது கண்ணகியின் நினைவாகவே இருந்தவன் செயலாகுமா?

கோவலன் பாடிய கானல்வரிப் பாக்களின் பாட்டுடைத் தலைவியைக் கண்ணகியாகக் கொள்வதில் மற்றுமொரு தடையும் உளது.

"கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்!" "கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்!" எனப் பாடியதன் பயனாய், "காவேரி! நின் கணவனும் சோழன். கங்கையைப் புணர்ந்தான். நீ அதற்காகப் புலத்தல் செய்திலை; அவன் கன்னியைப் புணர்ந்தான்; நீ அப்போதும் அவனோடு புலத்தல் செய்யவில்லை; என்னே! நின் கற்பின் மாண்பு!" எனக் கற்பு நெறி பிறழாக் காவிரியைப் பாராட்டுகின்றன அப்பாக்கள்.

தெ.பொ.மீ. அவர்கள் கூற்றுப்படி, காவிரி வடிவில் கண்ணகியைக் காண்கிறான் கோவலன் என்பதாயின், அக்காவிரியின் கணவனாம் சோழன், கங்கை, கன்னி ஆகிய இருவரைப் புணர்ந்தது போல, கண்ணகியின் கணவனாம் கோவலனும் கண்ணகி தவிர்த்து வேறு இரு மாதரைப் புணர்ந்தவனாதல் வேண்டும். ஆனால் சிலப்பதிகாரம், கோவலனுக்கு அத்தகு பெருமாசினைக் கற்பிக்கவில்லை. அவன் பாணரோடும் பரத்தரோடும் திரிந்தவனாக இருக்கலாம்; ஆனால் மாதவி தவிர்த்து, வேறு ஒரு பரத்தையோடு உறவு கொண்டவனல்லன்.

தம் கூற்றிற்குத் தடையாக இது நிற்பதைத் தெ.பொ.மீ. அவர்கள் உணராமல் இல்லை. "உள்ளுறை போல, ஒட்டணி போல, ஒவ்வொன்றிற்கும் உவமேயம் தேடி அலையலாகாது. கங்கையும் கன்னியும் போலக்

கோவலன் இருவரைக் கண்ணகியின் வேறாகக் கைதொட்டனனா என்று கேட்டல் வேண்டா. கன்னியும், கங்கையும் கடவுள் அருள் விளக்கமானால், ஒன்றன் இரு வேறு கோலங்களாம். மாதவியைத் தெய்வ அரம்பையின் வடிவமாகவே விஞ்சையன் பேசுகிறான். அவளைக் கன்னிக் கோலத்தில் மணந்தது ஒன்று; மணிமேகலை பிறந்தபின், கன்னி நிலை நீங்கத் தாய்மைக் கோலத்தில் கூடியது ஒன்று என இவ்வாறு ஒன்றனையே இரண்டாகப் பேசலாம்" [பக்கம்: 111] என்ற அவர் சமாதான உரையினைக் காண்க.

தாம் கொண்டுவிட்ட பொருளுக்கு நேரும் குறைபாட்டைத் தவிர்ப்பான் வேண்டி, இத்தகு ஓர் அமைதியினை தெ.பொ.மீ. அவர்கள் தேடிக் கண்டாலும், அதுவே அவர் பொருள் கோளின் வலுவற்ற நிலைக்கு வலுவான சான்றாகி விடுவது அறிக.

கோவலன் வழக்கமாகக் கண்ணகியின் வீடுசென்று பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து வந்தான்; அதை மாதவியும் உணர்ந்திருந்தாள்எனல்பொருந்துமா?

"கண்ணகியின் உடன்பாடு பெற்றே, தன்னுடன் வாழ்கிறான் கோவலன் என [மாதவி] கருதினாளோ யாமறியோம். கண்ணகியின் வீடு சென்று, பொருள் களைக் கோவலன் வழக்கமாகக் கொண்டு வந்து கொண் டிருந்தமையால், அவள் அப்படியும் எண்ணியிருக்கலாம்" [பக்கம்: 97-98] என எழுதுவதன் மூலம், கோவலன், வழக்கமாகக் கண்ணகி மனைக்குச் சென்று பொருள் களைக் கொண்டு வந்து கொடுப்பதை மாதவியும் உணர்ந்தே இருந்தாள் என மாதவிபால் ஒரு பெருங் குற்றச்சாட்டினைச் சாட்டியுள்ளார் தெ. பொ. மீ. அவர்கள்.

அவர் கூற்றில் உண்மை இருக்கிறதா?

வயந்த மாலைபால் மாலை பெற்று, மாதவி மனை புகுந்தது முதல், வயந்தமாலை கொடுத்த மாதவி கடிதத்தை மறுத்தது வரையான காலத்தில், கோவலன் ஒரு முறையேனும், கண்ணகி வாழும் தன் மனைக்குச் சென்று வந்தான் எனச் சிலப்பதிகாரம் யாண்டும் கூறவில்லை.

மாதவி மாலை வாங்கி, அவள் மனை புகுந்த கோவலன் செயலை, "விடுதல் அறியா விருப்பினன்

ஆயினன். வடுநீங்கு சிறப்பின் மனைஅகம் மறந்து'' [அரங்கேற்றம்: 174-175] எனக் கூறியுள்ளார் இளங்கோவடிகளார். மாதவியையும், அவள் மனையையும் விட்டுப் பிரியமாட்டா வேட்கையுடையன் ஆகிவிட்டான் என மாதவி மனையகத்து அவன் நிலை யாது என்பது பற்றிக் கூறியதோடு அமையாது, தன் மனைவியாம் கண்ணகியையும், அவள் வாழும் தன் மனையையும் மறந்தே போயினான் எனக் கண்ணகி மனையகத்து அவன் நிலை யாது என்பதையும் தெளிவாக்கியுள்ளார். "விடுதல் அறியா விருப்பினன்" என்பதால், கானல்வரி நிகழ்ச்சி வரை, மாதவியின் மனையைக் கோவலன் பிரிந்தறியான் என்பதும், "மனையகம் மறந்தான்" என்பதால், கானல் வரி இறுதியில் மாதவியை வெறுத்துத் தன் மனை புகும் வரை, கோவலன் தன் மனையையும், மனைவியையும் மறந்தே கிடந்தான்; மறந்தும் மனைப்பக்கவன் சென்றிலன் என்பதும் உறுதியாயின.

கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு வாழ்ந்த காலத்தில், மாதவி மனை தவிர்த்துக் கோவலனைக் காணக் கூடிய இடங்களாகச் சிலப்பதிகாரத்தில் சில இடங்கள் கூறப்பட்டுள்ளன.

கோவலனைத் தென்றலுக்கு உவமையாகக் கொண்டு, கோவலன் போலத் திரியும் தென்றல் எனக் கூறவந்த புலவர், அத்தென்றல் உலாவரும் இடங்களாகக் குறிப்பிட்டவை: ஒன்று, "பூம்பொதி நறுவிரைப் பொழில்." இரண்டு, "நாள்மகிழ் இருக்கை நாளங்காடி." [இந்திர விழா: 195-196] ஆகக் கோவலன் உலா வரும் இடங்கள், அவனைக் காணக்கூடிய இடங்கள் இவ்விரு இடங்களாம் என்பது கூறாமல் கூறப்பட்டது.

பிள்ளை நகுலம் இறப்பதற்குக் காரணமாகிக் கணவனாம் மாமறையாளனால் கைவிடப்பட்டு, வட

மொழிவாசகம் எழுதிய ஏட்டினை வாங்கிக் 'கருமக்கழி பலம் கொள்மினோ' எனக் கூறித் திரிந்த நிலையில், கோவலன் வருகென அழைத்துத் தானம் செய்யத், தன் துயர் தீரப்பெற்ற மறையாட்டி, அது செய்வாளாத் தேடித் திரிந்த இடங்களில், "பெருங்குடி வாணிகர் மாடமறுகின் மனைகளும்" (அடைக்கலம் : 60-61) கூறப் பெற்றுள்ளன. ஆகவே, கோவலன் தன் மனையின்கண் இருந்தே அது செய்தான் எனக் கொள்வதற்கும் இடம் இல்லை. காரணம்: அம்மறையாட்டி திரிந்த இடமாக, வணிகர் மாடமறுகின் மனை மட்டுமல்லாமல், வணிகர் இருந்து வாணிகம் புரியும், வணிகர் வாழிடங்களின் வேறுள "பீடிகைத் தெருவும்" கூறப்பட்டுளது. (அடைக் கலம் : 60) கோவலன், அம்மறையாட்டியை அழைத்து, அவள் குறை தீர்த்தது, அப்பீடிகைத் தெருவாதலும் கூடும்.

கோவலன் கடற்கரைக்கண் தன்னை விட்டுப் பிரிந்து சென்றானாகத் தனியே மனை புகுந்த மாதவி, கோவலன் பால் கொடுத்து அழைத்து வருக எனப் பணித்து எழுதிக் கொடுத்த கடிதத்தைப் பெற்றுக் கொண்ட வயந்த மாலை, கோவலனைக் கண்டு கடிதத்தைக் கொடுத்த இடம் கூலமறுகு.

ஆக, இம்மூன்று குறிப்புகளாலும், கோவலன் இருந்த இடங்களாகப் பூம்பொழில், நாளங்காடி, பீடிகைத் தெருவு, கூலமறுகு ஆகிய இந்நான்கு இடங்கள் மட்டுமே சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

கோவலன், தன் மனைக்கு வழக்கமாக வந்து கொண் டிருந்தான் என்றால்," அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும்" (கொலைக்களம் : 71-73] ஆகிய, இல்லறக் கடமைகளை ஆற்றக் கண்ணகி

தவறியிருக்கத் தேவையில்லை. ஆனால், அவற்றை இழந்து விட்டதாகக் கூறுகிறாள். அதுவும் கோவல னிடமே கூறுகிறாள். ஆக, அது இழப்பதற்கு அவன் வாராமையையே காரணமாகக் கூறுகிறாள் கண்ணகி. அது இழந்ததைக் கூறி அவன் வாராமையை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது மட்டுமல்லாமல், தன் முன் வந்து நில்லா அவன் செயலை, "என்முந்தை நில்லா முனிவு" [கொலைக்களம் : 76] என வெளிப்படையாகவும் எடுத்துக் கூறியுள்ளாள். ஆகக், கண்ணகி கூற்றாலும், கோவலன், இடைக்காலத்தில், தன் மனைக்குச் சென்று வந்தவனல்லன் என்பது தெளிவாகிறது.

மேலும், கண்ணகியின் பார்ப்பனத் தோழி தேவந்தி, கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறையொன்று உண்டு என உணருகிறாள். அது, கணவனைப்பெறாக்குறை யென்றும் உணருகிறாள். அதனால், "பெறுக கணவ னோடு" என வாழ்த்துகிறாள். அவள் வாழ்த்துக்கு எதிராகத் தான் கண்ட தீக்கனாவைக் கூறித் தன் நடுக்கத் தைக் கண்ணகி வெளிப்படுத்தினாளாக, தேவந்தி, பிரிந்த கணவரை, மகளிர் பெறுதற்காம் வழி முறையாக, சோமகுண்டம், சூரிய குண்டம் மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுவதைக் கூறி, அவற்றில் யாமும் ஒரு நாள் ஆடுவாம் என்கிறாள்.

"சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்;
போகம்செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒருநாள்
ஆடுதும்" [கனாத்திறம் : 59-63]

ஆக, கண்ணகி கோவலனை உடன் பெற்றிருக்கவில்லை; அவன் ஒரு நாளும் கண்ணகி மனைக்கு வந்திலன்

என்பதை அறிந்திருந்ததினாலேயே, தேவந்தி, "பெறுக கணவனை" என்றும், அதுபெற, "ஒருநாள் குண்டம் ஆடிக் கோட்டம் தொழுவாம்" என்றும் யோசனை கூறியுள்ளாள்.

நாள்தோறும் பார்த்திருக்கும் ஒருவரை, எத்துணை நெடுந்தொலைவில் கண்டாலும் எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். ஒருவர் எத்துணைதான் நெருக்கமானவராயினும், அவரைப் பல்லாண்டு காலம் காணாதிருந்து, ஒரு நாள் திடுமெனக் காண நேர்ந்தால், கண்ணுற்றவுடனே, அவரை அடையாளம் கண்டு கொள்வது இயலாது; தன் மனைக்குச் சென்றுள்ளான் கோவலன். அம்மனையில் பணி புரியும் குற்றிளையாள், அவனைக் கண்டவுடனேயே அடையாளம் கண்டு கொண்டிலள். காவலன் போலும் எனத் தொடக்கத்தே ஐயுறுகிறாள். சிறிது கழித்தே அவனைக் கண்டு கொள்கிறாள். "காவலன் போலும் கடைத் தலையான் வந்து நம் கோவலன் என்றாள் ஓர் குற்றிளையாள்" [கனாத்திறம் : 65-66] என்ற இளங்கோவடிகளார் வரிகளையும், "தூரத்தே பார்த்து ஐயுற்று நம் காவலன் போலும் என்று, அவன் அணுகினவிடத்து ஐயம் தீர்ந்து கோவலன் என்றாள்" என்ற அரும்பத உரைகாரர், அடியார்க்கு நல்லார் ஆகிய இருவர் உரை விளக்கத்தையும் காண்க; கோவலன் தன் மனைக்கு வழக்கமாக வந்து கொண்டிருந்திருந்தால், குற்றிளையாளுக்கு அம் மயக்கம் நேர்ந்திருக்காது. அவன் பல்லாண்டு காலம், அம் மனைப் பக்கமே வாராதிருந்து விட்டுத் திடுமென வந்து நிற்கவேதான் அவளுக்கு அம் மயக்கம் நேர்ந்தது.

மகளிர்க்கு மேனி வாடுவது, கணவர் பிரிவால் ஒருவரின் மேனிவாட்டம் காண்பவர் கண்ணை உறுத்துமளவு ஒரே நாளில் திடுமெனப் பெருகிவிடுவதில்லை. பல நாட்கள், பல திங்கள், பல ஆண்டுகளாக அவ்வாட்டம்

மெல்ல மெல்ல வளர்ந்தே பெருகித் தோன்றும். மேனி வாடும் ஒருவரை நாள்தோறும் கண்டு வருவார்க்கு, அவ்வாட்டம் வாடுவாரைக் கண்ட அளவே, கலங்குறச் செய்து விடுவதில்லை. அவரை, நெடுங்காலம் காணா திருந்து, ஒரு நாள் திடுமெனக் காண்பவர்க்கே அவ் வாட்டம் கண்ணை உறுத்துமளவு கொடிதாகத் தோன்றி வருத்தமுறச் செய்யும். கோவலன் வழக்கமாக வந்து கொண்டிருந்தால், கண்ணகிக்கு மேனி வாட்டமே நேர்ந் திருக்காது. வேறு காரணத்தால் மெல்ல மெல்ல மேனி வாடி வந்திருக்குமாயின், அது அவளை வழக்கமாகக்கண்டு வந்திருப்பனாயின், அவன் கண்ணைக் கலக்கியிருக்காது. அவன், அவளைப் பல்லாண்டுகாலமாக, அறவே மறந்து விட்டு, ஒருநாள் திடுமெனச் சென்று காணவேதான் அந் நெடும் பிரிவு அளித்த அவள் மேனி வாட்டம் அவன் கண்ணைக் கலக்குவதாயிற்று. வாடிய மேனி வருத்தம் கண்டு" [கனாத்திறம் : 68] என்கிறார் ஆசிரியர்.

ஆக, இதுகாறும் கூறியவற்றால், மாதவி மாலை வாங்கி அவள் மண மனை புகுந்தது தொட்டு, கடற் கரைக்கண், அவள் பாடிய கானல் வரிப் பாட்டால் அவளை வெறுத்து விடுத்து, மீண்டும் தன் மனை புகும் வரை, கோவலன் தன் மனைக்கு ஒரு நாளும் சென்ற வனல்லன்; ஆகவே, அவன் வழக்கமாகக் கண்ணகியின் வீடு சென்று, பொருள்களைக் கொணர்ந்து கொடுத்து வந்தான், அதை மாதவியும் உணர்ந்திருந்தாள் என்ற கூற்றில் சிறிதும் உண்மையில்லை என்பது உறுதியா யிற்று.

மாதவியின் ஆடற்கலையில் ஈர்ப்புண்டுதான் கோவலன் மாதவி மனை புகுந்தான் எனக் கோடல் பொருந்துமா?

"அவள் (மாதவி) பாட்டுக்கும் தாளத்துக்கும் ஏற்ப, அவள் வீசிய நெடுங்கண் வீச்சில், அரங்கேற்றுக் காதையில், தன் மனத்தைப் பறிகொடுத்தான் அவன் (கோவலன்). கலையே அவளாக விளங்கியபோது, அவளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான்."

"மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு கோவலன் மனமருண்டான் என அவர் (இளங்கோவடிகளார்) நேரே கூறவில்லை. ஆனால், அவளது மாலையைக் கோவலன் வாங்கும்போது என்ன கூறுகிறார் ஆசிரியர்? 'எந்தக் குறிப்பிலே எழுந்ததொரு வியத்தகு கண் வீச்சில் ஈடுபட்டானோ, அந்தக் கண்வீச்சுடையாளது மாலையையே அவன் வாங்குகிறான்' என்ற குறிப்பே தெளிவாக நம் மனத்தில் எழுமாறு, "மாமலர் நெடுங்கண் மாதவி மாலை" என்று ஆசிரியர் கூறுகிறார்."

கோவலன், மாதவி உறவு கொண்ட சூழ்நிலை குறித்து, திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் (கானல்வரி : பக்கம் : 33).

இதனால் கோவலன்-மாதவிஉறவு கொண்டது, புதிய காம நுகர்ச்சி விருப்பத்தால் ஈர்ப்புண்டு நாளுக்கு ஒரு பரத்தை எனத் தேடி அலையும், அவன் பரத்தமைக் காரணத்தால் அன்று; கலையின் ஆர்வத்தில் உள்ள

தைப் பறிகொடுப்பவன் கோவலன்; மாதவியின் ஆடற் கலையால் ஈர்ப்புண்டே, அவன் அவள் உறவினை மேற் கொண்டான் என்பது தெ. பொ. மீ. கருத்தாதல் தெரி கிறது.

கோவலன் கலையுள்ளம் படைத்தவன்தான்; அதில் ஐயம் இல்லை; யாழை வார்தல், வடித்தல் போல்வன மேற்கொண்டு, மீட்டுதற்கு உரியதாக்கி, இசை யோர்த்துப் பார்த்த மாதவி, அதை மேலும் உறுதி செய்து கொள்ள விரும்பிய நிலையில், ஏவல் முறையில் அல்லாமல், இரக்கும் நிலையில் இருந்து, இசை வாசிக்கும் தாளம் யாதோ அறியேன் எனக் கூறி, யாழை அவள் கை நீட்டியதும், அவனும் அது வாங்கிக் கானல் வரிப் பாணிகளை மாதவி மனம் மகிழ வாசித்ததும், அவன் இசையறிவிற்கு ஓர் எடுத்துக் காட்டு.

> ''எட்டு வகையின் இசைக் கரணத்துப்
> பட்டவகை தன்செவியின் ஓர்த்து
> 'ஏவலன்; பின், பாணி யாது?' எனக்
> கோவலன் கை யாழ் நீட்ட, அவனும்
> காவிரியை நோக்கினவும், கடற்கானல் வரிப்
> பாணியும்
> மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்குமன்''
> —கானல் வரி.

அது போலவே, மதுரை செல்லும் இடை வழியில் கோசிகமாணியைக் கண்ணுற்ற பின்னர், துர்க்கையின் போர்க் கோலக் காட்சியைப் பாடியவாறே வந்து எதிர்ப்பட்ட பாணர் கொணர்ந்த செங்கோட்டு யாழ் உறுப்புகளை, அரும்பாலை எனும் பண்ணிசை எழுவதற்கு ஏற்ற திருத்தி அமைத்து, முறைப்படி மீட்டுச் செவிப் புலத்

தால் அறிந்து, அப்பண்ணையும், அப்பண்ணின் திறத்தை யும் அவரோடு கலந்து பாடினான்.

"ஆடியல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரின் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட்டு யாழில்
தந்திரி கரத்தொடு திவவுறுத்து யாஅத்து
ஒற்றுறுப்பு உடைமையின் பற்றுவழிச் சேர்த்தி
உழை முதல் கைக்கிளை இறுவாய்க் கட்டி
வரன்முறைவந்த மூவகைத் தானத்துப்
பாய்கலைப் பாவைப் பாடற் பாணி
ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டுப்
பாடற்பாணி அளைஇ அவரொடு"

—புறஞ்சேரி இறுத்தகாதை : 104—113.

கோவலன் கலையுள்ளம் வாய்க்கப் பெற்றவன் என்பதை, இவ்விரு நிகழ்ச்சிகளும் ஐயமற உறுதி செய் கின்றன என்பது உண்மை. அது வேறு; ஆனால், மாதவி யின் ஆடற் கலையின் திறம் கண்டு, அக்கலையால் ஈர்ப் புண்டே, அவன் மாதவி மனை புகுந்தான் என்பதற்கு அவை சான்றுகள் ஆகா.

"அவள் பாட்டுக்கும் தாளத்துக்கும் ஏற்ப, அவள் வீசிய நெடுங்கண் வீச்சில் தன் மனத்தைப் பறி கொடுத் தான்" என அறுதியிட்டுக் கூறிய தெ. பொ. மீ. அவர்கள் மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டே, கோவலன் மனம் மருண்டான் என இளங்கோவடிகளார் எங்கும் கூறவில்லை' என்ற உண்மை, தம் முடிவிற்குத் தடையாக நிற்பது உணர்ந்தமையால், "அவ்வரங்கேற்றத்தைக் குறிப்பாக யாரெல்லாம் கண்டனர் எனவும், அவர் கூறவில்லை' என்ற வரிகளில் அமைதி காண முயன்றுள்ளார்.

அரங்கேற்றக் காதையில் கூறப்படும் அவள் ஆடல், அரசவைக்கண்,அரசன் காண, முதன் முதலில் அரங்கேறி அரசர்க்காகவே ஆடிய வேத்தியல் கூத்து ஆகும். அந்த ஆடலையும், ஆடற்கலைக்குத் துணை நிற்கும் ஆடலாசிரியன், ["ஆடற்கு அமைந்த ஆசான்" (25)] இசையாசிரியன், ["அசையா மரபின் இசையோன்" (36)] புலவன், ["நாத்தொலைவு இல்லா நன்னூற்புலவன்" (44)] தண்ணுமை ஆசிரியன், ["தண்ணுமை அருள் தொழில் முதல்வன்" (55)] குழலோன் ["வழுவின்று இசைக்கும் குழலோன்" (69)] யாழ் ஆசிரியன், ["புலமையோன்" (94)] ஆகிய இவர்களே யல்லாமல், ஐம்பெருங் குழுவைச் சார்ந்த அமைச்சர், புரோகிதர், சேனாபதியர். தூதுவர், சாரணர் ஆகியோரும் கண்ணுற்றனர் ["அரைகொடு பட்ட ஐம்பெரும் குழுவும்" (126)] எனத் தெளிவாகக் கூறியுள்ளார் அடிகளார். ஆகவே, ஆடலை யாரெல்லாம் கண்டனர் என்பதை அடிகளார் குறிப்பாகவும் கூறவில்லை. ஆகவே, கோவலன் கண்ணுற்றதை நேரே கூறவில்லை என்ற வாதவலுவில், கோவலன்,அவள் ஆடலைக் கண்டு, அக்கலையால் ஈர்ப்புண்டே அவள் மனை புகுந்தான் என முடிவு கொள்வது முறையாகாது.

அரசர் நிகர் வாழ்வுடையான், அரசர்க்கு அடுத்து வைத்து மதிக்கத்தக்க வணிகர் குடி வந்தவனேனும், கோவலன், அரசவைக்கண் இருந்து, மாதவி ஆடலைக் கண்ணுற்றவன் அல்லன். வாழ்நாளில், அரசவைக்கு அணித்தாகச் செல்வதை ஒரு நாளும் செய்தறியான் கோவலன். நாள்தோறும் சென்று பழகும் இடங்களாக, அடிகளார் கூறும், விளையாட்டிடமாம் பொழில், நாள் மகிழ் இருக்கையாம் நாளங்காடி, நிறை காமப் பேச்சுப் பேசும் நகையாடாயம், பாணர், பரத்தர் இருப்பு, நகர நம்பியர் திரிதரு தெருவு ஆகியவற்றில், அரசவை இடம் பெற்றிலது அறிக.

"பூம்பொதி நறுவிரைப் பொழிலாட் டமர்ந்து,
நாள்மகிழ் இருக்கை நாளங்காடியில்
பூமலிகானத்துப் புதுமணம் புக்குப்,
புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகையாடாயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு
திரிதரு மரபின் கோவலன்..."

—இந்திர விழவூரெடுத்த காதை: 195—201.

நாடாளும் அரசர் காண ஆடும் வேத்தியல் ஆட்டம் வல்ல மாதவி, நாட்டு மக்கள் காண ஆடும் பொதுவியல் ஆட்டமும் கற்றவள். "இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து," "வேத்தியல் பொதுவியல் என்று இரு திறத்து நாட்டிய நன்னூல் நன்கு கடைப் பிடித்து" (அரங்கேற்றுக் காதை:12:39-40) என்ற வரிகளைக் காண்க. கோவலன், அவள் ஆடிய அத்தகு பொதுவியல் ஆட்டத்தைக் கண்டு அவள் ஆடற்கலையால் ஈர்ப்புண்டு, அவள் மனை புகுந்திருத்தல் கூடும் என்பதற்கும் வாய்ப்பு இல்லை. மாதவி, வேத்தியலைப் போலவே, பொதுவியலையும் ஆடியவள் என்பது உண்மை. ஆனால் அப்பொதுவியல் ஆட்டத்தை, அரசவை ஏறி அரங்கேறிய பின்னர் வந்த இந்திர விழாக் காலங்களில் ஆடியதல்லாது, அரங்கேற்றத்திற்கு முன்னர் ஆடியவள் அல்லள்.ஆகவே,மாலை வாங்கி மனைபுகுவதன் முன்னர், கோவலன் அவள் ஆடலைக் கண்டிருக்கவே இயலாது; ஆகவே, அவள் ஆடற்கலையால் ஈர்ப்புண்டே அவன், அவள் மனைபுகுந்தான் என்பது அறவே பொருந்தாது.

அரசவை சென்று, அவள் ஆடலைக் கண்டவனாயின் மாலையை அவன் ஆண்டே வாங்கியிருப்பன்; ஆனால், மாலை அங்கு வாங்கப்படவில்லை;மாறாக,நகர நம்பியர் திரிதரு தெருவில்தான் வாங்கப்பட்டது. "நகர நம்பியர்

திரிதரு மறுகில், பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த மாமலர் நெடுங்கண் மாதவி மாலை, கோவலன் வாங்கி" (அரங்கேற்று காதை: 168-171) என்ற வரிகளைக் காண்க.

அதுமட்டும் அன்று. மாதவியின் நற்றாய், தன் மகளுக்குத் துணையாக வர வேண்டிய ஆடவன், அவள் கலைத் திறம்அறிந்து பெருமைபடுத்தும் பக்குவம் உடையவனாக இருக்க வேண்டும் என விரும்பவில்லை; மாறாக, ஆயிரத்து எண் கழஞ்சு பொன் கொடுத்து மாலை வாங்கும் செல்வ வளம் உடையவனாக இருந்தால், அதுவே போதும் என்றே விரும்பினாள். "நூறுபத்து அடுக்கி, எட்டுக் கடை நிறுத்த வீறுயர் பசும் பொன் பெறுவது இம்மாலை; மாலை வாங்குநர், சாலும் நம் கொடிக்கு" (அரங்கேற்று காதை: 164-166) என்ற அவள் கூற்றினைக் காண்க.

ஆக, எந்நிலை நின்று நோக்கினும், மாதவியொடு கோவலன் உறவு கொண்டமைக்குக் கோவலனின் கலை யார்வமே காரணமாம் என்பதற்கான அடிப்படைச்சான்று சிறிதும் இல்லை என்பதே முடிந்த முடிபாம்.

"கோவலன் தன்னோடிருந்த காலத்து, அவனைப் பிரிந்ததால் கடுந்துயரத்தைக் கண்ணகியும் எய்துவாள் என்று உணராமை அவளிடத்து (மாதவி) நாம் காணும் ஒரு பெருங்குறை" [பக்கம்: 97] என மாதவி மீது தெ. பொ. மீ. குற்றம் சாட்டுவது முறைதானா?

ஒரு நிகழ்ச்சியால், ஒருவர் இன்பமோ, துன்பமோ உற நேர்ந்த நிலையில்தான், அது போலும் நிகழ்ச்சி பிறர்க்கு வாய்க்கின், அவர்களும் அது போலும் இன்ப துன்பங்களுக்கு ஆளாவர் என்பதை உணர்ந்து கொள்வர்

ஒருவன், தன்னினும், எல்லா வகையிலும் மெலிந்து இருப்பவர்க்குக் கொடுமை இழைக்க முனையும் முன்னர் ஒரு கணம், தான் ஒரு காலத்தில், தன்னிலும் வலியார் கையில் அகப்பட்டுப் பட்ட இன்னலைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பார்ப்பானே ஆகில், தன்னிலும் மெலியார்க்குக் கேடு செய்யும் எண்ணம் அக்கணமே அவன் நெஞ்சை விட்டு அகன்றுவிடும்.

"வலியாருள் தன்னை நினைக்க; தான், தன்னின் மெலியார் மேல் செல்லுமிடத்து" (குறள்:) எனக் கூறியதன் மூலம், ஒருவர் தனக்கு ஒரு கேடு நேர்ந்த வழியே, பிறர் கேடுக்கு உள்ளாகும் போது அவர் படும் துயர்க் கொடு

மையை உணர்வர் என மன இயல்பை உணர்த்தியுள்ளார் திருவள்ளுவர்.

கானல்வரி நிகழ்ச்சிவரை, பிரிவுத் துயர் என்பதையே அறியாது வாழ்ந்தவள் மாதவி. கோவலன் அவளை ஒரு நாள் கூடப் பிரிந்து அறியாப் பேரார்வம் அவள்பால் சொரிந்து கொண்டிருந்தான். விடுதல் அறியா விருப்பினன். அதனால், கோவலன் தன்னுடன் இருந்த காலத்தில், கண்ணகியின் பெருமையினையோ, கணவன் பிரிவால் அவள் உற்ற கடுந்துயரையோ, மாதவி உணர்ந்து கொள்ளவில்லை. உணர வேண்டிய நிலையே, அப்போது அவளுக்கு வாய்க்கவில்லை. அப்போது, அவள் சிந்தையும் செயலும், கோவலனுக்கு ஊடலும் கூடலும் மாறி மாறி அளித்து அவனை இன்புறுத்துவதிலேயே கழிந்து விட்டது.

தான் பாடிய கானல் வரிப்பாடல் கேட்டுக் கோவலன் பிரிந்து சென்ற அக்கணமே, பிரிவுத் துயர்க் கொடுமையை மாதவி உணர்ந்து கொண்டாள். அந்நிலையே, அவள் உள்ளமும் உடலும் செயலற்றனவாகி விட்டன.

"கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள்புக்கு,
காதலனுடன் அன்றியே மாதவி தன் மனைபுக்காள்"
[கானல்வரி: 52] என தெ. பொ. மீ. அவர்கள் கூறுவது காண்க.

கோவலன் பிரியவே, மாதவி கொடிய துயர்க்கு உள்ளாகி, உடலும் உள்ளமும் வாடி வருந்திக் கிடந்த நிலையைக் கோசிகமாணி, கோவலன் கேட்கக், கூறியிருப்பதும் காண்க.

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்று...
வருந்தினை."

—புறஞ்சேரி : 48-51

கோவலனும் கண்ணகியும், இரவோடிரவாகப் புகார் நகர்விட்டுப் போய்விட்ட செய்தியையும், அஃதறிந்து. அவ்விருவரின் இரு முதுகுரவர்களும் அப்போது உற்ற துயர்க் கொடுமையினையும் அறிந்த அளவே, மாதவி மேனி பசந்து விட்டது; ஒன்று பலவாகப் பெருகும் நோய்க்கு ஆளாகி விட்டாள். மாதவியின் இந்நிலையைப்,

"பெரும் பெயர் மூதூர் பெரும் பேதுற்றதும்
வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள் படர் நோய் உற்று"

என [புறஞ்சேரி: 66-68] கோசிகமாணியின் வாய்வழியே இளங்கோவடிகளார் விளங்கக் காட்டுவது காண்க.

பிரிவுத்துயர் இத்தகைத்து என்பதைத் தான் அறிந்து கொண்டவுடனேயே, கோவலன் தன் மனையகத்தே இருந்த காலத்தில், கண்ணகி எத்துணைத் துயர் உற்றிருப்பாள் என எண்ணிப் பார்த்தாள் மாதவி. தன்னைக் கடற்கரைக்கண் விட்டுச் சென்ற சிறிது நேரப் பிரிவுத் துயரையும் பொறுக்க மாட்டாது வயந்தமாலைபால் கடிதம் கொடுத்துக் கோவலனைத் தன்பால் ஈர்த்துக் கொள்ள முயற்சித்த தன்போல் அல்லாமல், கோவலன் அத்தனை ஆண்டு காலம் கண்ணகியை விடுத்துத் தன் பாலே இருந்துவிடவும், அவனைத் தன் மனைக்கு அழைத்துக் கொள்ள ஒரு முறையேனும் முயற்சி செய்யாது, பிரிவின் கொடுந்துயரைப் பொறுமையாகத் தாங்கி நின்ற கண்ணகியை நினைந்து பார்த்தாள். அவ்வளவே. அவள் பெருமையை உணர்ந்தாள். கோவலனைத் தன்பாலே கொண்டு விட்டு, அப்பெருமைக்குரியாளுக்குத் தான் விளைத்துவிட்ட கொடுந் துயர்க்கு— தான் செய்த அப் பெரும் பிழைக்கு வருந்தினாள். அப் பிழை பொறுக்குமாறு வேண்டிக்கொள்ளவும் துடித்தாள். அவ்வளவே; கோசிகமாணிபால் கொடுத்த கடிதத்தில், கண்ணகி புகழ் பாடியதோடு, தன் பிழைக்கு மன்னிப்பும்

வேண்டிக் கொண்டாள். அதில், தன் துயர்க்கு வருந்தாது, அவர்கள், பிறந்த மண்ணைத் துறந்து, இரவோடு இரவாக, வேற்றூர் போக நேர்ந்தமைக்குத் தானே காரணமாகி விட்டமைக்கே வருந்தினாள்.

"குலப் பிறப்பாட்டியொடு,
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்."

—புறஞ்சேரி : 89 - 91

அது மட்டுமன்று; மதுரையில், கோவலனுக்கும், கண்ணகிக்கும் நேர்ந்த கதி கேட்ட அக்கணமே, தன் கணிகையர் வாழ்க்கையன்றோ இத்துணைக் கொடுமைக்கும் காரணமாயிற்று எனக் கொண்டு, அது போலும் கொடுமைக்கு, இனி, தான் மட்டும் அன்று; தன் மகளும் காரணமாகக் கூடாது என்ற உணர்வு எழவே, புத்தப் பள்ளி புகுந்து, ஆங்குறை மாதவர் தாள் பணிந்து, புண்ணிய தானமாகப் பொருளையெல்லாம் போக்கி விட்டுத் தான் துறவு மேற்கொண்டது மட்டுமல்லாமல்' தன் கண்மணி மணிமேகலையின் கோதைத் தாமம் குழலொடு களைந்து, அவளையும் துறவுக் கோலம் பூணச் செய்து சாந்தி பெற்றாள்.

மாதவியின் இம்மாண்பு நலனைச் செங்குட்டுவன் கேட்க, மாடலமறையோன் மட்டுமல்லாமல், கண்ணகியின் அடித்தோழியும் வாயாரக்கூறி, மனதாரப் பாராட்டியுள்ளனர்:

"மற்று அதுகேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமேகலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணாது ஒழிகெனக்

கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித்தானம் புரிந்து அறங்கொள்ளவும்"
—நீர்ப்படை : 103 - 108.

என்ற மாடல மறையோன் பாராட்டு காண்க.

" காதலன் தன் வீவும், காதலி நீ பட்டதூஉம்
ஏதிலார் தாம் கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின் கீழ் மாதவர்முன் புண்ணியதானம்புரிந்த
மாதவி தன் துறவும் கேட்டாயோ, தோழி?
மணிமேகலை துறவும் கேட்டாயோ, தோழி?"
வாழ்த்துக்காதை

இது அடித்தோழி பாராட்டு.

மாதவி பிறர் துயர் காணப் பொறாதவள்; அவர் துயர்க்குத் தானே காரணமாகி விட்டது அறிந்த அக்கணமே தன்னை அழித்துக் கொண்டவள்; தன் மகள் வாழ்வையும் அழித்து விட்டவள் என்ற அடுக்கடுக்கான பெருமைக்குரியவள் என்பது மேலே கூறியவற்றால் தெளிவாகத் தெரிகிறது. அத்தகையாள் கோவலன் தன்னோடு உடன் இருந்த காலத்தில், கோவலன் பிரிவால் கண்ணகியும் வருந்துவாள் என்பதை ஒரு சிறிதே உணர்ந்திருந்தாலும், கோவலன் தன்னை விடுதல் அறியா விருப்புடையனாகத் தன் மனையகத்தே வீழ்ந்து கிடக்க விரும்பினாலும், அவனைக் கண்ணகி மனைக்குத் துரத்தியே இருப்பாள்.

ஆக, அக்காலத்தில், கண்ணகியும் பிரிவால் வருந்துவாள் என்பதை அறிந்து கொள்ள மாட்டா நிலையில், மாதவி வீழ்ந்து கிடந்த அக்காலச் சூழ்நிலை குற்றமுடையதேயல்லாது, மாதவி குற்றமுடையாள் அல்லள். ஆகவே, மாதவி மீது, தெ.பொ.மீ. குற்றம் சாட்டுவது முறையாகாது.

கோவலன் உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு அதன் வழிச் செயல்படுபவனே ஒழியச் சிந்தித்துச் செயல்படுபவன் அல்லன்!

சிலம்பை விற்றுப் பெறும் பொருளை முதலாகக் கொண்டு, இழந்த பொருள் ஈட்ட, மதுரை சென்ற கோவலன் எண்ணம், மதுரையில் தன்னொத்த வணிகர்களைக் கண்டு, அவர் துணை கொண்டு, தொழில் ஆற்ற வேண்டும் என்பதுதான்.

> "சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு
> உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்த சீர்
> மாடமதுரை அகத்துச் சென்று..."

கனாத்திறம்: 74-76

புகார் நகர் விடுத்து, மதுரை செல்லும் தன் குறிக்கோள் இதுதான் என்றே கண்ணகியிடம் தெளிவாகக் கூறினான்.

"பழம்பெரும் நகராம் மதுரையில், அரசர்க்கு அடுத்து வைத்து மதிக்கத்தகும் என் குல வணிகர்கள்பால் என் நிலை, நான் வந்திருக்கும் குறிக்கோள் குறித்துக் கூறி, ஆவன செய்து வருங்காலும், இவளைத் தங்கள் பாதுகாப்பில் விட்டுச் செல்கின்றேன்" என்றுதான் கௌந்தி அடிகளிடம் கூறி விடை கொண்டான்.

> " தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
> என்நிலை உணர்த்தி யான் வருங்காலும்
> பாதக் காப்பினள் பைந்தொடி "

ஊர்காண்: 21-23

"கூடல் மாநகரில் உன்னை விரும்பி விருந்தேற்றுக் கொள்வாரிடத்தை அறிந்து, ஆவன செய்துவிட்டுப் பின்னரே திரும்புவாயாக" என்று கூறித்தான் கௌந்தி அடிகளாரும் விடைகொடுத்து அனுப்பினார்.

"வருந்தாது ஏகி, மன்னவன் கூடல்
பொருந்துழி அறிந்து போது ஈங்கு"
—ஊர்காண் : 60-61

ஆனால், மதுரை சென்று திரும்பிய கோவலன் ஆங்கு, "மன்னர் பின்னோர்க்கு என் நிலை உணர்த்தி வருவேன்" எனக் கூறிச் சென்றது போலவோ, "பொருந்துழி அறிந்து வா" எனக் கௌந்திஅடிகளார் ஆணையிட்டதுபோலவோ, ஏற்றுச் சென்ற பணிகளை முடித்துத் திரும்பினானா என்றால் இல்லை. சென்றவன் ஆங்கு, "வையங்காவலர் மகிழ்தருவீதி" (145), "எண்ணெண் கலையோர் இருபெரு வீதி' (167), "அங்காடி வீதி" (179), "பயங்கெழுவீதி" (200), "நலங்கிளர்வீதி" (204), "அறுவை வீதி" (207), கூலவீதி (211), "நால் வேறுதெருவு" (212), "ஆவணவீதி" (213), "மன்றமும், கவலையும், மறுகும்" (214) ஆகிய இவற்றையெல்லாம் வறிதே பார்த்து வந்தானே ஒழிய ஏற்றுச் சென்ற வினைமுடித்து வந்தானல்லன்; இவற்றைக் கண்டு பெற்ற மகிழ்ச்சியில் கடமையை மறந்து விட்டான். இவற்றையெல்லாம், குறிக்கோள் ஏதும் இல்லாமல், வறிதே வெறித்துப் பார்த்துக் கொண்டே வந்துவிட்டான். அதனால்தான் ஆசிரியர் இளங்கோ அடிகளார் "அங்கெல்லாம் சென்று திரும்பினான்" என்னாது "அங்கெல்லாம் திரிந்து திரும்பினான்" என்று கூறியுள்ளார். "மன்றமும் கவலையும் மறுகும் திரிந்து" (214) என்ற வரியினைக் காண்க.

பல்வேறு இடங்களுக்கும், குறிக்கோள் இன்றிச் சென்றலையும் கீழோர் செயலைத் திரிதல் என்ற சொல்

குறிக்கும் என்பதை, முறுக்கேறிய உடலினராகிய கீழோர் வண்டுகள் மொய்க்கும் புதுக்கள் உண்ட நிலையில், பெய்யும் மழையினையும் பொருட்படுத்தாது, மேலாடை நெகிழ்வதும் நினைவிலராய்ப், பகல் கடந்த காலத்தும் நகரில் சென்றலையும் செயலைக் குறிப்பிடுங்கால், நெடுநல்வாடை, "திரிதர" என்ற சொல்லால் குறிப்பிடுவது, உறுதி செய்வது காண்க.

"மூடலையாக்கை முழுவலி மாக்கள்,
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்துளி பேணார், பகல் இறந்து
இருகோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர."
—நெடுநல் : 32-35

பிறந்த மண்ணில் வாழ்விழந்து போவதற்குக் காரணமாய் இருந்த பாணரோடும், பரத்தரோடும் திரியும் பழக்கம் வாழ்வு தேடிவந்த இடத்திலும், கோவலனை விடவில்லை போலும்!

கௌந்தி அடிகளிடம், சென்று வந்த செய்திகளைக் கூறியபோதும், மதுரையின் மாண்பு, அம்மாநகர் ஆளும் மன்னவன் கொற்றம் இவைபற்றித்தான் கூறினானே ஒழிய, வணிகர்களைக் கண்டது பற்றிக் கூறவில்லை. காரணம், வணிகர்களை அவன் பார்க்கவில்லை.

"தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்
மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழி"

என்ற வரிகளைக் காண்க. (அடைக்கலம் : 9-10)

கோவலனின் இப்போக்கு, கௌந்தி அடிகள் உள்ளத்தைப் பெரிதும் வருத்தியுளது; வழியிருந்தும் வாய் இல்லாமையால், இவன் வருந்த நேருமோ, என் அஞ்சி

யுள்ளார். அதனால்தான், மதுரைப் புறஞ்சேரி, தம்மைப் போலும் மாதவத் தோர்க்கல்லாது, கோவலன் போலும் இல்லறத்தவர்க்கு இடமாதல் இயலாது என்பதை அறிந்து, கோவலனையும், கண்ணகியையும், மதுரை அக நகர்க்கு அனுப்பிவைக்கும் நிலையில், "கோவல! போகும் இடத்தில், உங்களுக்குக் கிடைக்கும் வரவேற்பு, உங்கள் நிலையை நீ எடுத்துச் சொல்லும் உன் சொல் திறத்தில் தான் உளது" எனக் கூறி அனுப்புகிறார்.

> "அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின், நின்
> உரையிற் கொள்வர்"

என்ற கௌந்தி அடிகளார் உரை காண்க. (அடைக்கலம்: 109-110) "நின் உரை" என்பதற்கு "மாசாத்துவான் என்னும் பிரகாசம்; வணிகர் நின் பிரகாசத்தாலே, நின்னை அகநகர் மருங்கில் வைத்துக் கொள்வர்" என அரும்பத உரையாசிரியரும், "மாசாத்துவான் மகன் என்னும் புகழால் எதிர் ஏற்றுக் கொள்வார்; நின் உரை என்றார், மாசாத்துவான் மகன் என்பதனை" என அடியார்க்கு நல்லாரும் உரை விளக்கம் அளித்தாலும், "நின் உரை" என்பதற்கு, "உன் சொல் திறம் அல்லது உன் சொல்லாற்றல்" எனப் பொருள் கோடலே பொருந்தும். "வாயில் இருக்கிறது வழி", "வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்" என மக்களிடையே வழங்கும் பழமொழிகளையும் காண்க.

தானும் வாழ்வான்; உடன் அழைத்து வந்திருக்கும் கண்ணகியையும் வாழ வைப்பான் கோவலன் என்ற நம்பிக்கை கௌந்தி அடிகளார்க்கு உண்டாகவில்லை. அதனால்தான் மதுரைமாநகரில், மன்னர்க்கு அடுத்த வரிசையில் வைத்து மதிக்கத்தக்க மாபெரும் வணிக மக்கள், தங்களுக்குக் கிடைத்தற்கரிய பெருமைமிகு

விருந்தினராக ஏற்றுக் கொள்ளத்தக்க பெருநிலையும், பெருவாழ்வும் உடையோராகிய கோவலனையும், கண்ணகியையும், ஏதும் அற்றவர்களாக, திக்கற்றவர்களாகக் கொண்டு, ஓர் ஆயர் மடந்தைபால், அடைக்கலப் பொருள்களாக ஒப்படைக்கத் துணிந்தார் கௌந்தி அடிகளார்.

மாநகரத்து வணிகர்கள்பால், தங்களை அறிமுகம் செய்துகொண்டு, அவர்கள் துணையோடு வாழ்க்கையைத் தொடங்க மாட்டான் கோவலன்; அது செய்ய முனைவான் என்றாலும், அதை, அத்துணை விரைவில் செய்து முடிக்கமாட்டான்; சில நாட்களாவது ஆகும். அது வரை, அவர்கள் இருப்பதற்கு ஓர் இடத்தைத் தேடித்தர வேண்டுவது இன்றியமையாதது; அது செய்யாது விட்டால், கோவலனும் கண்ணகியும், மதுரைமாநகரில் இருக்கவும் இடம் காணா அனாதைகள் போல் அலைய நேரும் என அஞ்சினார். அதனால்தான், "அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின் உரையிற் கொள்வர்; ஆகவே மாநகர் புகுக" என வழிகாட்டி விடை கொடுத்தவர், அப்படியே போகவிடுத்துத், தம் பணி நோக்கிப் போவது செய்யாது, மாதரியைக் கண்ணுற்றதும், அவ்விருவரையும் அவள்பால் அடைக்கலப் பொருள்களாக ஆக்கி அனுப்பி வைத்தார்.

வணிகப் பெருமக்களைக் கண்டு, வாழ ஒருவழி வகுத்துக் கொள்வான் கோவலன் என்ற நம்பிக்கை கௌந்தி அடிகளுக்கு உண்டாகவில்லை என்பது, "மதுரை மாநகரத்து வணிகப் பெருமக்கள், இவர்களைத் தங்கள் வீட்டிற்கு வருதற்கரிய சிறந்த விருந்தினர்களாக மதித்து வரவேற்றுக் குடிஅமர்த்துவர்; அவர்கள் அது செய்யுங்காலும், இவர்களைக் கொண்டு சென்று காப்பாயாக" என மாதரிபால் கூறும்போது, "இவர்கள் நிலைமை அவ்

வணிகப்பெருமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், தாம் யார் என்பதை இவன் எடுத்துக் கூறினால்," என்ற ஐயப் பாடு வாய்பாட்டினால் கூறும் முகத்தான் தம் ஐய உணர்வை அடிகளார் தெளிவாக வெளிப்படுத்தி யிருப்பது காண்க.

"மாதரி! கேள்; இம்மடந்தை தன் கணவன்
தாதையைக் **கேட்கின்** தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங்கண்ணியொடு கடிமனைப்படுத்துவர்"

என்ற வரிகளைக் காண்க. (அடைக்கலம்:125-128)

ஆகக் கோவலன் சிந்தித்துச் செயல்படுபவன் அல்லன் என்பதைக் கௌந்தி அடிகளாரும், அவனோடு பழகிய சின்னாட்களிலேயே அறிந்து கொண்டார் என்பது தெளி வாகிறது.

காது, கை, கால்களில் அணியும் அணிகள் இணையாக அணிய வேண்டுவன; அத்தகைய அணிகளில் ஒன்றுதான் சிலம்பும். பண்ண வேண்டுமாயினும் இணையாகவே பண்ண வேண்டும். வாங்க வேண்டுமாயினும் இணை யாகவே வாங்கவேண்டும். விற்கவேண்டுமாயினும், இணை யாகவே விற்க வேண்டும். ஒன்றை விற்றுவிட்டு ஒன்றை வைத்திருப்பதும் பயனில்லை. அது போலவே, ஒன்றை மட்டும் வாங்குவதும் பயன் அளிக்காது. இதில் தெளிவான சிந்தனை உடையவள் கண்ணகி. அதனால்தான் "இலம் பாடும் நாணுத் தரும்" என்ற கோவலனுக்கு விடை அளித்த கண்ணகி, "சிலம்பு உள கொண்மென" (கனா:73) என்ற தொடரில், "சிலம்பு உள" எனப் பன்மை வாய்பாடு கூடிய வகையால், இரண்டு சிலம்புகளையுமே கொள்க எனக் கூறினாள். கண்ணகி, சிலம்புகளை இணையாகவே கொடுக்க முன் வந்திருக்கவும், கோவலன், "சீறடிச் சிலம்

பின் ஒன்று கொண்டு, யான் போய் மாறி வருவன்'' (கொலைக்களம்:92-93) எனக் கூறி, ஒற்றைச் சிலம்பைக் கொண்டு சென்றதன் முகத்தான், "கோவலன் சிந்தித்துச் செயல்படும் தெளிவுடையான் அல்லன்'' என்ற குற்றச் சாட்டிற்கு வலுவேற்றி விடுவது அறிக.

வயிரம் முதலாம் நவமணிகளின் குணம் குற்றம் அறிந்த வல்லோர் இருந்து தொழில் புரியும் நவரத்தின வணிக வீதியினையும், சாதரூபம் முதலாம் பொன்னின் இனம் அறிந்து தொழில் புரியும் பொன் வணிகர் வீதியை யும் முன்னாள் கண்டு வந்தவனாதலின், சிலம்பு கொண்டு புறப்பட்ட கோவலன், நேரே, அவ்வணிகர்களிடமே சென்றிருக்கவேண்டும். மேலும், அவன் கொண்டு செல்வது, "காவலன் தேவிக்கு ஆவதோர்'' சிறப்பு வாய்ந்த விலை மதிக்க வொண்ணாக்காலணி. ஆகவே அதை விற்கச் சென்றவன், வணிகர்களிலும், அரசர் குடும்பத்திற்காம் உயர்ந்த அணிகளை ஆக்கி அளிக்க வல்ல பெரு வணிகர் களிடமே சென்றிருக்க வேண்டும். ஆனால், கோவலன் அது செய்தானா என்றால், இல்லை. வணிக வீதியில் அடியிட்ட அளவே, எதிரில் பொற் கொல்லன் வரக்கண்டு, அரசர்க்குரிய அணிகலன்களை விலை மதிக்கவல்ல பெரிய பொற் கொல்லனாக இருக்க வேண்டும் எனத் தானே கருதிக் கொண்டு விட்டான். அவ்வளவே. வணிகர் களைக் காணவேண்டும்; தன் நிலை உணர்த்த வேண்டும் என்பதை மறந்தே போனான்; பொற்சிலம்பைப் பொற் கொல்லன் கையில் கொடுத்து விலை மதிக்குமாறு கூறி விட்டான். மாநகர் காண, முன்னாள் சென்ற போது, இவனை அறிந்து வந்தானா கோவலன் என்றால், இல்லை. அறிந்து வந்திருந்தால், "உன்னால் இதற்கு விலை கூற இயலுமா?'' 'நீ விலை இடுதற்கு ஆதியோ?' என்று கேட்டிருக்க மாட்டான். மேலும், பொற் கொல் லனை, அவன் பணி புரியும் இடத்தில், இருந்து தொழில்

புரியும் நிலையில் கண்டனனா என்றால், அதுவும் இல்லை. தெரு வழியே வந்து கொண்டிருக்கும் நிலையில், தெருவு இடையே நிறுத்தியே விலை பேசத் தொடங்கி விட்டான்.

"வேந்தற்கு விளம்பி யான் வர என் சிறுகுடில் ஆங்கண் இருமின்" எனக் கூறிச் சென்ற பொற் கொல்லன், மீண்டு வந்து, "சிலம்பு காணிய வந்தோர் இவர்" என, உடன் கொண்டு வந்த கொலையாளிகளை அறிமுகம் செய்து வைத்த போதும், அவர்களை ஐயுறுதற் கேற்ற சிந்தனைத் தெளிவு கோவலனுக்கு உண்டாக வில்லை.

"இலக்கண முறைமையின் இருந்தோன் ஈங்கிவன் கொலைப்படு மகன் அலன்" எனக், கொலையாளிகளில் ஒருவன் கூறிய போதும், பொற்கொல்லன் குடிலில், கொலை பற்றிய பேச்சு, சிலம்பு காண வந்தோன் வாயில் வருவானேன் என்ற சிந்தனை கோவலனுக்குத் தோன்ற வில்லை.

(கொலையாளிகளைத் தன் வழிக்குக் கொணர்வான் வேண்டிக், கள்ளர்களின் பல்வேறு திறமைகளை, விரி வான வகையில் பொதுவாகவும், இளங்கோ வேந்தன் கழுத்தாரத்தைக் களவாடிய கள்வன் ஒருவனின் தனித் திறமையைக் குறிப்பாகவும்,பொற் கொல்லன் கூறுவதும், பொற் கொல்லனின் அச் சொல் வன்மையால் ஈர்க்கப் பட்டுவிட்ட கொலையாளிகளில் ஒருவன், தான் கண்ட கள்ளன் ஒருவனின் திறத்தை விளக்குவதும் ஆகிய, சிலம்பு வாணிகத்தோடு சிறிதும் தொடர்பில்லாத சொல்லாடல்கள் நெடும் பொழுது நிகழ்ந்திருந்த நிலை யிலும், கோவலன் சிந்தனை செயல்பட்டிலது.)

"மாதவி மனை புகுந்த கோவலன், தன் மனையை அறவே மறந்துவிடவில்லை" எனல் பொருந்துமா?

1. "மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து"

என அரங்கேற்றுக் காதையில் [170-175] கூறியதன் மூலம், கோவலன் மாதவிபால் விடுதல் அறியா விருப்பம் உடைய வனாகி விட்டமையால், தன் மனையகத்தை அறவே மறந்து விட்டான் எனக் கூறப்பட்டாலும், அவன் தன் மனை வாழ்க்கையை மறந்தவனல்லன் என்பதற்கான அகச் சான்றுகளும் உள்ளன என வாதிடுவாரும் உள்ளனர்.

2. பிள்ளை நகுலத்திற்கு அறியாதே கேடு புரிந்து, கணவ னால் கைவிடப்பட்டு, அப்பழி தீர, அவன் கொடுத்த வட மொழி வாசகம் எழுதிய ஏட்டை வாங்கும் தகுதியுடை யாரைத்தேடத் தொடங்கிய பார்ப்பனி, புகார் நகரத்துப் பீடிகைத் தெருவில் பெருங்குடி வாணிகர் மாடமறுகில் சென்றே மனைதொறும் புகுந்து புகுந்து கேட்டாளாக, அவளை அணுகக் கூவி, அவள் குறை கேட்டு, அவ்வேடு வாங்கி, அவள் பழி தீர்த்தான் கோவலன் என்கிறான் கோவலனின் வாழ்க்கை முறைகளையெல்லாம் உணர்ந்த அவன் பார்ப்பனத் தோழன் மாடல மறையோன்

"பீடிகைத் தெருவில் பெருங்குடி வாணிகர் மாடமறுகின் மனைதொறும் மறுகிக், கருமக் கழிபலம் கொண்மினோ எனும் அருமறையாட்டியை அணுகக்கூய்" (அடைக்கலக்காதை : 60-63) என்ற வரிகளைக் காண்க எனச் சான்று காட்டுவர் அவர்கள்.

3 ஆக, பார்ப்பனி, வடமொழி வாசகம் எழுதிய ஏட்டை வாங்குவாரைத் தேடிப் பீடிகைத் தெருவில் பெருங்குடி வாணிகர் மாடமறுகிற்கே சென்றாள் என்பதும், கோவலன் அவளை ஆங்கே கண்டு அணுக அழைத்து அவள் துயர் தீர்த்தான் என்பதும், கோவலன் மாதவியொடு உறவு கொண்டிருந்த நிலையிலும், தன் மனை வாழ்க்கையை மறந்தவனல்லன்; பீடிகைத் தெருவில் உள்ள தன் மாடமறுகில் வாழ்வதும் மேற்கொண்டிருந்தான் என்பதை உறுதி செய்கின்றன என்பர்.

4 தம் கூற்றுக்கு அரணாக மற்றுமோர் அகச்சான்றும் காட்டுவர் : கானல் வரிப் பாடல் நிகழ்ந்த அன்று மாலை, கோவலன்பால் சேர்த்து அவனைக் கொணருமாறு பணித்து மாதவி கொடுத்த கடிதத்தைக் கொண்டு சென்ற வசந்தமாலை, அக்கடிதத்தைக் கோவலனிடம் கொடுத்த இடம் கூலமறுகு ஆகும். "மாலை வாங்கிய வேலரி நெடுங்கண், கூலமறுகில் கோவலற்கு அளிப்ப" [வேனிற்காதை : 72-73] என்று கூறுகிறார் இளங்கோவடிகளார். கூலமறுகாவது பல்வேறு வகைப் பொருள்கள் விற்கும் பெருங்கடை வீதியாகும். "பால் வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு கூலம் குவித்த கூலவீதி" [இந்திர விழவூரெடுத்தகாதை : 22-23], "கூலம் குவித்த கூலவீதி" [ஊர்காண் : 211] என்ற வரிகளைக் காண்க.

5 ஆக, மாதவியைக் கடற்கரைக்கண் விட்டுப் பிரிந்த கோவலனும், ஆங்கிருந்து நேரே கடைவீதிக்குத்தான்

சென்றுள்ளான். அவன் அங்கு வழக்கமாக இருப்பதை அறிந்திருந்ததனாலேயே வசந்தமாலையும், கடிதத்தை எடுத்துக் கொண்டு நேரே கடைவீதிக்கே சென்றுள்ளாள். ஆக, மாதவியொடு தொடர்பு கொண்ட கோவலன், தன் மனையை அறவே மறந்து விட்டவனல்லன்; மாதவி மனையில் வாழ்வது போலவே, தன் மனையிலும் வாழ்ந் திருந்தான் என்பது, இதனாலும் தெளிவாகிறது என்பர்.

ஆனால், மாதவியின் மாலை வாங்கி, அவள் மனை புகுவதற்கு முன்னர்க், கோவலன் கண்ணகியொடு தன் மனையகத்தே சில ஆண்டுகள் இருந்து இல்லறம் ஆற்றி யுள்ளான். "யாண்டு சில கழிந்தன இற்பெருங் கிழமை யின், காண்டகு சிறப்பின் கண்ணகி தனக்கு" (மனையறம் படுத்தகாதை: 89 - 90) என்ற வரிகளைக் காண்க.

பிள்ளை நகுலத்திற்கு அறியாதே கேடு புரிந்தாளின் பழிதீர்த்த கோவலன் செயல், அந்தச் சில ஆண்டுகளில் நிகழ்ந்ததாகக் கொண்டு விட்டால், அந்நிகழ்ச்சியைச் சான்று காட்டிக் கோவலன், மாதவியோடு இருந்த காலத் திலும், தம் மனையை அறவே மறந்தவன் அல்லன் எனக் கொள்ளும் முடிவு வலுவற்றுப் போய்விடுகிறது.

இத்தடைக்குக், "கோவலனின் இப்பண்பு நலத்தைக் கூறிப் பாராட்டும், அவன் பார்ப்பனத் தோழன் மாடல மறையோன், இந்நிகழ்ச்சியை, மணிமேகலையின் பெயர் சூட்டு விழாவின்போது, கோவலன், களிறு அடக்கி மறையோனைக் காத்த செயலை அடுத்தே வரிசைப் படுத்தியுள்ளான் ஆதலின், இதைக் கண்ணகியோடு வாழ்ந்த சில ஆண்டு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கோடல் கூடாது. மாதவி உறவு கொண்ட பின்னர் நிகழ்ந்த அருஞ் செயலாகவே கொள்ளுதல் வேண்டும்" என விடை அளித்து விடுவர் அவர்;

"மனையகம் மறந்தான்" (அரங்கேற்றுக் காதை : 175)

எனத் தம் கூற்றுப்படக் கூறியது மட்டும் அல்லாமல் "அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை" (கொலைக் களக்காதை: 71 - 73) என, மனைவியோடிருந்து மனையறம் நடாத்த மறந்து போன கோவலன் செயலைக், கண்ணகி, அவன் நேர்முகமாகவே நின்று எடுத்துக் காட்டும் நிலையின் அவள் கூற்றிலும் வைத்துக் கூறியுள்ளார் இளங்கோவடிகளார்.

மேலும், நாடு காக்கும் காவலரும் வேட்கை கொள்ளும் பெருவளம் கொண்ட பெருங்குடியில் வந்தவன் கோவலன். "உரைசால் சிறப்பின் அரைசு விழைதிருவின் பரதர்" (மனையறம் படுத்த காதை : 1 - 2) என இளங்கோவடிகளார் கூறுவது காண்க. ஆகவே, கோவலன், காவலன் போலவே காட்சி அளிப்பன் ஆதலாலும், கோவலன் மனை மறந்து பல்லாண்டு கழிந்து விட்டமையால், அவன் உருவை, அவன் மனை குற்றிளையோரும் மறந்துபோக, அவன் கடைவாயிற் கண் வந்து நிற்கவும், அவர் கண்களுக்குக் கணப்போது கோவலனாகக் காட்சி அளிக்காது, காவலனாகத் தோற்றம் அளித்துவிட்டமையால், அவர்கள் "காவலன் போலும் கோவலன் கடையகத்தான்", "காவலன், போலும் கடைத்தலையான் வந்து, நம் கோவலன் என்றாள் ஓர் குற்றிளையாள்" (கனாத்திறம் உரைத்த காதை: 65 - 66) எனக் கூற வேண்டிய நிலை நேர்ந்து விட்டது.

ஆகவே, மாலை கொண்டு மாதவியோடு உறவு கொண்டது முதல், அவள் பாடிய கானல் வரி கேட்டு, அவளை வெறுத்துக் கைவிட்டுத் திரும்பியதுவரையான இடைப்பட்ட காலத்தில், கோவலன், கண்ணகிவாழும்,

தன்மனைக்குச் சென்றவன் அல்லன் என்பதே உறுதியாகிறது.

ஆனால், பிள்ளை நகுலத்திற்குக் கேடுசெய்த பார்ப்பனியின் துயர் தீர்த்தலும், வயந்தமாலை வந்து கொடுத்த மாதவியின் மடலை வாங்க மறுத்தலும் ஆகிய கோவலன் நிகழ்ச்சிகள், மாதவியின் மனையல்லாத, முறையே, பெருங்குடி வாணிகர் மாடமறுகின் மனையின் கண்ணும், கூலமறுகின்கண்ணும் நிகழ்ந்தனவாகக் காட்டும் அகச் சான்றுகள் இருக்கும்போது, கோவலன் மாதவியையும், அவள் மனையையும் விடுதல் அறியா விருப்பினன் ஆயினன் என்பது எவ்வாறு பொருந்தும் என்ற வினா எழல் இயல்பே.

பார்ப்பனியின் துயர் தீர்த்த செயலை, மாதவியின் உறவு கொண்ட பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கொண்டாலும், அது, கோவலன் தன் மனையை மறந்தவன் அல்லன் என்ற கூற்றிற்குத் துணை செய்வதாகாது.

பீடிகைத் தெருவாவது, பெருங்குடி வணிகர்கள் இருந்து வாணிகம் புரியும் தெருவாகும். "கோடி பல அடுக்கிய கொழுநிதிக்குப்பை மாடமலிமறுகின் பீடிகைத் தெருவு" (கடலாடுகாதை: 121-122) என முன்னரும் கூறப்பட்டிருப்பது காண்க. பீடிகைத் தெருவு, பெருங்குடி வணிகரின் மாடமலி மறுகோடு இணைத்தே கூறப்படும் ("பீடிகைத் தெருவும்,பெருங்குடி வாணிகர் மாடமறுகும்" —இந்திர விழவூர் எடுத்த காதை: 41-42) என்றாலும், பீடிகைத் தெருவு வேறு; பெருங்குடிவாணிகர் மாடமறுகு வேறு. பீடிகைத் தெருவு வணிகப் பெருமக்களின் பெரு வாணிகம் நடைபெறும் வீதி; வாணிகர் மாடமறுகு, அவ் வணிகப் பெருமக்கள் வாழும் மாடமாளிகைகள் இடம் கொண்டிருக்கும் பெருவீதி. "பீடிகைத் தெருவு" என்ற தொடருக்கு, இந்திரவிழவூர் எடுத்தகாதை(41), கொலைக்

கனக்காதை (104) ஆகிய இரு இடங்களிலும், "கடைத் தெருவு" என அடியார்க்கு நல்லார் உரை கூறியிருப்பதும், "வணிகர் மாடமறுகு" என்ற தொடருக்கு, "வணிகர் குடியிருப்பு" என அரும்பத உரைகாரரும், "பெரிய குடியிருப்பை உடைய வாணிகரது மாடமாளிகைத் தெருவு" என அடியார்க்கு நல்லாரும் பொருள் கூறியிருப்பது காண்க.

பார்ப்பனி, "கருமக்கழிபலம் கொண்மினோ" எனக் கூவியவாறே, பீடிகைத் தெருவிலும் அலைந்து திரிந்துள்ளாள்; பெருங்குடி வாணிகர் மாடமறுகிலும், அலைந்து திரிந்துள்ளாள்; வேறு பல மனைகள் தோறும் அலைந்து திரிந்துள்ளாள். அந்நிலையில், பீடிகைத் தெருவில் இருந்த கோவலன், அவளை அருகில் அழைத்து அவள் துயர் தீர்த்தான். அது போலவே வசந்தமாலை, மாதவி கடிதத்தோடு சென்று, கோவலனைக் கண்டது, கூலமறுகில்; அதாவது பல்வேறு கூலங்கள் விற்கப்படும் பெருங்கடை வீதியில், அதாவது பீடிகைத் தெருவில்.

ஆகக் கோவலன் வாழ்வது, தொடக்கத்தில் சில ஆண்டுகள், கண்ணகி மனையிலும், பின்னர்க் கானல்வரி நிகழ்ச்சிவரை மாதவி மனையிலும் என்றாலும், அந் நாட்களில், அவன் முறையாகப் பெருவாணிகத்தெருவில், அதாவது பீடிகைத் தெருவில், தன் வாணிக நிலையத்தில் இருந்து வாணிகம் புரிந்து வந்தான் என்பதுதான் அவ்விரு அகச் சான்றுகளாலும் உறுதி செய்யப்படுமே யல்லாது, அவன் மாதவியோடு உறவு கொண்டிருந்த போதும், தன் மனைக்குச் சென்று வந்தான் என்ற முடிவுக்கு அரண் செய்வன ஆகா.

ஆகவே, மாதவி உறவு கொண்ட பின்னர்க் கோவலன் தன் மனையை மறந்தே வாழ்ந்தான் என்பதே முடிந்த முடிபாகும்.

"குலம் தருவான் பொருள் குன்றம் தொலைந்து இலம்பாடுற்றேன்" என்ற கோவலன் கூற்றில் வரும் குலந்தருவான் பொருள் குன்றத்தில் மங்கல அணியும், காற்சிலம்பும் ஒழிந்த கண்ணகியின் பல்வேறு அணிகளும் அடங்கும் எனல் பொருந்துமா?

"குலந்தருவான் பொருள் குன்றம் தொலைந்த இலம்பாடு நாணுத்தரும்" எனக் கோவலனும், அது கேட்டுச் "சிலம்புள கொண்மென" (சிலம்பு:9: 70 – 71, 73) எனக் கண்ணகியும் கூறுவது கொண்டு, சிலம்பு தவிர்த்த, கண்ணகியின் பிற அணிகள் எல்லாம், மாதவிக்குக் கொடுத்தே தீர்ந்து போயின எனக் கொள்வது பொருந்துமா?

"சிலம்பு முதலாகச் சென்ற கலனொடு உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்" (சிலம்பு:9: 74—75) என்பது காண்டு, முதலீடு செய்ய, சிலம்பு தவிர்த்து வேறு 'ணிகலன் எதுவும் இல்லை, அனைத்தும் தீர்ந்து பாயின எனக் கூறுவதும் பொருந்துமா?

மனையறம் படுத்த காதையில், கண்ணகியைப் ரராட்டும் கோவலன், "மறுவில் மங்கல அணியே அன்றி ம் பிறிதணி அணியப் பெற்றதை எவன்கொல்?", "திரு லைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும் ஒரு காழ்

முத்தமொடு உற்றதை எவன் கொல்?'' (சிலம்பு:2:63-64; 69-70] எனப் பாராட்டுவது கொண்டு, கண்ணகிபால் மங்கல அணி அல்லாமல், ஒரு காழ் முத்தம் போலும் பிற அணிகள் பல இருந்தன என்பது உறுதி செய்யப்பட்டது ஒன்று.

அது போலவே, கோவலன் கண்ணகியை மறந்து, மாதவியை அடைந்து விட்ட நிலையில், கண்ணகி மங்கல அணி தவிர்த்துப் பிற அணிகள் அணிவதில் மகிழ்ச்சி கொள்ளவில்லை என்பதை உணர்த்த, கால் சிலம்பையும், இடை மேகலையையும், காது குழையினையும், இழந்து நின்ற நிலையை, "அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய, மென்துகில் அல்குல் மேகலை நீங்க... கொடுங் குழை துறந்து வடிந்து வீழ்காதினள்'' (சிலம்பு: 4, 7-51) என்ற அடிகளால் ஆசிரியர் விளக்குவது கொண்டு, கோவலன் மாதவியை அடைந்த தொடக்க நாளன்றும், கண்ணகிபால், சிலம்பு மட்டுமல்லாமல், மேகலை, குழை போலும் பிற அணிகள் இருந்தன என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

இவ்வளவு அணிகள் இருந்திருக்கவும், தன் இல்லாமையைக் கூறி வருந்திய கோவலனுக்குச் "சிலம்புள'' எனச் சிலம்பு ஒன்றை மட்டுமே கண்ணகி கூறியிருப்பது நோக்க, அப்போது, அது தவிர்த்துப் பிற அணிகளையெல்லாம் கோவலன் அழித்துவிட்டான் என்றே கொள்ள வேண்டும் என வாதிடுவோர் கூற்றில் வலுவில்லை எனக்கூறி மறுத்துவிட இயலாது என்பது உண்மை.

வயங்கிணர்த் தாரோனாகிய தன் மகன் கோவலன், தயங்கிணர்க் கோதையாம் கண்ணகியோடு மகிழ்ந்து வாழ்ந்திருக்கும் நாட்களில் அவர்கள் இருவரும் தனியே இருந்து இல்லறம் ஆற்றிப் பெறும் சிறப்பினைக் காணும் பேருள்ளத்தோடு, கோவலனைப் பெற்ற பெருமனைக்

கிழத்தி, அவர்களைத் தனியே குடி அமர்த்தியபோது, அவ்வாழ்க்கைக்குத் துணைசெய்ய, "வேறுபடு திருவினை" வழங்கினள். வேறுபடு திருவாவது நானா விதமான செல்வம் என்கிறார் அரும்பத உரையாசிரியர். பல படைப்பாகிய செல்வம் என்கிறார் அடியார்க்கு நல்லார்.

அவ்வாறு வேறுபடு திருவினைக் கோவலன் தாய் கொடுப்பதற்கு முன்பே, மங்கல அணியல்லாமல், ஒருகாழ் முத்தம் போலும் பல்வேறு அணிகளை அணிந்திருந்தாள் கண்ணகி. அணிந்துள்ள அணிகளின் பொறை தாங்க மாட்டாது, முகம் முத்து முத்தாக வியர்த்துப் போய் விடும்; இடை பெரிதும் வருந்தித் தளர்ந்து போய்விடும். அந்த அளவான பேரணிகலன்களை அணிந்து கொண்டிருந்தாள். கண்ணகியோடு கோவலன் மகிழ்ந்திருந்த நாளில்தான், கோவலன்தாய், வேறுபடுதிருவினை வழங்கி அவர்களை வேறே குடி அமர்த்தினாள்.

"திங்கள் முத்து அரும்பவும், சிறுகுஇடை வருந்தவும்
இங்கிவை அணிந்தனர் என் உற்றனர் கொல்?
....
உலவாக் கட்டுரை பல பாராட்டித்
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வுழி நாள்
வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி
....
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமொடு ஒருதனிப் புணர்க்க"

—மனையறம்: 71-88

ன் மனை புகுந்து, கண்ணகியின் வாடிய மேனி தம் கண்ட கோவலன் கூறிய முதற் கூற்றில்

அணிகலன்தொலைந்த இலம்பாடு கூறப்படவில்லை. "குலம் தருவான் பொருட் குன்றம் தொலைந்த இலம்பாடு நாணுத்தரும்" (கனாத்திறம் : 70-71). 'குலந் தருவான் பொருள்"என்பதற்கு அரும்பத உரையாசிரியர், "தாயத்தாரால் தரப்பட்ட பொருள்" என்றும், அடியார்க்கு நல்லார், "குலத்தில் உள்ளார் தேடித் தந்த மிக்கநிதிக்குன்றம்;தொன்றுதொட்டு வருகின்ற பொருள்" என்றும் பொருள் கூறியுள்ளனர்.

ஆகவே, கண்ணகியைக் கண்ட அளவே, தான் தொலைத்து விட்டதாகக் கோவலன் கூறிய குலந்தருவான் பொருள் என்பது அவன் தாயாம் பெருமனைக் கிழத்தி, அவர்களின் இல்லறச் சிறப்பு காண வழங்கிய "வேறுபடு திரு" மட்டுமே. அது வழங்குவதற்கு முன்பாகக் கண்ணகிபால் இருந்த அணிகலன்களின் அழிவுபற்றி ஏதும் கூறப்படவில்லை.

கண்ணகியைக் கண்ணுற்றதும் கூறிய முதற்கூற்றில் தொலைத்தது, "குலம் தருவான் பொருள்" எனப் பொதுப்படக் கூறினானேனும் "சிலம்புள கொண்மின்" எனக் கண்ணகி கூறிய பின்னர், அச்சிலம்பு முதலாக ஈட்டக் கருதியவற்றில் "சென்ற கலனொடு உலந்த பொருள்" (கனாத்திறம் 74-75) என அணிகலன், பொருள் இரண்டையுமே கூறியுள்ளான்; ஆகவே, கண்ணகியின் அணிகலன்களும் அழிக்கப்பட்டன என்பதில் ஐயம் இல்லை

ஈட்ட எண்ணியபோது, பொருளோடு, கலனையும் இணைத்தே கூறினானேனும் நாணுத்தரும் இலம்பாடு உறுதற்குக் காரணமான இழப்பினைக் கூறும்போது, பொருள் ஒன்றை மட்டுமே கூறினான்; பொருள் என வறிதே கூறிவிடாமல், குலந்தருவான் பொருள் குன்றம் எனக் கூறியுள்ளான். ஆகவே, கலன் அழிவும் ஓரளவு

நிகழ்ந்திருக்குமேனும், பொருட் குன்றமே அழிந்தது போலும் பேரழிவுக்கு அது ஆளாகவில்லை. ஆகவே கண்ணகிபால், மங்கல அணி தவிர்த்த ஏனைய அணிகலன்கள் அவ்வளவும் அறவே அழிந்து போயின எனக் கொள்வதற்கு இல்லை என்பது உறுதி செய்யப்படுகிறது

[கானல்வரிப் பாட்டின் முடிவில், மாதவியை வெறுத்துக் கடற்கரையிலேயே விடுத்துத் தனித்துத் திரும்பிய] கோவலன், கண்ணகியை அடைவதற்குச் சற்று முன்பாக, கண்ணகி துயர் தீர்வதற்காம் வழிவகை கூறி ஆறுதல் உரைக்கும் தேவந்திக்குக், கண்ணகி பொற்றொடி அணிந்தே தகாட்சிஅளித்துள்ளாள். கண்ணகியைத் தேவந்தி, "பொற்றொடீ" என்றே அழைத்துள்ளாள். அது மட்டுமன்று; கணவனை அடைய, சோமகுண்டம், சூரிய குண்டம் ஆகிய துறைகளில் நீராடிக்காமவேள்கோட்டம் தொழலாம் எனக் கூறிய தேவந்தி கூற்றை மறுத்து, அது பீடு தருவதாகாது எனப் பதில் அளித்த கண்ணகி, ஆசிரியர்க்கு ஆயிழை அணிந்தே காட்சி அளித்துள்ளாள். "பொற்றொடீஇ!...சோமகுண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு தாமின்புறுவர் உலகத்துத் தையலார் போகம் செய் பூமி யினும் போய்ப் பிறப்பர்; யாமொருநாள் ஆடுதும்; என்ற அணியிழைக்கு, அவ்ஆயிழையாள் பீடன்று என இருந்த பின்னர்" (சிலம்பு: 9: 54-64) என்ற வரிகளைக் காண்க. ஆக, கோவலன் கண்ணகியை அடையும் போது, கண்ணகி யின் எல்லா அணிகளும் தொலைந்து விடவில்லை. அவள் பால், சிலம்பு மட்டுமல்லாமல், பொற்றொடி இருந்திருக் கிறது. ஆராய்ந்து அணியத் தக்க வேறுபிற அணிகளும் இருந்திருக்கின்றன என்பது, தேவந்தி, ஆசிரியர் ஆகிய இருவர் கூற்றால் உறுதியாகிறது.

தன்மனை புகுந்து, தன்வாடிய மேனி கண்டுவருந்தும் கோவலனுக்குக் கண்ணகி பொற்றொடியோடு வேறு சில சிறந்த அணிகளும் அணிந்தே காட்சியளித்துள்ளாள். "தன் பைந்தொடி வாடிய மேனி வருத்தம் கண்டு" என ஆசிரியர் கூறுவதும், "சிலம்புள, கொள்ளுங்கள்" என்ற கண்ணகியை விளிக்கும் கோவலன் "சேயிழை கேள்" என விளித்தலும் காண்க. (சிலம்பு: 9,67-68; 73) ஆக, கோவலன் மாதவியை விடுத்துக் கண்ணகியை அடையும் போது, கண்ணகி, சிலம்பு தவிர்த்த பிற அணிகளை யெல்லாம் அறவே இழந்து விடவில்லை பைந்தொடியும், வேறு சில சிறந்த அணிகளும் அவள்பால் இருந்திருக்கின்றன என்பதை இத்தொடர்கள் உறுதி செய்வது காண்க.

சிலம்பு முதலாக, இழந்த அணிகளோடு பிற செல்வம் ஈட்ட மதுரைக்குப் புறப்பட்ட கோவலன்—கண்ணகியின் பால்; சிலம்பு தவிர்த்த வேறு அணிகள் எதுவுமே இல்லை; சிலம்பை மட்டுமே கொண்டு சென்றனர் எனக் கூறுவது பொருந்துமா?

மதுரைக்குச் செல்லும் தமக்கு வழித்துணையாக வரும் கௌந்தி அடிகளிடம், கண்ணகியை அறிமுகம் செய்து வைக்கும் கோவலன், கண்ணகியைக் கால்களில் பாடகமும், தோளில் கொடிவளையும் அணிந்த கோலத்தில்தான் அறிமுகம் செய்துள்ளான். கண்ணகியின் மென்மைத் தன்மையை உணர்த்தும் வகையில், அவள் அடியின் மென்மைத் தன்மையைக் குறிக்கும் நிலையில், அவ்வடிகளில் பாடகம் கிடந்து அழகு செய்வதைப், "பாடகச் சீறடி பரற்பகை உழவா" என்றும் (சிலம்பு: 10:52)

கௌந்தி அடிகள் துணை கிடைத்தமையால், மனைவியின் துயர் தீர்த்தேன் எனக் கூறும் நிலையில் மனைவியைக் குறிப்பிடும் போது, "தொடிவளைத் தோளி துயர் தீர்த்தேன்" (சிலம்பு: 10:63) எனக் கூறுவதும் காண்க.

வீடுவிட்டுக் காடு புகுந்து அலையும் தன் நிலை கண்டு வருந்தும் கோவலனுக்கு, "இவ்வருத்த நிலையிலும் மனைவியாம் கண்ணகியோடு சேர்ந்தே இருக்கும் பேறு பெற்றனை" என ஆறுதல் கூறும் போதும், "தாயும் நீயே ஆகித் தாங்கு" எனக் கூறிக், கண்ணகியை மாதரி பால் அடைக்கலம் அளிக்கும் நிலையிலும், கௌந்தி அடிகளார்க்கு ஆயிழைகள் அணிந்து நிற்கும் கோலத்திலேயே, கண்ணகி காட்சி அளித்துள்ளாள். "ஆயிழை தன்னொடு பிரியா வாழ்க்கை பெற்றனை" (சிலம்பு: 14: 58-59), "ஆயிழை தனக்குத் தாயும் நீயே ஆகித் தாங்கு" (சிலம்பு :15: 135-136) எனக் கூறும் கௌந்தி அடிகளார் வாக்கினைக் காண்க.

அடிசில் ஆக்குதற்குஆன கலங்களோடுதாம் கொடுத்த கோளிப்பாகல் முதலாம் காய்களையும், மா முதலாம் கனிகளையும், சாலி அரிசியையும் பெற்றுக் கொண்ட கண்ணகியின் கைகளில், கோல்வளை ஒளிவிட்டுக் கிடந்ததையும், அமுதுண்ணும் கோவலன் அருகில் அமர்ந்து உணவு படைக்கும் நிலையில், தம் குல தெய்வமாம் கண்ணனுடனிருக்கும் நப்பின்னையாகக் காட்சி அளித்த கண்ணகியின் தோள்களில் பல்வளைகள் கிடந்து ஒளி விட்டதையும் இடைக்குல மடந்தை மாதரியும் அவள் மகள் ஐயையும் கண்டு களித்துள்ளனர். "சாலி அரிசி தம்பால் பயனொடு கோல்வளை மாதே! கொள்கெனக் கொடுப்ப"—"பூவைப்புதுமலர் வண்ணன் கொல்லோ? நல்லமுதுண்ணும் நம்பி! ஈங்குப் பல்வளைத் தோளியும் பண்டு நம் குலத்துத் தொழுனை ஆற்றினுள் தூமணி

வண்ணனை விழுமம் தீர்த்த விளக்கு கொல்?" (சிலம்பு: 16:27:28; 47-5.) என்ற சிலப்பதிகாரத் தொடர்களைக் காண்க.

தன் கணவனுக்குத் தவறிழைத்த மன்னன் மாநகர் மதுரை. ஆகவே, அம் மதுரையை எரித்து அழித்த கண்ணகி செயல், "கொடிது அன்று" எனப் பாராட்டும் அம்மாநகரத்துப் பெருமனைக் கிழத்தியர்க்குக் கண்ணகி சிறந்த அணிகள் அணிந்தே காட்சி அளித்துள்ளாள். "சிலம்பின் வென்ற சேயிழை நங்கை கொங்கைப் பூசல் கொடிதோ அன்று" (சிலம்பு: 22: 135-136) என்ற அவர் கூற்றில் அவர்கள் கண்ணகியைச் "சேயிழை நங்கை" என்றே குறிப்பிட்டிருப்பது காண்க.

"என் துயர் அறிதியோ?" என்ற வினாவிற்கு, "அறி வேன்" என விடையிறுக்கும் போதும், "மதுரை மாநகரும் அரசும் கேடுறும்' எனப் பண்டே உரைக்கப்பட்டது" என முற்பிறப்பு நிகழ்ச்சி கூறியபோதும், "உன கணவன் கோவலன் முற்பிறப்பில், அரசுபணிபுரிந்த பாதகன் என் போனாவன்" எனக் கண்ணகியின் முற்பிறப்பு வரலாறு கூறும்போதும், அவை கூறிய மதுராபுரித் தெய்வத்தின் முன், கண்ணகி, பசும் பொன்னால் பண்ணப்பட்டுக் கைந் நிறைய அணிந்த தொடிபோலும் அழகிய அணிகள் பல அணிந்தேகாட்சி அளித்துள்ளாள். "அரஞர் எவ்வம் அறிந் தேன் அணி இழாஅய்," "உரைசால் மதுரையோடு அரை கேடுறும் எனும் உரையும் உண்டே, நிரை தொடியோயே!", "முந்தைப் பிறப்பில், பைந்தொடி! கணவன் வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய் வோன்" (சிலம்பு:23:21; 135-136; 152-153) என்ற தொடர் களில், மதுராபுரித் தெய்வம், கண்ணகியை "அணி இழாஅய்", "நிரை தொடியோயே!", "பைந்தொடி என்றே விளித்தல் காண்க.

கொற்றவை வாயிலில் பொற்றொடியைத் தகர்த்து விட்டு, வைகையின் ஒரு கரை கொண்டு சேரர் நாடு அடைந்த போதும், கண்ணகி மேனியில் சிறந்த அணிகள் இருந்ததை, சேரர் கோமான் செங்குட்டுவன், கண்ணகியை "செயிருடன் வந்த இச்சேயிழை" (சிலம்பு:25-1(8) என்ற தொடர் மூலமே குறிப்பிட்டான் எனப் பாடுவதன் மூலம் இளங்கோ அடிகளார் உறுதி செய்துள்ளார்.

கோவலன் பின்னாக, மாதவத்தாட்டி கௌந்தி அடிகளாரோடு ஐயை கோட்டம் அடைந்த கண்ணகியின் காதுகளில் மகரக்குழை கிடந்து ஒளிவிடுவதை, ஆசிரியர் இளங்கோவடிகளார் காண்கிறார். "கோவலன் தன்னொடும் கொடுங்குழை மாதொடும் மாதவத்தாட்டியும் ......ஐயைதன் கோட்டம் அடைந்தனர்" (சிலம்பு:11 205-216) என்ற தொடர்களைக் காண்க.

திங்கள் ஒளியில் மூழ்கியவாறே, காட்டு வழியைக் கடந்து செல்லும்போது, தளர்ச்சி போகக் கணவன் தோளைத் தழுவிக்கொள்ளும் போதும், "நின் கணவன் கள்வனல்லன்! கள்வன் எனச் சொன்ன இவ்வூரை எரியுண்ணும்" என்ற வெய்யோன் உரை கேட்ட அளவே மாநகர் மன்னனிடம் முறை கேட்க, கையில் சிலம்பு ஏந்தி விரையும்போதும், கொலையுண்டு வீழ்ந்து கிடக்கும் கோவலன் கால்களைத் தொழுது இருகைகளாலும்பற்றிக் கொண்டிருக்கும் நிலையிலும், கண்ணகியின் கைகளிலும் தோள்களிலும், வளைகள் கிடந்து ஒளிவிடும் காட்சியை இளங்கோவடிகளார் தொடர்ந்து கண்டு வந்துள்ளார். "தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி" (சிலம்பு : 13 : 33); "என்றனன் வெய்யோன் இலங்கீர் வளைத் தோளி நின்றிலள்; நின்ற சிலம் ..ன்று கையேந்தி" (சிலம்பு : 19—1—2); "அழு ங்கி நிலத்தின் வீழ்ந்து ஆயிழையாள் தன் கணவன் ாழுதகைய திருந்தடியைத் துணை வளைக்கையால்

பற்ற" (சிலம்பு 19: 64-65.) என வரும் தொடர்களில், ஆசிரியர் இளங்கோவடிகளார், "தொடிவளைச்செங்கை", "இலங்கீர் வளைத் தோளி," "துணைவளைக்கை" எனக் கண்ணகியின் வளை அணியை விதந்தோதியிருப்பது காண்க.

மேலே கூறிய இடங்களில் கண்ணகியின் வளையணியைக் கண்ணுற்ற ஆசிரியர், "தீத்திறத்தார் பக்கமே சேர்க" என எரிக்கடவுளுக்கு ஏவலிடும் கண்ணகியின் கைகளில் பொற்றொடி கிடந்து பொலிவுற்ற காட்சியையும் கண்டுள்ளார்: "தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று, காய்த்திய பொற்றொடி ஏவப்புகையழல் மண்டிற்று" (சிலம்பு : 21: 55—56) என்ற தொடரினைக் காண்க.

தன் அழுகுரல் கேட்டு உயிர்த்தெழுந்த கோவலன் அவள் கண்ணீரைத் தன் கையால் துடைத்த போது அழுதேங்கி நிலத்தில் சாயும் அந்நிலையிலும், "கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் ஆகாது" எனப் பாண்டியன் உரைக்கக் கேட்டுச் சினம்மிக்கு, "நற்றிறம் படராக் கொற்றவ!" என விளித்து, "என் கால் சிலம்பில் உள்ளவை மாணிக்கப் பரல்கள்" எனக் கூறும் போதும்; மதுரையை எரியூட்டத் துணிந்து கொங்கையைத் திருகி மதுரை மாநகர் மீது எறிந்த அந்நிலையிலும், பின் தொடர்ந்து வருவதல்லாது முன் வந்து நிற்க மாட்டாது மதுராபுரித் தெய்வமும் அஞ்சும் வண்ணம் சினங் கொண்டு நிற்கும் நிலையிலும், கண்ணகியின் மேனியில் அணி இழைகள் கிடந்து விளங்கப்பெற்றிருந்த காட்சியை இளங்கோவடிகளார் கண்டு வந்துள்ளார். "அழுதேங்கி நிலத்தின் வீழ்ந்து **ஆயிழையாள்**," (சிலம்பு : 19 :64); "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று; வெள்வேல் கொற்றம் காண் என, **ஒள்ளிழை**, நற்றிறம் படராக் கொற்கைவேந்தே. என் கால் பொற் சிலம்பு மணியுடை

அரியே" (சிலம்பு : 20 : 64—67); "மணிமுலையை வட்டித்து விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்" (சிலம்பு : 21 : 54—46); "அலமரு திருமுகத்து ஆயிழை நங்கை தன் முன்னிலை ஈயாள்" (சிலம்பு 23 : 15) — அந் நிலைகளைக் குறிக்கும் இவ்வரிகளில், கண்ணகியை, "ஆயிழையாள்", நன்னிழையாள்", "விளங்கிழையாள்", "ஆயிழை நங்கை" என, அவள் அணிந்திருக்கும் அணிகளோடு தொடர்பு படுத்தியே பாடியிருப்பது காண்க.

சேரன் செங்குட்டுவனுக்கும், இளங்கோ வடிகட்கும் கண்ணகியின் வரலாறு கூறி, அவளுக்குக் கற்கோயிலும், சொற்கோயிலும் எழக்காரணமாக இருந்த சாத்தனார்க்குக் காட்சி அளித்த கண்ணகியும் ஒண்தொடியும், ஆய்தொடியும்,சேயிழையும் அணிந்தேகாட்சிஅளித்துள்ளாள், "தண்டமிழ் ஆசான் சாத்தன் இஃதுரைக்கும்; ஒண்டொடி மாதர்க்கு உற்றதை எல்லாம் திண்டிறல் வேந்தே! செப்பக் கேளாய்; தீவினைச் சிலம்பு காரணமாக ஆய்தொடி அரிவை கணவர்க்கு உற்றதும் வலம்படுதானை மன்னன் முன்னர்ச் சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்" (சிலம்பு : 25:66-72) என்ற தொடர்களைக் காண்க.

ஆக, இதுகாறும் எடுத்துக் காட்டிய சான்றுகளால் சலதியோடு ஆடி, குலம்தருவான் பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு போக்க, மதுரைக்குப் புறப்பட்டு விட்ட பின்னரும், கண்ணகி காதில் குழையும், தோளில் தொடியும், கைகளில் வளையும், காலில் பாடகமும் போலும் பல்வேறு அணிகளை அணிந்திருந்தாள்; ஆயிழை அணிந்த அவள் காட்சியை அவள் கணவன் கோவலனும், அவர்களுக்கு வழித் துணையாக வந்த கௌந்தி அடிகளாரும், அடைக்கலம் அளித்த மாதரியும், அவள் மகள் ஐயையும், மதுரைப் பெருமனைக் கிழத்தியரும்,

மதுராபுரித் தெய்வமும், சேரன் செங்குட்டுவனும், ஆசிரியர் இளங்கோ அடிகளாரும், அவர் நண்பர் சாத்தனாரும் ஆகிய அனைவரும் கண்டு வந்துள்ளனர். ஆகவே, மாதவியோடு உறவு கொண்டு, அவளுக்குக் கொடுத்துக் கொடுத்துச் சிலம்பு ஒழிந்த பிற அணிகளையெல்லாம், கோவலன் இழந்து விட்டான் என்ற கூற்றில் உண்மையில்லை என்பது உறுதியாதல் அறிக.

"சாவதுதான் வாழ்வென்று தானம்பல செய்து
மாசாத்துவான் துறவும் கேட்டாயோ?"

—சிலம்பு : 29 : காவற்பெண்டுரை

கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்ட அவன் தந்தை, உலகவாழ்க்கையை வெறுத்துத் துறவறம் மேற்கொள்வதற்கு முன்னர்த் தன்கண் இருந்த வான் பொருள்களை, மாபெரும் தானமாக அளித்தான் என மாடலமறையோனும், காவற் பெண்டும் கூறுவன, குன்றெனக் குவிந்திருந்த குலச் செல்வத்தைத் தான் தொலைத்து விட்டதாகக் கோவலன் கூறியதன் பின்னரும், மாபெரும் தானம் என மதிக்கத் தகுமளவு வாரி வழங்கத் தக்க வான் பொருள், அவன் தந்தைபால் இருந்தது என்பதை உறுதி செய்கின்றன.

"கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி
மாபெரும் தானமா வான்பொருள் ஈத்து"

—சிலம்பு : 27 : 90-91

காலில் அணியும் அணிகளாகச் சிலம்பு, பாடகம், நூபுரம் போல்வன கூறப்படுமேனும், சிலம்பு மகளிர் மணப் பருவம் அடையும் வரையே அணியப்படும். மண விழாவின் போது, மணவிழா நாளின் முன்சாய நாளன்று,

அது அகற்றப்படும். அந்நிகழ்ச்சியைச் சிலம்புகழி நோன்பு என, மண நிகழ்ச்சிக்கு நிகரான நிகழ்ச்சியாகக் கொண்டு விழாக் கொண்டாடுவர்.

மகளிர் மணம் ஆகாதவர் என்பதை உணர்த்த அவர் காலில் சிலம்பு அணியப்படும்; மணம் ஆன மகளிர், அது அணிவது இல்லை. மணப் பருவம் உற்று ஒருவனைக் காதலித்த நிலையில், பெற்றோர் அதற்கு இசையாமை அறிந்து, அவர் அறியாவாறு காதலன் ஊர் சென்று மணந்து கொள்ளத் துணிபவள், மனைவிட்டு நீங்குங் கால், சிலம்பைக் கழற்றித் தாய்வீட்டில் வைத்துவிட்டே செல்வள். மணம், மணமகள் வீட்டில் நிகழ்வது இயல்பு: மாறாக, அது மணமகன் வீட்டில் நிகழுமாயினும், அந் நிலையிலும், சிலம்புகழி நோன்பைத் தம் வீட்டில் நிகழ்த் தவே தாய்மார் விரும்புவர்.

பெற்றுப் பேரன்பு காட்டி வளர்த்த அன்னையும் மறந்து போகுமளவு வன்கண்ணளாகிவிட்ட தன் மகள் சிலம்பைக் கழற்றிப் பிறந்தகத்தே வைத்துவிட்டு, முன் பின் அறியானாகிய காதலனுடன் அவனூர் சென்றுவிட் டது கொடுமையினும் கொடுமை எனக் கண்ணீர் விடும் அகநானூற்றுத் தாயின் கூற்றிலும், ("சிறு வன்கண்ணி சிலம்பு கழிஇ, அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே" —அகம்: 385)-சிலம்புகழி நோன்பாம் சிறப்பினைத் தான் கண்டு மகிழ்வதற்கு வாய்ப்பளிக்காது, பிறர் கண்டு மகிழத், தன்னை விட்டுப் போய் விட்ட தன் ஆயிழை மகளை நினைந்து அழும் நற்றிணைத் தாயின் கூற்றிலும் ("சிலம்பு கழீஇய செல்வம், பிறர் உணக்கழிந்த என் ஆயிழை"—(நற்றிணை: 279), காதலனுடன் சென்று விட்ட தன் மகளின் காற்சிலம்பு அகற்றும் விழாவினை, அக்காதலன் தாய், அவள் மனையிடத்தே கொண்டாடிய செய்தி கேட்டு, சிலம்புகழி நோன்பு என் மனையில்

நிகழ்ந்திருக்க வேண்டும். அதை உங்கள் மனையகத்தே நிகழ்த்திக் கொண்டீர்கள். மண விழாவினையாவது எங்கள் மனையில் நிகழ வழி விடுங்கள் என வேண்டும் ஐங்குறுநூற்றுத் தாயின் கூற்றிலும் ("நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும், எம்மனை வதுவை நன்மணம் கழிக" —ஐங்குறு. 399) சிலம்புகழி நோன்பின் சிறப்பு மிளிர்வது காண்க.

ஆகவே, சிலம்பு, மணமான மகளிர் அணியப்படா நிலையில், வீட்டில் வீணே இருக்கும் ஓர் அணிகலன்; ஆகவே, தன்பால் வேறு பல அணிகள் இருக்கவும், அவை யெல்லாம் அணியத் தக்கன ஆகவே, அவற்றுள் எதுவும் தராது, வீணே இருக்கும் சிலம்பினைக் கொடுக்க முன் வந்தாள், கண்ணகி.

மாதவி, கோவலன் அன்புக்கு ஏங்கியவளே யல்லாது, அவன் மாநிதியைக் கருத்தில் கொண்டவள் அல்லள்!

மாதவியின் குறிக்கோள் எல்லாம், தன் உறவு கொள்ள விரும்புவான் கொண்டு வந்து கொட்டும் பொற்குவியல் மீதேயல்லாது, அவன் காட்டும் அன்பின் மீது அன்று, எனக் குற்றம் சாட்டி, அதற்கு ஆதாரமாக, அரசன் முன் ஆடிப் பெற்ற மாலைக்கு ஆயிரத்து எட்டுக் கழஞ்சுபொன் விலை வைத்து, அதை வாங்கத் தக்கவரே, அவளை அடையத்தக்கவர் எனக்கூறி நகரத்துச் செல்வக் குடியில் பிறந்த இளைஞர்கள் திரியும் தெருவில்கொண்டு போய் விற்கமுனைந்த செயலைச் சான்றாகக் காட்டுவர்

“ நூறு பத்தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவது இம்மாலை;
மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு என
மானமர் நோக்கியோர் கூனி கைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த ”

—சிலம்பு: அரங்கேற்றுகாதை: 164-169

அவ்வாறு விலை கூறி விற்க முனைந்தது உண்மை; ஆனால் அது செய்தவள், மாதவி அல்லள்; மாறாகப் பரத்தையர் தொழில் மூலம் பொருள் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்ட அவள் தாய் சித்திராபதி.

மேலும் மாதவி, கோவலன் காட்டும் அன்பில் நாட்டம் உடையவளே அல்லாது, அவன் கொண்டு வந்து

கொட்டும் பொருளில் நாட்டம் உடையவள் அல்லள் என்பதை உறுதி செய்யும் வலுவான அகச்சான்று, மணி மேகலைக் காப்பியத்தில் உளது.

மாதவி காதலனாம் கோவலன், மாநிலம் முழுதாளும் மன்னன் நிகர் மாநிதிக் கிழவன் மகனேயாயினும், அவன் மன்னன் அல்லன். ஆனால், அம்மாதவி ஈன்ற மணி மேகலைபால் மனதைப் பறி கொடுத்தவன், மாநிலம் முழுதாளும் மன்னன் மகன். இதை மாதவி அறிவாள். அவ்வுண்மையை அவளுக்கு, அவள் தோழி வசந்தமாலை அறிவித்திருந்தாள். மன்னன் மகன், தன் மீது தணியாக் காதல் கொண்டுள்ளான் என்பதைத், தன் தாய்க்கு, வசந்தமாலை அறிவித்ததை, மணிமேகலை தன் காது களாலேயே கேட்டறிந்துள்ளாள்.

"சித்திராபதியோடு உதயகுமரன் உற்று
என்மேல் வைத்த உள்ளத்தான் என
வயந்தமாலை மாதவிக்கு ஒருநாள்
கிளந்த மாற்றம் கேட்டேன்"

என, அவளே கூறுவது காண்க. [மணிமேகலை: 4 பளிக் கறை புக்க காதை: 79-82]

மகள் மீது, மன்னன் மகனே மனதைப் பறி கொடுத் துள்ளான்; அவனுக்குத் துணை நிற்க, தன் தாய் சித்திரா பதியும் முனைந்துள்ளாள். இந்நிலையில் தன் மனையில் பொன் கொழிப்பதே மாதவியின் குறிக்கோளாய் இருந் திருக்குமாயின், தாயின் முயற்சிக்குப் பச்சைக் கொடி காட்டியிருப்பாள் மாதவி. ஆனால், அவள் அது செய் திலள். மாறாக—

"மகள் மணிமேகலை,
அருந்தவப் படுத்தல் அல்லது, யாவதும்
திருந்தாச் செய்கைத் தீந்தொழில் படாஅள்,
சித்திரா பதிக்கும் செப்பு நீ"

எனக் கூறியதோடு (மணிமேகலை: ஊரவர் உரைத்த காதை: 55-71) நில்லாமல், மணிமேகலையைப் பரத்தையர் ஒழுக்கத்திற்குப் பலியாக்காது, அவள் கூந்தலை, அதில் சூட்டிய மாலையோடு மழித்துப் புத்தன் நெறியில் புகுத்துவதும் செய்து முடித்தாள்.

"மணிமேகலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணாது ஒழிகெனக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்து அறங்கொள்ளவும்"
—சிலம்பு: நீர்ப்படைக் காதை:105-108

கோவலன் அன்புக்கு ஏங்கி, அதற்கு வழி இல்லாமல்-போய்விட்டது என அறிந்ததுமே, அறவண அடிகள் அறவுரை கேட்டுத் தான் துறவு மேற்கொண்டதோடு அமையாது, கன்னி கழியாக் காதல் மகளின் கோதையையும், குழலையும் களைந்து துறவு மேற்கொளப் பண்ணிய மாதவி, கோவலனின் மாநிதி மீதே குறியாக இருந்தாள் எனல் பொருந்துமோ?

மாதவியைக் கோவலன் மன்னித்து விட்டான்; ஆனால், கண்ணகி மன்னிக்கவில்லை! கண்ணகி தென்னவனை மன்னித்து விட்டாள்; ஆனால், மாதவியை மன்னிக்கவில்லை!

தன் கணவனை ஆராயாதே, கள்வன் எனக் குற்றம் சாட்டிக் கொன்றவன் தென்னவன்; இருந்தும் அது மன்னித்து, "தென்னவன் தீதிலன்; தேவர் கோன் தன் கோயில் நல்விருந்து ஆயினான்; நான் அவன் தன் மகள்" (வாழ்த்துக் காதை) என அவனைத் தந்தையாகவும் கொண்டாள் கண்ணகி.

கண்ணகியைக் "குலப்பிறப்பாட்டி." (புறஞ்சேரி இறுத்த காதை: 89) என்றும், "மாபெரும் பத்தினி" (மணிமேகலை: 2:55) என்றும் பாராட்டியவள் மாதவி. மேலும், கோவலனுக்கு நேர்ந்தது கேட்டுத் தான் துறவு பூண்டதோடு, தான் ஈன்ற மகள் மணிமேகலையைக் கண்ணகி மகளாகவே மதித்து, அதனால், அம்மகள், தன்னைப் போல் பரத்தையர் தொழில் மேற்கோடல் கூடாது என உணர்ந்து, "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும் திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்" (மணி மேகலை: 2:55-57) எனத் தன் வாயால் விளங்கக் கூறித் தன் மகளையும் துறவு பூணச் செய்தவள் மாதவி. "மாதவி மடந்தை நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன் மணிமேகலையை வான்துயர் உறுக்கும் கணிகையர்

கோலம் காணாது ஒழிக எனக் கோதைத் தாமம் குழலொடு களைந்து போதித்தானம் புரிந்து அறங் கொள்ளவும்'' (சிலம்பு 27 : 103-108] என மாடல மறையோன் செங்குட்டுவனுக்குக் கூறுவது காண்க.

கோவலன் கொலைக்குக் காரணமான தென்னவனைத் "தீதிலன்" என்று கூறிய கண்ணகி, கோவலன் கொலைக்கு மாதவி பாடிய கானல்வரியே காரணம் என மாதவி குறித்து, உலகோர் கூறும் பழியுரையை மறுத்து அவள் தீதிலள் எனக் கூறவில்லை. ஆகவே, மாதவி குற்றம் உடையவளே என வாதிடுவர் சிலர்.

ஒரு வழக்கில் தொடக்க நிலையில் உண்மைகளை உள்ளவாறு உணர்ந்து கொள்ளாதே, ஒரு தவறான தீர்ப்பினை வழங்கி விட்ட ஒரு நடுவர், பின்னர் உண்மையை உணர்ந்து கொள்ளும் சூழ்நிலை வாய்த்து விட்டதும், தான், முன்பு வழங்கிவிட்ட தவறான தீர்ப் பினை மறுத்து, நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுவது இன்றி யமையாதது. அத்தகைய நிலை, சிலப்பதிகாரப் பாத்திரங்களில் மூவருக்கு ஏற்பட்டு விட்டது.

கானல்வரி பாடுங்கால், கோவலன் உள்ளத்தில் எவ்விதக் குறிப்பும் கொண்டிலன் என்பதும், மாதவி தன் ...ரம் மகிழவே பாடினான் என்பதும், உண்மையாகவே ...நக்கலாம். ஆனால், அவன் பாடிய கானல் வரிகளின் ...ப்பொருள், ஓரிளம் பெண்ணின்பால் காதல்கொண்டு ...த்திழந்து நிற்கும் ஓர் இளைஞன் கூற்றாக அமைந்து ...ட்டது என்பதை மறுக்க இயலாது. அப்பொருள் ...ாணிக்கப் பாடிவிட்ட அவன், அப்பாடல் கேட்டு, மாதவி ...ன் பாடிய வரிப்பாடல்களில், ஓரிளைஞன்பால் காதல் ...ாண்டு கருத்திழந்து நிற்பாளோர் இளம் பெண்ணின் ...றையே கருப்பொருளாக ஏற்றிப் பாடி முடித்த நிலை

யில், அவளை அவ்வாறு பாடச் செய்தது தன் பாக்களின் கருப் பொருளே; அது கேட்கும் எந்தப் பெண்ணின் உள்ளத்திலும் அத்தகைய உணர்வுதான் எழும். ஆகவே, தவறு தன்னுடையதே என எண்ணித் தன் பிழைக்குத் தான் இரங்க வேண்டுவது விடுத்து, "மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்" [கானல்வரி: 52] எனச் சிந்தியாதே குற்றம் சாட்டி விட்டான்.

அடுத்து, கானல்வரி பாடிய அன்று மாலை, மாதவி வசந்தமாலைவழி விடுத்த அழைப்புக் கடிதத்தைக் கையால் தொடுவதும் செய்யாததன் மூலம், அவள் முடங்கலைக் கண் திறந்து பார்க்க வேண்டும்; அதில் அவள் செய்திருக்கும் முறையீட்டினைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் இலனாகி, மாதவியின் அன்பில் ஐயுறவு கொள்ளாத நிலையில், அவள் ஆடிக் காட்டிய கண் கூடு வரி முதலாக எடுத்துக் கோள்வரி ஈறாகப்பல்வேறு வரிக்கூத்துக்களைத் தான் கண்டு மகிழவே அவள் ஆடியதாகக் கொண்டு மகிழ்ந்தவன், இப்போது, அவ்வரிக் கூத்துக்கள், "ஆடல் மகளே ஆதலின், ஆயிழை! பாடு பெற்றன அப்பைந்தொடி தமக்கு" [வேனிற் காதை:110] எனக் கூறிப் பழித்துரைத்ததன் மூலம், தவறான தீர்ப்பினை இரண்டாவது முறையாகவும் வழங்கி விட்டான்.

அந்த அளவோடு நிற்கவில்லை. தன் மனை புகுந்து கண்ணகியின் வாடிய மேனியையும், அதற்குக் காரணமாம் அவள் வருத்தநிலையையும், கண்ணுற்ற கோவலன், அவை குறித்தோ, அவற்றிற்குக் காரணமாவார் இன்னார் என்றோ வாய் திறந்து கண்ணகி கூறாதிருக்கவும், "சலம்புணர் கொள்கைச் சலதி" என மாதவியைப் பழித்து உரைத்ததோடு, "அவளோடு ஆடிக் குலம்தரும் வான் பொருள் குன்றம் தொலைந்தது" [கனாத்திறப்

உரைத்த காதை : 69-70] எனத் தன் வறுமை நிலைக்கு அவளே காரணம் என அவள் மீது குற்றம் சாட்டி மூன்றாவது முறையாகவும் தீர்ப்பு வழங்கிவிட்டான்.

இவ்வாறு ஒரு முறைக்கு மும்முறை, குற்றம் மாதவியதே எனத் தீர்ப்பு வழங்கிவிட்ட நிலையில், மதுரைப் புறஞ்சேரி சென்று புகு முன்னர், இடைவழியில், ஒருபுரி நூல் மார்பர் உறைபதிக்கண் இருந்தபோது, தன்னைத் தனிமையில் சந்தித்த கோசிகமாணி, கோவலனும், கண்ணகியும் புகார் நகர்விட்டுப் போய்விட்டது அறிந்து, மாசாத்துவான் உள்ளிட்ட அம்மாநகரத்து மாந்தர் உற்ற மாளாத் துயர் நிலை கேட்டு, மாதவி செயலிழந்து வீழ்ந்து விட்டதையும், அவளைக் காணச் சென்ற தன் தாள் பணிந்து, கோவலன்பால் சென்று சேர்க்குமாறு வேண்டித் தன் கை இது கொடுத்தாள் எனக்கூறி, அவன் கொடுத்த அவள் கடிதத்தில் குற்றத்தின் நீங்கிய அறிவினையுடையராகவும், தூய உள்ளம் உடையராகவும் இருந்து நடந்துவிட்டனவற்றை ஆராய்ந்து நோக்கினால், தவறு என்பால் இல்லை என்பதைத் தெற்றென உணரலாம். அத்தகு நிலைநின்று நோக்குதல் வேண்டும் என்பதைக் கூறாமல் கூறுவாள் போல், தன்னைப் "பொய் தீர்காட்சிப் புரையோய்" என விளித்தவள், அதில் அவனைப் பற்றி ஏதும் கூறிக் கொள்ளாமல், குரவர்பணி ஆற்ற வேண்டிய தன் கடமையை ஆற்றத் தவற நேர்ந்து விட்டதற்கும், மனைப்புறம் போந்து அறியா மனையாளைக் காட்டு வழியில்—அதிலும் கொடிய காரிருளில் கொண்டு செல்ல நேர்ந்து விட்டதற்கும் வருந்தி, அக் கொடுஞ்செயலுக்கு அவள் காரணமாகாள் என்பதை அவள் உள்மனம் உறுதியாகக் கூறுவதால், அக் கொடுமைக்கு யாதுதான் காரணம் என்பதை அறிந்து கொள்ளத் துடிக்கும் அவள் உள்ள நிலையை உணர்த்தி,

இறுதியாக, ஒருவேளை அதற்கு அவள் காரணமாயிருந்திருப்பளாயின், அதை மன்னித்தருள வேண்டும் என்ற வேண்டுகோளை—"குரவர் பணி அன்றியும், குலப்பிறப்பாட்டியொடு இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு? அறியாது கையறும் நெஞ்சம்; கடியல் வேண்டும். பொய்தீர் காட்சிப் புரையோய்!"—விடுத்திருக்கக் கண்ணுற்றதும், கோவலன் உண்மையை உணர்ந்து கொண்டான். அவள் தீது அற்றவள்; தீது எல்லாம் தன்னுடையதே என்ற தெளிவான முடிவிற்கு வந்து விட்டான்; அதனால், ஒருமுறைக்கு மும்முறை அவள் மீது குற்றம் சாட்டித் தவறான தீர்ப்பு வழங்கிவிட்ட தன் செயலுக்குக் கழுவாய் தேட, ஒரு நல்ல தீர்ப்பு வழங்க வேண்டிய கட்டாயம் அவனுக்கு நேர்ந்து விட்டது. அதனால், "தன் தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி, என் தீது என்றே எய்தியது உணர்ந்து" என்ற வரிகளி "தவறு செய்தவன் நானே, அவள் தவறினாள் அல்லள் என்ற தீர்ப்பை வழங்கினான்.

"கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்...என் சில்லை சிறுகுடில் அகத்திருந்தோன்" [கொலைக்களக் காதை 145-146] எனப் பொற்கொல்லன் கூறியதுமே, அவ கூற்றின் உண்மை அன்மைகளை ஆராய்ந்து நோக்காமே "சிலம்பு கன்றிய கள்வன் கையதாயின் கொன்றுஅச் சிலம் கொணர்க ஈங்கு" (கொலைக்களக்காதை: 151-153) என பணித்துக் கொலைத் தண்டம் விதித்து விட்டதன் மூல ஒரு தவறான தீர்ப்பினைத் தொடக்கத்தில் வழங்கிவிட மையால், பின்னர்க் கண்ணகி தன் அரசவை வந்து, க சிலம்பு கொண்டு, கோவலன் கள்வனல்லன் என்ப நாட்டிவிட்டதும், ஆராயாது தீர்ப்பு அளித்துவிட்ட த குற்றத்திற்குக் கழுவாய் தேடிக் கொள்ள வேண் கட்டாயம், தென்னவனுக்கு நேர்ந்துவிடவே, "பொன்செ

கொல்லன் தன் சொல்கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்...கெடுக என் ஆயுள்!" (வழக்குரைகாதை:74-77) எனத் தனக்குத் தானே கொலைத் தண்டம் விதித்துக் கொண்டு உயிர் விட்டு மறுதீர்ப்பு-நல்ல தீர்ப்பு வழங்கினான்.

கோப்பெருந்தேவியின் காலணியைக் களவாடினான் எனக் குற்றம் சாட்டித் தன் கணவனுக்குக் கொலைத் தண்டம் கொடுத்துத் தென்னவன் தீர்ப்பு வழங்கிய கொடுமையைத் தன் கண்களால் கண்டு, தன் காதுகளால் கேட்டு அறிந்துகொள்ளும் வாய்ப்பு கண்ணகிக்கு வாய்க்கவில்லை என்றாலும், அது செய்தான் தென்னவன் என்பதைப் புறநகர்ப் போய் அஃது அறிந்து வந்தார் வாய்க் கேட்டு அறிந்து கொண்டாள் கண்ணகி.

"அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள் கொலைகுறித் தனரே"
துன்பமாலை:25-28

எனக் கூறிக் கொலைக் குற்றம் செய்த குற்றத்திற்கு உள்ளானவன் தென்னவர் கோனே எனத் தெளிவாகக் கூறி வைத்தனர் அவர்கள்.

அவர்கள் அது சொல்லவே, தென்னவன் குற்றம் புரிந்தவன் என்ற முடிவினைக் கண்ணகியும் கொண்டு விட்டாள்; அதனால், "**மன்னவன் தவறு இழைப்ப** அன்பனை இழந்தேன்"—"**செம்மையின் இகந்த கோல் தென்னவன்**" (துன்பமாலை: 36, 44)—"**முறையில் அரசன்** தன் ஊர்"—"பார் மிகுபழிதூற்றப் **பாண்டியன் தவறு இழைப்ப,**" "மன்பதைபழிதூற்ற **மன்னவன்** தவறிழைப்ப," "**வைவாளின் தப்பிய மன்னவன்** கூடல்", "**தீவேந்தன்** தனைக்கண்டு

இத்திறம் கேட்பல்" (ஊர்சூழ்வரி: 3, 45, 49, 58, 71), "**அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன்** வாயிலோயே!" (வழக்குரை காதை: 25-26) என்றெல்லாம் கூறித் தவறுபுரிந்து விட்டான் தென்னவன் எனத் தெளிவான தீர்ப்பை வழங்கி விட்டாள் கண்ணகி.

அம்மட்டோ? கள்வனைக் கொல்வது கடுங்கோலாகாது, அதுதான் அரச நீதி—"கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று; வெள்வேல் கொற்றம் காண்"—எனத் தென்னவன் கூறக் கேட்டதுமே "**நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!**" (வழக்குரைகாதை: 64- 6) என அவனை முன்னிலைப் படுத்தி, நேருக்கு நேராகவே தீர்ப்பு வழங்கி விட்டாள்.

இவ்வாறெல்லாம் தீர்ப்பு வழங்கி விட்ட காரணத்தால், அவள் அரசவை புகுந்து, கணவன் கள்வனல்லன் என்பதைக் காற்சிலம்பு கொண்டு நாட்டி விட்டதும், "குற்றம் புரியாதவனுக்குக் கொலைத்தண்டம் கொடுத்து விட்டேனே!" என்ற குற்ற உணர்வு உள்ளத்தை உருக் குலைக்கவே, அந்நிலையே உயிர் விட்ட தென்னவன் செங்கோல் நலத்தை நேரில் கண்டும், தன் கணவனுக்குத் தவறு இழைத்த தென்னவன் மட்டுமேயல்லாமல், அவன் பிறந்த தென்னவர் குடியே குற்றம் புரியாப் பெருமையுடையது என்பதைக், கீரந்தை மனைவி, வார்த்திகன் மனைவி ஆகியோர் வரலாறுகள் மூலமாக விளக்கி, முடிந்த முடிபாகத், தென்னவர், "மறை நா ஓசை அல்லது யாவதும் மணிநா ஓசை கேட்டதும் இலனே; அடி தொழுது இறைஞ்சா மன்னர் அல்லது குடிபழிதூற்றும் கோலனும் அல்லன்" (கட்டுரை காதை: 31-34) என மதுராபுரித் தெய்வம் கூறக் கேட்டுத் தென்னவன் தீதிலன் என்பதை உணர்ந்து கொண்டமையால், இவ்வுண்மையினை உணர்ந்துகொள்ள இயலாதநிலையில்,

குற்றம் புரிந்து விட்டான் தென்னவன் எனத் தான் அளித்துவிட்ட தவறான தீர்ப்பை மறுத்து நல்ல தீர்ப்பு வழங்கவேண்டிய இன்றியமையாக் கடமை-ஆராயாதே தீர்ப்பு வழங்கிவிட்ட தன் தவறுக்குக் கழுவாய் தேட வேண்டிய கட்டாயம்-கண்ணகிக்கு நேர்ந்து விட்டது. அதனால், "தென்னவன் தீது இலன்; தேவர் கோன் தன் கோயில் நல்விருந்து ஆயினான்: நான் அவன்தன் மகள்" (வாழ்த்துக்காதை) என்ற தெளிவான தீர்ப்பை வழங்கினாள்.

தென்னவன் பொருட்டு, அத்தகைய தீர்ப்புஅளிக்க வேண்டி நேரிட்டது போன்ற நெருக்கடி, மாதவியைப் பொறுத்தவரையில் கண்ணகிக்கு வாய்க்கவில்லை. தவறு மாதவியினுடையது என்ற தவறான தீர்ப்பினை ஆராயாதே வழங்கிவிட்டுப் பின்னர், உண்மை தெளிந்து, "அவள் தீது இலள்" என மறு தீர்ப்பு வழங்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்ட கோவலன் நிலையும் கண்ணகிக்கு நேரவில்லை.

மாதவியைச் "சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக் குலம் தரு வான் பொருள் குன்றம் தொலைந்த இலம்பாடு" (கனாத்திறம் உரைத்த காதை: 69-71) எனக் கண்ணகி எதிரில் குற்றம் சாட்டியவன், புகார் நகரை விட்டுப் புறப்பட்டு,காட்டுவழியெல்லாம் கடந்து சென்று புறஞ்சேரியில் இருந்தபோது கோசிகமாணி, புகார் நகரத்து நிகழ்ச்சிகளை யெல்லாம் விளக்கி விட்டுக் கொடுத்த மாதவியின் கடிதத்தைக் கண்ணுற்ற பின்னரே, மாதவி குற்றமற்றவள் என்பதை உணர்ந்து கொண்டு, "தன் தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி என் தீது என்றே எய்தியது உணர்ந்து" (புறஞ்சேரி

இறுத்த காதை 94-95) என்று கூறி, மாதவி குற்றம் அற்ற வள் என்பதை ஏற்றுக் கொண்டான்.

மாதவியொடு பல்லாண்டு பழகி, அவள் பண்பு நல னெல்லாம் உணர்ந்திருந்த அவனுக்கு, அவள் தீதற்றவள் என்பதை உணர்ந்து கொள்ள, அவ்வளவு நாட்கள் தேவைப்பட்டன; கோசிகமாணியின் துணையும் வேண்டி யிருந்தது.

தன் கணவன் மாதவியோடு உறவு கொண்டு உலா வந்த ஊரிலேயே வாழ்ந்திருந்தவள் தான் கண்ணகி. ஆனால், மாதவியைக் கண்ணாலும் கண்டறியாதவள். ஆயினும், கணவன் தன்னைப் பிரிந்து, மாதவியோடு இருப்பதற்கு, இம்மாதவி காரணமாகாள்; அக்குற்றம் புரிபவன் தன் கணவன் கோவலனே என்பதைத் தெளி வாக உணர்ந்திருந்தாள். அதனால்தான் மாதவியைப் பிரிந்து, தன் மனை புகுந்த கோவலன், மாதவியைச் "சலதி" என்றும் "அவளோடு ஆடி வான் பொருள் தொலைத்தேன்" என்றும் கூறிய அவன் கூற்றை ஏற்றுக் கொண்டாள் அல்லள். மாறாக, அது பரத்தையர் தொடர்புடைய ஆடவர் கூறும் வழக்கமான சொல்; மனைவியர் முன்... பரத்தையரைப் பழித்தால் மனை வியர் மகிழ்ந்து போவர் என்ற பேதைமை காரணமாகக் கூறும் பொய்யுரை; அதில் உண்மை இல்லை என்றே கொண்டாள். அதை உணர்த்தவே, அவன் சொல் கேட்டுச் சிறிதே நகை காட்டினாள். "நலங்கேழ் முறுவல் நகைமுகம் காட்டி"...(கனாத்திறம் உரைத்த காதை.72)

நகை, எட்டு நிலைகளில் தோன்றும்; 1. பிறரைத் தான் எள்ளும்போது, 2. பிறர் தன்னை எள்ளும்போது,

3. தன் இளமை காரணமாகப் பிறரை நகைத்தல், 4. பிறர் இளமையால் தன்னைக் கண்டு நகைத்தல், 5. தன் பேதைமை காரணமாக நகைத்தல், 6. பிறர் பேதைமையைக் கண்ட வழித் தான் நகைத்தல், 7. தன் மடமை காரணமாக நகைத்தல், 8. பிறர் மடமை கண்டு நகைத்தல் என்பன அவை. "எள்ளல், இளமை, பேதைமை, மடன் என உள்ளப்பட்ட நகை நான்கு என்ப" என்பது தொல்காப்பிய விதி.

[தொல் : பொருள் : மெய்ப்பாட்டியல் : 4]

கண்ணகி நகைத்தநகை, இவ்வெட்டனுள், கோவலன் பேதைமை கண்டு நகைத்த நகையாகும்.

குற்றம் புரிந்தவள் மாதவி என்ற எண்ணம் கண்ணகிக்கு என்றுமே உண்டானது இல்லை. "மாதவி தீது இலள்; தீது என்னதே" எனக் கோவலன் புறஞ்சேரியில் உணர்ந்து கொண்ட உண்மையைக் கண்ணகி தொடக்கத்திலிருந்தே உணர்ந்து வந்தாள். அதனால்தான், மனை புகுந்து தன் முன் வந்து நின்றதுமே, கோவலன் மாதவியைக் குற்றம் சாட்டிய போது, அதை ஏற்றுக் கொள்ளாததை நகைத்தே உணர்த்தி விட்டாள்.

மாதவி குற்றம் அற்றவள் என்ற தீர்ப்பை, இவ்வகையால், புகார் நகரை விட்டுப் புறப்படுவதற்கு முன்பே வழங்கிவிட்ட காரணத்தால், அத்தகைய தீர்ப்பை, மறுபடியும் வழங்க வேண்டிய கட்டாயம், அவளுக்கு நேரவில்லை; ஆகவேதான், வஞ்சி மாநகர் புகுந்து வழிபடும் தெய்வமாகி விட்ட நிலையில், மாதவி குறித்து அவள் ஏதும் கூறினாள் அல்லள்.

ஆகவே, கோவலனாலும் மன்னிக்கப்பட்ட மாதவியைக் கண்ணகி மன்னித்து ஒரு சொல் கூறவில்லை. ஆகவே மாதவி குற்றம் உடையவளே என்றும், தென்னவனை மன்னித்துத் தீர்ப்பு வழங்கிய கண்ணகி, மாதவி குறித்து அத்தகைய தீர்ப்பு வழங்கவில்லை; ஆகவே, மாதவி குற்றம் உடையவளே என்றும், திரும்பத் திரும்ப எடுத்து வைக்கும் வாதத்தில் வலுவில்லை.

அது மட்டுமன்று; கண்ணகி மாதவியை மன்னிக்க வேண்டிய தேவை எழவில்லை. குற்றம் நிகழ்ந்து விட்டது என்ற நிலை ஏற்படும்போதுதான் மன்னிப்புக்குத் தேவை ஏற்படுகிறது. தவறு செய்து விட்டார் எனக் கொண்டு, ஒருவர் மீது குற்றம் சாட்டும் நிலை எழுந்து விட்ட பின்னரே, அவரை மன்னிக்கும் சூழ்நிலை உருவாகிறது. குற்றம் புரிந்து விட்டாள் மாதவி எனக் கண்ணகி கருதியிருந்தால்தான், மாதவியைக் கண்ணகி மன்னிக்க நேரிட்டிருக்கும். ஆனால், கண்ணகியோ மாதவி மீது குற்றம் கண்டு கோபம் கொள்ளவே இல்லை. ஆகவே, மாதவியைக் கண்ணகி மன்னிக்கும் பேச்சுக்கே இடம் இல்லை. கண்ணகி மாதவியைக் கோபித்துக் கொள்ளவில்லை என்பதைக் கண்ணகியைப் பிள்ளைப் பருவத்தில் பேணி வளர்த்த செவிலித்தாயாம் காவற் பெண்டே உறுதி செய்துள்ளாள்.

"மடம்படு சாயலாள் மாதவிதன்னைக்
கடம்படாள்; காதற் கணவன் கைப்பற்றிக்,
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெரும் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்!
தண்புகார்ப் பாவைக்குத் தாயர் நான் கண்டீர்!"

— வாழ்த்துக் காதை.

காவற்பெண்டின் இவ்வாக்கு மூலம் காண்க. "மாதவி தன்னைக் கடம்படாள்" [கடம்படுதல் : கோபித்துக் கொள்ளுதல்] என அறுதியிட்டுக் கூறி விட்டாள் அவள். ஆக, மாதவியைக் கண்ணகி மன்னிக்கவில்லை; ஆகவே மாதவி குற்றம் உடையவளே என்ற குற்றச் சாட்டு இதனாலும் வலுவற்றுப் போவது காண்க.